The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : The matter is still under investigation by the Police.

General Elections 1962.

* 1654 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have made any proposals to the Election Commission regarding the programme for holding the General Elections during 1962 in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No concrete proposals have been made to the Election Commission regarding the actual programme for holding the General Elections in this State. The Election Commission has, however, been informed that, as far as Madras State is concerned, the first week of March 1962 is the most convenient and suitable period for holding the General Elections and that failing the first week, the second week of March

1962 is preferred. I may add that I am sure the hon. Members would have noticed that February 22 to 28 have been fixed as the dates for holding the General Elections.

Dredger " Tuticorin "

* 1655 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மரா 9 00
மத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் a,m.
பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடித் துறைமுகச் சபையிடம் உள்ள " **Tuticorin** " என்னும் தூர்வாரிக் கப்பல் 1959-ல் பாம்பன் வாய்க்காலை ஆழப்படுத்திக் கொண்டிருக்கையிலும் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி " மல்லன் தீவு" என்பதற்கு அருகில் சேற்றினம் கொட்டுவதற்காகச் செல்கையிலும் சேதமடைந்ததா ?

(இ) அதை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தாருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ?

(உ) அது சம்பந்தமாக விசாரணை ஏதேனும் நடத்தப்பட்டதா ? அப்படியானால், அதன் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகள் யாவை ?

(எ) அதற்குப் பொறுப்பானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir. But the second accident took place on 12th May 1960 and not on 12th June 1960.

(*b*) The cost of repairs due to the first accident on 21st March 1959 was Rs. 4,420. This amount has been recovered from the Insurers. The cost of repairs due to the second incident is Rs. 29,760.

(*c*) & (*d*) Yes, Sir. In regard to the first accident it was held that it was an accident of the sea and that nobody could be held responsible. As regards the second accident after conducting an enquiry the Mate of the Dredger was censured as he was held responsible for the accident due to carelessness and neglect of duty.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பம் என்ன ? இதனால் எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டன ? இதை விசாரித்த அதிகாரி யார் ?

THE HON. SRI P. KAKKAN : பாம்பன் கால்வாயில் போக்குவரத்து இருந்த இடத்தில் 12 அடி ஆழம் இருந்தது. அதன் பின்னால் மணல்கரை சானல் இருக்கிறது. இது ஆழமாக இருந்திருக்க வேண்டும். அதில் மணல் மேடாக இருந்ததினால் இந்தக் கப்பல் போகும் போது சகதியில் மோதி இந்த சேதம் ஏற்பட்டது. அதோடு திரும்பும் போதும் ஓர் இடத்தில் மோதியது, அதன் காரணமாகவும் சேதம் ஏற்பட்டது. இதற்காக 29 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்பட்டது. இதை மத்திய சர்க்கார் விசாரித்து, போர்ட் ஆபீஸர் மூலமாக வார்னிங் கொடுத்தார்கள்.

Panchayat (Tambaram)

* 1656 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to upgrade Tambaram Panchayat into a municipality?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir.

SRI A. A. RASHEED : May I know when the municipality will be formed and also is it a fact that this panchayat conforms to all the requirements of a municipality?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : It is only after considering whether its population and income are enough for the purpose of forming a municipality, the Tambaram Panchayat has

[20th September 1961

now been called upon to show cause why the Tambaram Town Panchayat should not be constituted into a municipality from 1st October 1961 . Further action will be taken after the receipt of the reply.

Encroachment near Meenakshi Mills, Madurai.

*1657 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (On behalf of **SRI N. R. THIAGARAJAN) :** கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை-திருப்பரங்குன்றம் ரோடில் உள்ள மீனாக்ஷி மில்லுக்கு முன் ஹைவேஸ் ரோடை , ஆக்கிரமித்து காம்பவுண்டு போட்டிருப்பது ஹைவேஸ் இலாகாவுக்குத் தெரியுமா ?

(இ) அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Eviction orders were issued by the Revenue authorities but the High Court has granted an order of injunction restraining the Government from taking further action, till the disposal of the writ filed by the Mill authorities.

Electricity for pumpsets (Lower Bhavani Area)

*1658 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கீழ் பவானி பகுதியில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் இறைக்க மின்சார இணைப்பைத் துரிதமாக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : The matter is being pursued with the Madras State Electricity Board and its final reply is awaited.

Property tax.

*1659 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of Sri S. PAKKIRISWAMI PILLAI) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any order reducing the rates of property tax on houses below certain annual assessment; and

(*b*) the details thereof?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Government Hospital, Chidambaram

*1660 *Q.*—SRI A. A. RASHEED :
SRI M. P. SARATHI : } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of the suggestion made by the High Court in the course of their judgment in a recent murder case to hold an enquiry into the conduct of a doctor in charge of the Chidambaram Hospital in regard to the admission of a patient; and

(*b*) If so, the action taken by the Government in the matter?

20th September 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) An enquiry has been conducted. The allegation that the Assistant Surgeon demanded illegal gratification for admitting the patient has not been proved.

Double-member Constituencies

* 1660-C *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the modification suggested by the State Government to the proposals notified by the Election Commission on 27th March 1961 regarding bifurcation of the two-member constituencies:

(*b*) the reasons for the same; and

(*c*) the reasons for not consulting the House?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A statement[a] is laid on the table of the House.

(*b*) The suggestions were made for administrative reasons and public convenience.

(*c*) It was open to individuals, institutions as well as the Government to express their views before the Election Commission came to a decision. It was not, therefore, necessary for the Government to have consulted the House in the matter.

SRI M. KALYANASUNDARAM : இவை அல்லாமல் ஓமலூர், ஏற்காடு, திருநெல்வேலி போன்ற தொகுதிகள் எல்லாம் மாற்றி அமைக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் எந்த அடிப்படையில் பிரிக்கப் பட்டன ? இவ்விதம் மாற்றங்கள் செய்யும் போது அரசாங்கத்தின் அபிப்பி ராயங்கள் கோரப்பட்டனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்காரினுடைய அபிப்பிராயங் களையும் கேட்டார்கள். இருந்தாலும் இதில் முடிவு செய்ய வேண்டியது தேர்தல் கமிஷன் தான்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, முன்பு இரட்டை உறுப்பினர் தொகுதியாக இருந்த தொகுதிகள் பிரிக்கப்படுகிற பொழுது, எந்த அடிப்படையான கொள்கைகள், முறைகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறன ? அந்த முறைகள் பிரகாரம் எல்லாப் பிரிவினைகளையும் நடத்தியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பிரிவினை செய்ய வேண்டியது தேர்தல் கமிஷன்தான். அவர்கள் ஒரு முறையை வகுத்து அதன்படி பிரிவினை நடத்தியிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த தொகுதி களைப் பிரிக்கின்றபொழுது தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் மிகுதியாக இருக்கின்ற பகுதிகளைத்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் தனித் தொகுதிகளாக ஏற்கப்படும் என்பது தேர்தல் குழுவினர் ஏற்றுக் கொண்ட கொள்கை. அதற்கு முரண்பாடாகப் பிரிவினை செய்திருந்தால் அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையின் அடிப்படையில்தான் தொகுதிகளைப் பிரித் திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் சரியாகத்தான் பிரித்திருக்

[a] Printed as Appendix VII on pages 327–328 infra.

[20th September 1961

கிறார்கள் என்று நினைக்கிறேன். மேலும் இப்போது எதையும் மாற்று வதற்கில்லை. தேர்தல் கமிஷனுடைய முடிவை நாம் இப்போது மாற்றுவது முடியாது.

SRI V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவில் பார்லிமெண்டுக்கு பிரித்திருக்கின்ற தொகுதியில் ஒரு லட்சம் அரிஜன மக்கள் இருக்கின்ற தொகுதியை பொது தொகுதியாகவும், குறைவாக இருக்கின்ற பகுதியை ரிசர்வ் தொகுதியாகவும் பிரித்திருக்கிறார்கள். இதை மாற்றி அமைப்பதற்கு தேர்தல் கமிஷனுக்குத் தெரிவித்து இதுவரை மாறுதல் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே இதை மாறுதல் செய் வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : : நான் முன்பே சொன்னேன். தேர்தல் கமிஷன் செய்ததுதான் கடைசி முடிவாகவிருக்கிறது. இதில் சர்க்கார் எடுக்கக்கூடிய முயற்சி ஒன்றுமில்லை.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk* at the commencement of a speech indicates revision by the Member.**]

II. ADJOURNMENT MOTION *re* : FAILURE OF THE GOVERNMENT TO SECURE APPROVAL TO ESTABLISH AN ADDITIONAL UNIVERSITY,

DEPUTUY SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member, Sri M. Kalyanasundaram under rule 42 of the Madras Assembly Rules. It reads as follows :—

'I move that the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, viz., the failure of the Government to secure the approval of the Government of India and the University Grants Commission for the proposal to establish an additional University in the State.'

I want to know how the matter is urgent and how the motion comes under rule 42 of the Assembly Rules.

SRI M. KALYANASUNDARAM : உதவி சபா நாயகர் அவர்களே, மூன்றாவது திட்ட காலத்தில் இன்னொரு பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் நிறுவப்படும் என்று அமைச்சர் அவர்கள் முன்னால் வாக் குறுதி தந்திருந்தார்கள். அதுவும் மதுரையில் நிறுவுவதற்கு ஆலோசிக் கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இவ்விதம் நிறுவுவது திருச்சியிலா அல்லது மதுரையிலா என்பது ஒருபுறம் இருக்கட்டும். எப்படியாவது இன்னொரு யூனிவர்சிடி நிறுவவேண்டிய அவசியமிருக்கிறது. நம்மு டைய ராஜ்யத்தில் நிலப்பரப்பின் அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் சரி, எண்ணிக்கை அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் சரி இப்போது இருக்கின்ற யூனிவர்சிடி போதாது. இப்போது அண்ணாமலை யுனிவர்சிடி **Residential** யூனிவர்சிடியாக இருக்கிறது. அதை விட்டுவிட்டால் நம்முடைய ராஜ்ஜியத்திற்கு ஒரே ஒரு யூனிவர்சிடி தான் இருக்கிறது. நம்முடைய மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் எண்ணிக்கையில் 13ஆக இருந்தாலும், பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. மற்ற ராஜ்யங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால், நம்முடைய மாவட்டங்கள் விஸ்தீரணத்தில் பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. இவ்வளவு பெரும் பரப்புகொண்ட ஒரு ராஜ்யத்திற்கு ஒரே ஒரு யூனிவர்சிடி இருப்பது போதாது. இதனால் அதிகப்படியான அளவில் கல்லூரிகள் தோன்றுவதற்கும், வேறு பல வேலை களுக்கும் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இன்னொரு யூனிவர்சிடி அமைக்க வேண்டும். அது இந்த மூன்றாவது திட்டத்தில் இல்லை என்று பார்லிமெண்டில் தெரிவித்ததிலிருந்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஆகவே இதைப் பற்றியுள்ள விவரங்களை அறிய விரும்புகிறேன்.

20th September 1961]

The Hon. Sri C. SUBRAMANIAM : : இதில் விவரங்களை தெரிந்து கொள்வதற்காக அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்களுக்கு இந்தச் சபையிலே சுமார் 10 வருட அனுபவம் இருந்தும், அதிலும் ஒரு கட்சிக்குத் தலைவராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்விதமாக ஒரு அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்தது ஆச்சரியமாகவே இருக்கிறது. இருந்தாலும் இதிலுள்ள விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி இன்னொரு சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் சர்க்காரினுடைய நோக்கம். ஒன்று மட்டுமல்ல, இரண்டு ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் இதைப்பற்றிக் கடைசியாக முடிவு எடுக்க வேண்டியது இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இப்போதுள்ள சர்வகலாசாலையோடு கலந்து ஆலோசித்து யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் முடிவு செய்து அதன் பின்னால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். ஆனால் இம்மாதிரியான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திலிருந்து வரக்கூடிய கருத்துக்களை அரசியல்வாதிகளின் கருத்துக்களாக சர்வகலாசாலை வட்டாரங்களில் நினைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். எதைச் சொன்னாலும் "இது அரசியல்வாதிகளின் கூற்று" என்று ஆரம்பித்து விடுகிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கும் கஷ்டமாக இருக்கிறது. மூன்றாவதோ அல்லது இரண்டாவதோ, ஆக இன்னொரு சர்வகலாசாலையை மதுரையில் ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்தை சர்வகலாசாலையின் செனட், சிண்டிகேட், வைஸ்-சான்ஸ்லர் ஆகியவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க அவர்களுக்கு அனுப்பியபோது, அவர்கள் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களையும் அனுசரித்து, அவர்களிடம் சொல்லி, அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்து இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையால் இதில் இருக்கக்கூடிய கஷ்டங்களை அங்கத்தினர்கள் ஓரளவுக்கு உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன். எனினும் இந்த விஷயத்தை அட்ஜார்ன்மெண்ட் மோஷனாகக் கொண்டுவருவது சரியல்ல என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து நான் அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்தது சரி என்று ஏற்படுகிறது. எனினும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டியது அவசியம். அட்ஜார்ன்மெண்ட் மோஷன் என்று இல்லாவிட்டாலும் ஒரு மணி நேரம் விவாதம் செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has got an opportunity to speak about this matter during the discussion on the Third Five-Year Plan which will take place in this House tomorrow and day-after. It is not an urgent matter to be taken up under rule 42 of the Legislative Assembly Rules. It does not refer to a matter in which the responsibility of Government is clearly involved. So I rule it out of order.

III. ANNOUNCEMENTS.

(1) Nomination to the Committee on Government Assurances.

DEPUTY SPEAKER : I have to announce to the House that under rule 214 (1) of the Assembly Rules, I have nominated Sri R. Srinivasa Iyer to serve on the Committee on Government Assurances for the year 1961–62 in the vacancy caused by the death of Sri A. Vedarathnam.

IV. GOVERNMENT MOTION.

Transaction of Government Business on a non-official day.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I move—

"That rule 23 of the Assembly Rules be suspended and the House do resolveto transact Government business on Thursday, the 21st September 1961."

DEPUTY SPEAKER : The question is—

" That rule 23 of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 21st September 1961."

The motion was put and carried.

V. GOVERNMENT BILL

THE MADRAS LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) BILL, 1960 (L.A. BILL NO. 8 OF 1960) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE —*cont.*

Clause 3 (sub-clause 11).

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, என்னுடைய திருத்தம் இந்தச் சட்டம் அமுலாகும் தேதி குறித்தது. இந்தச் சட்டம் அமுலுக்கு வரவேண்டிய தேதி குறைந்த பட்சம் 1955-ம் வருஷத்திலிருந்து இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நான் உணராமலில்லை. அந்தக்கஷ்டங்களை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று பின்னால் யோசனை கூற விரும்புகிறேன். செலெக்ட் கமிட்டியிலும் அந்த யோசனைகளைக் கூறியிருக்கிறேன். ஆனால் அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏன் இதில் அவசியம் இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த மசோதாவினுடைய நோக்கமே நிறைவேற வேண்டுமானால், நிலம் ஒரு சிலர் கையில் குவிந்திருப்பதை பரவலாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறவேண்டுமானால், சாகுபடி நிலத்தில் இருந்து விவசாயிகள் வெளியேற்றப்படாமல் இருக்க வேண்டும். அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், இந்தச் சட்டம் வரும் என்று எதிர் பார்த்து, அந்தச் சட்டத்தை ஏமாற்றச் செய்த நடவடிக்கைகளெல்லாம் ரத்தாகக் கூடிய முறையில் நம்முடைய சட்டம் இருக்க வேண்டும். இந்தச் சட்டம் கொண்டுவந்திருக்கக் கூடிய முறையே வேறு. எப்போது 1955-ம் வருஷம் மற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவோ, சாகுபடியாளர் பாதுக்கப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் இரண்டும் இயற்றப்பட்டவுடனேயே, ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டு, பினாமி மாற்றங்களைத் தடுக்க தடை விதித்து, அப்புறம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் இந்தமாதிரி பினாமி மாற்றங்களுக்கு இடமேற்பட்டிருக்காது. இதிலே 5 வருஷ அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். 1955-ம் வருஷம் கவர்னர் உரையில் மூன்று கட்டங்களில் நிலச்சீர்திருத்தம் கொண்டு வரப்படும், இந்த மூன்று கட்டங்களும் 1956-ம் ஆண்டுக்குள் முடிவுறும் என்று சுட்டிக்காட்டியிருந்தார்கள். முதல் கட்டம் 1955-ம் வருஷம். அப்போது சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1956-ல் நியாய வாரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிலச்சீர்திருத்தச் சட்டம் 1957-க்குள்ளாவது நிறைவேற்றப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டது அதுதான் கொடுக்கப்பட்ட வாக்குறுதி. ஆனால் **இந்த மசோ**

தாவைப் பிரேரேபிக்க கிட்டத்தட்ட ஐந்து வருஷ காலம் எடுத்திருக்கிறார்கள். இந்த ஐந்து வருஷ காலம் நம்முடைய ராஜ்யத்திலிருக்கின்ற நிலப்பிரபுக் களுக்குப் போதுமான அளவுக்கு எச்சரிக்கையாக இருந்திருக்கிறது. இப்படிச் சட்டம் வந்தால் என்னென்ன முறையில் தங்களிடமிருந்து ஒரு செண்ட் கூடப் போகாமல் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று பார்த்து பல நிலப்பிர புக்கள் விஷயம் தெரிந்து காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் எப்படி இருக்கும் என்பதுகூட அவர்களுக்கு விவரம் தெரிந் திருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஒரு நிலப்பிரபு 1956-ம் வருஷத்திலேயே நடவடிக்கை எடுத்து, அதற்கென்று ஒரு சர்க்கரை ஆலை நிறுவ அவசர அவசரமாக லைஸென்ஸ் பெற்று, தனக்கு இருக்கக்கூடிய 3,000 எக்கருக்கு அதிகமான நிலத்தை சர்க்கரை ஆலையின் சொந்த சொத் தாக எழுதி வைத்து பண்ணை நிறுவ 23 லட்சம் ரூபாய் செலவு செய்து கருவிகள் வாங்கியிருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER: இது அடுத்த கிளாசில் வருகிறது.

Sri M. KALYANASUNDARAM: இது தேதியைப் பற்றியது ஆகையால் இதைக் குறிப்பிடுகிறேன். எவ்வளவு நிச்சயமாகத் தெரிந் திருக்கிறது பாருங்கள்? சட்டம் வந்தாலும் தங்களைப் பாதிக்காமல் இருக்கும் என்று விஷயம் தெரிந்து இருக்கிறது. இல்லாவிட்டால் எப்படி நிலத்தை எழுதி வைத்து, மேலும் 23 லட்சம் ரூபாய்க்கு ஃபார்ம் இம்ப்ளிமெண்ட்ஸ்க்கு மட்டும் நிலத்துக்குத் தேவையான உழவு கருவிகள், டிராக்டர்கள், கலப்பைகள், மண்வெட்டிகள், குழிதோண்டும் யந்திரங்கள் ஆகியவைகளை 23 லட்சம் ரூபாய் செலவு செய்து வாங்கக்கூடிய அளவுக்கு தைரியம் வந்தது? சட்டம் வந்தாலும் நம் நிலத்தைத் தொடமாட்டார்கள் என்று விஷயம் தெரிந்து செய்துகொண்டிருக்கிறார்கள் பாருங்கள். இந்த மாதிரி நான் பல நிலப்பிரபுக்களைச் சொல்ல முடியும். இந்த நிலம் என்ன கரும்பு சாகுபடிக்குச் சரியான நிலமா? இல்லை. இதிலே சராசரி 20 டன்கூட உற்பத்தி ஆவதில்லை. கரும்புக்கு ஏற்ற நிலமே அல்ல. காவிரியில் வெள் ளத்தினால் அடித்த மணல் பூராவும் இந்த நிலத்தில் அடித்தால்தான் இந்த நிலம் கரும்பு சாகுபடிக்கு ஏதாவது லாயக்காக ஆகலாம். நிலத் தைப் பாதுகாப்பதற்காக 1955-ம் ஆண்டுக்குப் பிறகு நடவடிக்கை எடுத்தி ருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட இதை எடுத்துக் கூற விரும்பு கிறேன். அதே போல் என்னுடைய கையிலே பல வழக்குகள் இருக்கின் றன. 1955-ம் வருஷத்திலே ஒருவருடைய நிலமாக இருக்கிறது. 1956-ல் அவருடைய நிலமாகவே இருக்கிறது. 1959-ல் திடீரென்று கிஃப்ட் என்று வேறு ஒருவருடைய நிலமாக ஆகிவிடுகிறது. குத்தகைக்கு விட்டவர் ஒரே ஆள்தான்; ஒரே குடும்பம்.

"The land specified herein belong absolutely to the plaintiff and has been exclusivly owned and enjoyed by the plaintiff ever since the gift in 1959."

அருணாசலம் பிள்ளை அவர்களுடைய சொத்து, அவருடைய எத்தனையாவது மனைவியோ, 3-வது மனைவியோ அல்லது 4-வது மனைவியோ, அவருக்கு 1959-ம் வருஷத்திலே கிஃப்ட் ஆக மாறியிருக்கிறது. அவரே தான் குத்தகைக்கு விட்டவர். இப்படி வேறு ஒருவருக்கு மாறியிருக்கிறது— என்னுடைய சொத்து என்று அந்த அம்மையார் சொல்லுகிறார். இது பெரிய நிலப்பிரபு குடும்பத்தில் நடந்திருக்கிறது—திருச்சி ஜில்லாவில் ஐயம்பாளையம் குடும்பத்தில். அப்படி சேதுராம் பிள்ளை, அருணாசலம் பிள்ளை இவர் களுடைய சொத்து பட்டா மாறி விட்டிருக்கிறது 1958, 1959-ல். 1955-க்குப் பிறகு இதெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. இதே போல தஞ்சை ஜில்லா வைப் பொறுத்த வரையிலும் கூட விவரங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு நிலப்பிரபு ஒரு ஆஸ்பத்திரி கட்டி வைத்து விட்டார். அதற்கு தன்னுடைய பெயரை வைத்து விட்டார். தர்மம் செய்திருக்கிறார். அதன் பேரில் தன்னுடைய சொத்துக்களை எழுதி வைத்துவிட்டார். அந்த

நிலத்தை ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு சாகுபடிக்கு குத்தகைக்கு விட்டிருக்கிறார். அவரே சாகுபடி செய்து வருகிறார். ஆஸ்பத்திரி எப்படி நடக்கிறது, எவ்வளவு மருந்து கொடுக்கப்படுகிறது, எத்தனை நோயாளிகள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் ? இதைப்பற்றிய விவரம் கொடுக்க முடியுமா? இதைப் போல பல உதாரணங்கள் சொல்ல முடியும். 55-வது ஆண்டி லிருந்து என்று நீங்கள் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக 60 வரையில்
9-30 a.m. பார்டிஷன் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படிப் பிரித்துக் கொள்வதை வயது வந்த பிள்ளைகளுக்கு வேண்டுமானால் அவர்கள் பிரித்துக் கொள்ளட்டும். அதைக்கூட நாங்கள் ஆட்சேபிக்க வில்லை. ஆனால் அப்படி இல்லாமல், இந்த சட்டத்தினால் நாம் எதிர் பார்த்த பலன் கிடைக்காமல் பினாமி மாற்றங்கள் ஏற்படத்தான் உதவி இருக்கிறது. வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் கூறட்டும். இந்தச் சட்டத்தின் பலனாக, எவ்வளவு ஏக்கர் நிலங்கள் நங்கவரம் பண்ணை யிலிருந்து கிடைக்கும், வடபாதிமங்கலம் பண்ணையிலிருந்து கிடைக்கும், அதேபோல் கோட்டூர் பண்ணையிலிருந்து கிடைக்கும் என்று சொல்லட்டும். நான் ஒப்புக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் 1,000 பண்ணைகள் இருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பேர்ப்பட்டவர்களைப் பார்த்துத் தான் அவர் மனம் போராடிக் கொண்டிருக்கிறது. தனிப் பட்டவர்களுடைய நன்மையை, பொதுவாக ஏற்படக்கூடிய நன்மையைப் பற்றி கவலை கிடையாது. நாம் இப்போது சட்டத்தை நிறைவேற்ற இருக் கிறோம். அப்படி நிறைவேற்றும் போது, யார் யாருடைய நிலங்களை யெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்குமோ, அவர்களுடைய நிலங்களை எடுத்துக்கொள்ளப்போகிறோம். அதைப்பற்றிப் பேசாமல், தனிப்பட்டவர்களைப் பற்றி, தனிப்பட்ட நபர்களைப் பற்றி பேசுவதானது, அவர்களிடத்தில் அவருக்குள்ள துவேஷத்தையே வெளிப்படையாகக் காட்டு வதாகத் தோன்றுகிறது.

SRI M. KALYANASUNDARAM : அவர்கள் மேல் எனக்குத் துவேஷம் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்போது அவர்களுக்கு மட்டும் ஏதோ அவர்களிடத்தில் அன்பு இருப்ப தாகக் காட்டிக்கொள்கிறார்கள். எனக்கு யாரிடத்திலும் வெறுப்போ, துவேஷமோ கிடையாது. அதற்கான அவசியமும் எனக்கு ஏற்பட்டதில்லை. நான் அவர்களில் பெரும்பாலோரை நேரிலேகூட பார்த்தது கிடையாது. தனிப்பட்டவர்களிடம் எனக்கு வெறுப்பு இருக்கவேண்டிய அவசியமில்லை. நான் இங்கு எதற்குக் கூறுகிறேன் என்றால், சட்டத்தினுடைய நோக்கங்கள் நிறைவேறவேண்டுமென்று நாம் கூறுகிறோம். அப்படி நிறைவேற வேண்டுமென்று சொல்லும்போது, இந்தப் பண்ணைகளைப் பொறுத்தமட்டில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதற்கு மறைக்காமல் பதில் சொல்லவேண்டும். நம்முடைய சட்டத்தின் நோக்கத்தையே ஏமாற்றவேண்டுமென்பதற்காகவே இப்படியெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் இதன் மூலம் புலனு கிறது. முதலிலே கொண்டு வந்த மசோதாவிலே, ஏப்ரல் 6-ம் தேதிக்கு முன்பு ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று இருந்தது. அது பின்னர் செலக்ட் கமிட்டிக்குப் போய்விட்டு வந்த பிறகு, ஏப்ரல் 6-ம் தேதிக்கு முன்னர் காகிதம் வாங்கி இருந்தால் போதும் என்ற அளவில் திருத்தப்பட்டுவிட்டது. அதாவது, ஏப்ரல் 6-ம் தேதிக்கு முன்னால் காகிதம் வாங்கி, 7, 8 தேதிகளில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு திருத்தப்பட்டுவிட்டது. இப்படி 6-ம் தேதிக்கு முன்னாலே தேதி போட்டிருக்கவேண்டும் என்றிருப்பதால், யார் அதைப் போய் செக் செய்யப் போகிறார்கள். நம்முடைய இந்த மசோதாவுக்கே ஜீவநாடியாக இருப்பது, எந்தத் தேதியிலிருந்து ஆரம்பமாக வேண்டுமென்பதாகும். இது இல்லை என்றால், அமைச்சர் அவர்கள் சொன்னபடி, எங்களுக்கு யார் மேலும் துவேஷம் கிடையாது, ஏதோ சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று நிறை வேற்றுகிறோம், அதிலே கிடைக்கக்கூடிய நிலத்தை எடுத்துக்கொள்ளலாம், இல்லாவிட்டால் விட்டுவிடலாம், யாரையும் பாதுகாக்கவேண்டுமென்று கவலை எங்களுக்குக் கிடையாது, ஏதோ இந்தச் சட்டத்தைச் சம்பிரதாயத்திற்காகத்

20th September 1961] [Sri M. Kalyanasundaram]

தான் இயற்றுகிறோம் என்று சொல்லிவிடட்டும். நிலம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், ஏதோ பிளானிங் கமிஷன் சொல்லி இருக்கிறார்கள், அதை மத்திய அரசாங்கமும் வற்புறுத்துகிறது, அதே சமயத்தில் தேர்தலும் நெருங்கிக்கொண்டிருக்கிறது, சிலரிடத்தில் வாக்குறுதியும் கொடுத்திருக்கிறோம், ஆகவேதான் சம்பிரதாயத்திற்காக இந்தச் சட்டத்தை இயற்றுகிறோம் என்று சொல்லிவிடுங்கள். இதுதான் உங்களுடைய நோக்கமாக இருந்தால், எதிர்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கும், பாமர மக்களுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படாது, அவர்களிடையே தகராறுகள் தான் ஏற்படும். நான் தஞ்சை ஜில்லாவிலே செலக்ட் கமிட்டியோடு சுற்றுப் பிரயாணம் செய்தபோது, ஒரு நிலப் பிரபு சாட்சியம் கொடுத்தார். அந்தச் சமயத்தில் நமது நிதி மந்திரி அவர்கள் இருந்தாரோ, இல்லையோ ஞாபகம் இல்லை. இல்லை என்றுதான் நினைக்கிறேன். அந்த நிலப் பிரபு எங்களிடத்தில் ஒரு சவால் விடுத்தார் " நீங்கள் எங்களிடத்தில் இருந்து நிலத்தை எடுத்துவிடுங்கள் பார்க்கலாம். நாங்கள் ஒன்றும் ஏமாறவில்லை, எல்லாவற்றையும் பாதுகாப்பாகத்தான் வைத்திருக்கிறோம் " என்று தைரியமாகக் கூறினார். இந்த நடவடிக்கை புரொசீடிங்சில் எழுதப்பட்டதோ என்னவோ தெரியாது. ஆனால் நான் அங்கு இருந்தேன், நான் காதால் அதைக் கேட்டேன். ஆகவே இந்தச் சட்டத்தை ஏப்ரல் 6-ம் தேதி என்று நிறை வேற்றுவதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அதைவிட இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல், அப்படியே விட்டுவிடலாம் என்பது என்னுடைய கருத்து. அதுகூட ஓரளவுக்கு நல்ல பலனை அளிக்கும். இல்லாவிட்டால், இந்தச் சட்டம் இந்த சபையில் நிறைவேற்றப்பட்டு, பிறகு ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெற்று வந்த பிறகு, அந்தத் தேதியிலிருந்து அமுலாக்கவேண்டுமென்று திருத்தம் செய்வது மிகவும் அவசியம் என்று வற்புறுத்த விரும்புகிறேன். அப்போதுதான் இப்போது ஏமாந்துபோயுள்ள ஒன்றிரண்டு நபர்களும் இந்தச் சட்டத்தின் மூலம் பலனடைவதற்கு வசதியாக இருக்கும். இந்தச் சட்டமானது 55-ல் கொண்டுவந்து, இப்போது நிறைவேற்ற இருப்பதன் மூலம் நாம் நிலப் பிரபுக்களுக்கு 5 வருஷ நோட்டீஸ் கொடுத்து, அவர்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுத்து அவர்கள் பயன்படுவதற்குக் தான் இதுவரை உதவியிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை 1955-லிருந்து அமுலாக்க வேண்டுமென்பது ரொம்பவும் பொருத்தமாக இருக்கும். அப்போதுதான் நாம் நம்முடைய உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற முடியும். இல்லை, எங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது, நாங்கள் இப்படித்தான் நிறைவேற்றுவோம் என்று சொன்னால் அப்படியே செய்து கொள்ளுங்கள். எங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது. நாங்கள் இப்படித் தான் விதி விலக்குக் கொடுப்போம், தேதியையும் இப்படித்தான் நிர்ணயிப்போம், சொந்த சாகுபடி என்று இவ்வளவு நில்லத்தைத் தான் ஏற்றுக்கொள்வோம் என்று சொன்னால், அப்படி செய்து கொள்ளுங்கள். அதன் விளைவு என்னவாகும் என்றால், சொந்த சாகுபடி செய்யும், குத்தகை எடுத்துச் செய்யும், வாரமெடுத்துச் செய்யும் லட்சக்கணக்கான விவசாயிகள் தங்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் இதுவே உங்கள் நோக்கமாக இருந்தால், இந்தச் சட்டத்தை இயற்றிக்கொள்ளுங்கள். இப்படிச் செய்வதன் மூலம் குத்தகை சாகுபடி செய்யும் விவசாய வர்க்கமே அழிந்துவிடும். குத்தகை சாகுபடி செய்யக்கூடிய விவசாயிக்கே நிலம் கிடைக்க வேண்டும், அவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்படவேண்டுமென்று என் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை நான் இங்கு சொல்லவில்லை. அதைப் பின்னால் பார்க்கலாம். திட்டக் கமிஷன் என்ன சொல்லி இருக்கிறது ?

By making the tenants the owners of the land.

அதன்படி எங்கு அவர்களுக்கு ஓனர்ஷிப் கொடுத்திருக்கிறார்கள்? எங்காவது நிலமில்லாத ஒரு விவசாயிக்கு, குத்தகை எடுத்து சாகுபடி செய்து வந்த விவசாயிக்கு, ஒரு ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம் என்று உதாரணம் கொடுங்கள் பார்க்கலாம். அதே போல் நிலப் பிரபுக்கு, அவர்கள்வைத்திருந்த நிலத்தில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்போக பாக்கிஇவ்வளவு நிலங்கள் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம். அப்படி மிச்சம் ஏற்பட்ட நிலத்தில், ஒரு விவசாயிக்கு நிலம் கொடு

திருக்கிறோம் என்று உதாரணத்திற்குச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்தச் சட்டத்தின் மூலம் எவ்விதப் பலனும் ஏற்படப்போவதில்லை. இந்தச் சட்டத்தின் தேதியை மாற்றுமல் இருந்தால் எவ்விதப் பலனும் ஏற்படப் போவதில்லை. அதன்படி திட்டக் கமிஷனுடைய யோசனையையும் நிறை வேற்ற முடியாது. ஏதோ, திட்டக் கமிஷன் கூறிய யோசனை ஏற்றுக் கொண்டோம், ஏற்றுக்கொண்ட விதத்திலே ஏதோ ஒரு சட்டத்தைச் செய்தோம், அதன்மூலம் சீர்திருத்தம் வந்துவிட்டது என்று வேண்டு மானல் பெயரளவிற்குச் சொல்லிக்கொள்ளலாம். ஆனல் உண்மையில் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகின்ற காலத்திலே, தமிழ்நாட்டிலே பெரும் கலகம்தான் ஏற்படப்போகிறது. தவிர, மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று அக்கறை கொள்கின்ற நேரத்தில், இதன் மூலம் எவ்வித நன்மையும் ஏற்படாமல், கெடுதல் தான் ஏற்படும். கல்டிவேடிங் டெனண்ட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட், பேர் ரெண்ட் ஆக்ட் ஆகியவைகளை மட்டும் வேண்டுமானல் வைத்துக்கொண்டு பரிசீலனை செய்வோம். இந்தச் சட்டத்தைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அப்படி இல்லாமல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னல், அது மிகவும் அக்கிரமமானது. நம்முடைய நோக்கத்திற்கே முரணனது.

இந்தச் சட்டத்தை 1955-ல் கொண்டுவந்து, அந்தத் தேதியிலிருந்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவராமல், இப்போது 1960 எப்ரல் என்று தேதி போடுவதன் மூலம், அவர்களுக்கு ஐந்து வருஷ அவகாசம் கொடுத்தது இந்த அரசாங்கத்தினுடைய குற்றமாகும். எந்த நோக்கத் திற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ, அந்த நோக்கம் நிறைவேற 1955-லேயே தேதி நிர்ணயித்து, அதன் பலனை, அதனுல் ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டியது இந்த அரசாங் கத்தின் கடமையாகும். நிலப் பிரபுக்களுக்கு நல்லவர்களாக இருக்க வேண்டும், விவசாயிகளுக்கும் நிலம் கொடுக்கவேண்டுமென்று சொன்னல் அது முடியாத காரியம். அதிலே சங்கடம் ஏற்படத்தான் செய்யும். அதுவும் நிலப் பிரபுக்களின் நிலத்தையெல்லாம் அடியோடு எடுத்து விட வேண்டுமென்பதும் நோக்கமல்ல. அதேபோல் சிறு நிலக்காரர்களை யெல்லாம் பாதிக்கவேண்டுமென்பதும் நோக்கமல்ல. அவர்களுக்கும் நிலம் கொடுக்கலாம். அப்படி நிலம் கொடுப்பதற்கு ஒரு அடிப்படையில் செய்யலாம். அதற்கு நான் ஒரு யோசனை கூறுகிறேன். அதற்கு இத்தனை பிரிவுகள் உள்ள ஒரு மசோதா தேவையில்லை. நபர் ஒன்றுக்கு இவ்வளவு ஏக்கர் நிலம்தான் இருக்கவேண்டுமென்று சட்டம் போட்டுவிடுங்கள், போதும். அப்போது, இந்தக் குடும்பம் என்ற சங்கடங்கள் எல்லாம் வராது. ஒரு நபருக்கு 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டுவிடுங்கள். இது என் கருத்து. நீங்கள் வேண்டுமானல் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டுவிடுங்கள். ஆட்சேபணை இல்லை.

DEPUTY SPEAKER : இங்கு ஸ்டாண்டர்டு ஏக்கர் பற்றிப் பேசாதீர்கள். அதற்கு வேறு கிளாஸ் இருக்கிறது ; அதை எடுத்துக் கொள்ளும்போது அதைப்பற்றிய அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். இப் போது இதைப்பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

SRI M. KALYANASUNDARAM : ஆகவே, இந்தச் சட்டத்திலே **Date of Commencement of the Act**, அதாவது அமுலாக்க வேண்டிய தேதிதான் ஜீவநாடி . ஆகவே, நம்முடைய நோக்கம் நிறை வேற 1960 எப்ரல் 6, என்ற தேதியை மாற்றியமைத்து, 1955-லிருந்து என்று ஏற்பாடு செய்தால்தான் நல்லது என்பதை வலியுறுத்தி, அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி வலியுறுத்த விரும்புகிறேன்.

* **SRI K. ANBAZHAGAN :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த விதியில் திருத்தம் நிச்சயமாகத் தேவை என்ற கருத்தைத்தான் எதிர்க்கட்சியிலுள்ள முக்கியமான தோழர்கள் பலரும் தங்கள் திருத்தங் களின் மூலம் வற்புறுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தங்களைப்பற்றி எண்ணுகிறபொழுது ஆளும் கட்சியினர் இதுவரையிலே

20th September 1961] [Sri K. Anbazhagan]

கூறிவந்த உறுதி மொழிகளை அவர்கள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூறிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதாக இருந்தால், அந்த உறுதிமொழிகளினுடைய கருத்துக்கள் பழுதுபடாமல் இருக்கவேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டம் 1960-ம் ஆண்டு எப்ரல் 6-ம் தேதி அமுலாக்கப்படும் என்று சொல்லுவதன் மூலமாக இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு வழி வகை இல்லை. நமது சட்ட மன்றத்தினுடைய குறிப்பிடத்தக்க நேரமும், நினைப்பும், நாட்களும் இந்தச் சட்டத்தை அமைப்பதிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நேரத்தையும், நினைப்பையும் செலவழித்ததற்குப் பின்னர் இந்தச் சட்டத்தினுடைய பலன், நல்லதோர் எலும்புக்கூடு போல மட்டும் அமைந்துவிடுமானால், சதைப் பற்றற்ற எந்தவிதமான உயிரோட்டமுமற்ற ஒரு தோற்றமாக அமைந்து விடுமானால், இந்தச் சட்டம் இயற்றியதனால் என்ன பலன் கண்டார்கள் என்ற கேள்வியை வருங்காலத்தில் மற்றவர்கள் நிச்சயமாகக் கேட்பார்கள். இந்தச் சட்டத்தினால் பலன் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டத்தின் விதி விலக்குகள் மூலம் எப்படிப் பிறர் தப்பித்துக்கொண்டு போகக் கூடாது என்பது முக்கியமோ, அதேபோலத்தான் இந்த சட்டம் அமுலாகிற தேதி காரணமாகப் பலபேர் தப்பித்துக்கொள்ளுவதற்கு இடம் ஏற்படக்கூடாது.

சட்ட மன்றத்திலேயே எதிர்க்கட்சியினரால் இதைப்பற்றி ஒரு கேள்வி எழுப்பப்பட்டபோது அமைச்சர் அளித்த பதில் நினைவிற்கு வருகிறது. 'இப்படி இவ்வளவு நிலத்தை உறவினர்களுக்கும், வேண்டியவர்கட்கும் பங்கிட்டு எழுதிவிட்டார்களே, இனி உச்சவரம்பு சட்டம் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுமா என்று கேட்டபொழுது, 'என்னமோ, நிலம் பங்கிடப்படவேண்டும் என்பதுதான் எண்ணமே தவிர, யாருக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதுபற்றி எங்களுக்கு கவலையில்லை' என்ற கருத்துப்பட நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலேயே பதிலளித்திருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்துத்தான் இந்தத் தவறுக்குக் காரணம் ஆகிவிட்டதோ என்று ஐயப்படுகிறேன்.

நிலத்தை இன்று உரியவர்களிடமிருந்து பிரித்துப் பெறவேண்டும் என்று சொல்லுகிற அதே நேரத்தில் உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நிலம் உரியவர்களுக்குப் போய்ச் சேராமல், வழியிலே வேறு யாருக்கோ போய்ச் சேருகிறது என்று சொன்னால்—அதனால் நன்மை அடைகிறவர்கள், நேரடியாக ஏற்கனவே அந்த நன்மையை இழந்தவர்களாக இல்லாமல் வழியிலே போகிறவர்களாக இருப்பார்களேயானால், அப்படி அவர்கள் நன்மையை அடைய விடுவது இந்த அரசாங்கம் ஒரு புது வகையான வழிப்பறிக் கொள்ளைக்கு உதவி செய்வதை ஒத்ததாகும்.

மிகப் பெரிய நிலச்சுவான்தாரர்கள் பேரில் பட்டா இருந்தாலும், அவர்கள் சொந்தக்காரர்கள் பேரில் பட்டா இருந்தாலும், மருமகன் பேரில் பட்டா இருந்தாலும், மருமகள் பேரில் பட்டா இருந்தாலும், அவர்களுக்கு வேண்டியவர்கள் பேரில் பட்டா இருந்தாலும், அதன் வரவு செலவு முழுவதையும் ஒருவரே அனுபவித்தால், எல்லாம் சேர்ந்து ஏற்கனவே இருந்த பலன்தான். எனவேதான் இந்தச் சட்டத்தை 1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 6-ம் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் பெரிய ஏமாற்றத்திற்கு இடம் ஏற்படுகிறது.

நிலத்தைப் பிரித்துவிட்டால் மட்டும் விளைச்சலை அதிகப்படுத்திவிட முடியுமா? ஆயிரம் வேலிக்குச் சொந்தக்காரராக இருப்பவர் தனக்கு 35, 40 ஏகரா நிலம் வைத்துக்கொண்டு, மிச்ச நிலத்தை 60, 70 பேர்களுக்கு எழுதி வைத்துவிட்டால், அப்படி எழுதி வைத்துவிட்டதன் காரணமாக விளைச்சல் பெருகிவிடுமா? அவர்களே நேரிடையாக விளைச்சலைப் பெருக்கிவிடுவார்களா? உணவு உற்பத்தி பெருகுமா? அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரம் காட்ட முடியுமா? உழுது கொண்டிருந்தவர்களுக்கு ஏற்கனவே பாடுபட்டவர்களுக்கு அந்த நியாயமான உரிமையாவது இந்தச் சட்டத்தினால் கிடைக்குமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்—பலரும் சொல்லுகிற கருத்து—'நாங்கள்தான் ஆதித் திராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை இந்த நாட்டில் உயர்த்துவதற்கு வழி செய்கிறோம்' என்பது, ஆதித்திராவிட மக்கள், இந்த நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் பெரும் பகுதியினர் நிலத்தில் உழுது பாடுபடுகிறவர்கள். அவர்களுக்கு இன்றுள்ள முறையால் நிலம் சொந்தம் இல்லை. உழுது பயிரிடுகிற அவர்களுக்கு எப்படியாவது நிலம் கிடைக்க வேண்டும். அவர்களால் பணம் கொடுத்து விலைக்கு நிலம் வாங்க முடியாது. அப்படிப்பட்ட நிலையிலுள்ள மக்களுக்கு இந்த உரிமையை உண்மையிலேயே அளிக்க வேண்டுமானால், உச்ச வரம்புச் சட்டத்தினால் மிச்சமிருக்கிற ஏராளமான நிலம் அரசாங்கத்தினால் பிரித்து எடுக்கப்பட்டு—ஒரு வேளை அரசாங்கம் கூட்டுறவுப் பண்ணை அடிப்படையில் செய்தாலும் சரி, வேறு எந்த நிர்வாக முறையில் அமைத்தாலும் சரி—அதன் மூலம் ஆதித்திராவிட பெருங்குடி மக்களுக்கு, உழுகிற மக்களுக்கு உரிமை அளிக்க வேண்டும். சமுதாயத்தில் தாழ்ந்த மட்டத்தில் இருப்பவர்களை உயர்த்துவதற்குக் கையாளப்பட வேண்டிய முறையில் ஒன்றாக அது இருக்க வேண்டும். அரசாங்கம் தெரிந்தேதான், அந்த முறையில் காரியத்தை ஆற்றாமல், மாறான வகையில் மேல்வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களிடையே பங்கிட்டுக்கொள்ளக்கூடிய வகையில், உறவினர்களிடையே பங்கிட்டு அளிக்கக்கூடிய முறையில், இந்தச் சட்டத்தை 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம் இடமளித்து விட்டார்கள் என்பதால் நான் வருத்தத்தோடு இதைக் கண்டிக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குகிற காலத்தில் அரசாங்கத்தார், நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம், நிலச் சீர்திருத்தத்தின் மூலம் சிறந்த பலன்களை நாங்கள் உண்டாக்கப்போகிறோம் என்று தெரிவித்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப நாளிலாவது இந்தச் சட்டம் அமுலுக்கு வருமானால் ஏறத்தாழ 1956-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய காலமாகும், அந்த நேரத்திலாவது இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததாக இருக்குமானால் இந்தச் சட்டத்தினால் பலன் ஏற்படும். 1956-ம் ஆண்டில் கூட இந்தச் சட்டம் அமுலுக்கு வரவில்லை என்று சொன்னால், இரண்டாவது திட்டம் முடிகிற நேரத்தில் 1960-ம் ஆண்டில் இந்தச் சட்டத்தின் பலனை நாம் பெற வேண்டுமென்று சொன்னால், இந்த 10 ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் எச்சரிக்கும் முறையில் நடத்திய பிரசாரத்தினால் மிராசுதார்களெல்லாம் விழிப்புணர்ச்சி பெற்று தங்கள் நிலங்களையெல்லாம் பிரித்து பக்குவமாக உற்றார் உறவினர் பேர்களுக்கு எழுதி விட்டார்கள். இதைப்பற்றிய புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் தயவு செய்து தேடித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். 1955-ம் ஆண்டிலே எத்தனை எத்தனை ஆயிரம் ஏகராக்கள் எந்தெந்த மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருந்தன என்று தெரிந்துகொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களைப்பற்றி யாரும் குறிப்பிடக் கூடாது என்ற கருத்தை நிதி அமைச்சர் அவர்கள், ஆளுங் கட்சித் தலைவர் இங்கே தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், தனிப்பட்டவர்கள்பற்றி அல்ல, அது ஒரு பெரிய கூட்டமாகவே இருக்கிறது. ஒரு ஆள் அல்ல, இரண்டு ஆள் அல்ல, பெரிய மிராசுதார்கள் அத்தனை பேர்களும், யாராக இருந்தாலும், அந்த ஏற்பாட்டில் தவறிவிடவில்லை. அவர்களுக்கு எச்சரிக்கை செய்வதற்கு ஆளும் கட்சி தவறவில்லை. அமைச்சர்கள் அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்கள் அத்தனையும் அவர்களுக்குப் பாதுகாப்பாக அமைந்தன. நில உச்ச வரம்புச் சட்டம் ஒரு வேளை மிராசுதார் பாதுகாப்புச் சட்டமாக மாறிவிட்டதோ என்று வருத்தப்படுகிறேன். மிராசுதார்களுக்குக்கூட வேறு விதமான பாதுகாப்புத் தரலாம். அவர்களுக்கு நஷ்ட ஈடு தரக்கூடாது என்றோ, அவர்கள் வாழவே கூடாது என்றோ, தொழிற்சாலைகளில் பணம் போடக்கூடாது என்றோ கூறுபவன் அல்ல நான். அவர்களிடத்திலிருந்த ஏராளமான நிலத்தினை எந்த அடிப்படையிலே பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நினைத்தார்களோ, ஆட்சிமன்றத்தில் எடுத்துச் சொன்னார்களோ அந்த குறிக்கோள் தவறுவதற்கு 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் என்ற

தேதி இடம் தந்துவிடுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஏராள மான மக்கள் நிலத்தை நம்பி வாழக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஏராளமான மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இது நன்மை செய்வதாக இல்லை. இந்தச் சட்டம் உண்மையாகவே 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி முதல் அமுலுக்கு வராமல், 1955-வது ஆண்டி லிருந்து அல்லது சற்றேறக்குறைய 1956-ம் ஆண்டுக்குள்ளாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்தத் தேதியிலிருந்து சட்டம் அமுலுக்கு வரும் என்று சொன்னால்தான், இது நில உச்ச வரம்புச் சட்டமாகும்.

மற்றொன்று தத்துவ முறையில் அமைச்சர் அவர்களுக்குத் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி ஒரு சட்டம், சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதனால் பலன் கிடைக்கவில்லை என்று சொன்னால், நல்ல விளைவு ஏற்படவில்லை என்று சொன்னால், அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருகிற ஆட்சியாளரை மக்கள் எம்முறையினும் மதிக்க மாட்டார்கள். சட்டம் கொண்டுவந்ததினால் பலன் ஏற்படவில்லை, பொது மக்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை என்று சொன்னால் ஒப்புக்குச் சட்டம் செய்கிற ஆட்சியாளர்களாக இருக்கிறார்கள் என்றுதான் மக்கள் கருது வார்கள். அப்படிச் செய்யாமல், இந்தச் சட்டம் பலன் தரக்கூடிய முறை யில் எண்ணிப் பார்க்கவேண்டும். 30, 35 ஏக்ரா ஒரு குடும்பத்திற்கு அளிக்கப்படப்போகிறது என்று தெரிந்த காரணத்தினாலே, ஏறத்தாழ 35 ஏகரா அவர்களுக்கு கிடைக்கும் என்ற காரணத்தினால், எழுதி வைத் தவர்கள் தங்களுக்கு ஒரு 40, 45 ஏகரா வைத்துகொண்டு ஒரு 10 ஏக்கர் அளவு போனால் போகட்டும் என்று விட்டுவிட்டு, மற்ற நிலத்தை அடுத்த வர்களுக்கு எழுதி வைக்கும்பொழுது 30 ஏக்ரா, 35 ஏக்ரா வரையில் எல்லா நிலப் பிரபுக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி யார் பேரில் எழுதிவைக்கப்பட்டதோ அவர்களும், எழுதி வைத்தவர்களும் இரு வகையாரும் இப்பொழுது அரசாங்கத்தை ஏமாற்றுவதற்கு அது உதவி செய்கிறது. நல்லெண்ணத்தோடு இந்தத் திட்டத்தை அவர்கள் மேற் கொண்டார்களா என்று அமைச்சர் எண்ணிப் பார்த்தால், நல்லெண்ணம் யாருக்கும் இல்லை, சுயநலம்தான் இதற்குக் காரணம் என்று தெரியவரும். இப்படி எழுதிவைத்திருக்கிற காரணத்தினால், சட்டம் அமுலாகும் தேதியை முன் தேதியாக மாற்ற மாட்டோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லு வதாக இருந்தால், உச்ச வரம்பு 30 ஏகரா என்பதை 15 ஏகரா என்று திடீரென்று குறைக்கட்டும், 15 ஏகராதான் உச்ச வரம்பு என்று சொல் லட்டும், எழுதி வைத்த இடங்களிலிருந்து ஆளுக்கு 20 ஏகரா திரும்ப அரசாங்கத்திற்குக் கிடைக்கும். நூறு பேருக்கு 30 ஏகரா வீதம் எழுதி வைத்திருந்தால், ஒவ்வொருவரிடமிருந்தும் 15 ஏகரா அரசாங்கத்திற்கு— பொது நலத்திற்கு மிச்ச நிலமாகக் கிடைக்கும். ஒன்று அந்த உச்ச வரம்பை 15 ஏக்கராவாக்குவதற்கு ஒப்புக்கொண்டால், இந்தத் தேதியை மாற்றாமல் இதே தேதியாக இருந்தாலும்கூட, அந்தப் பலனில் ஓரளவு கிடைக்க முடியும். அல்லது, இந்தத் தேதியையாவது மாற்றுவதற்கு முன் வரவேண்டும். 1955-ம் ஆண்டிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்று தரப்பட்டுள்ள திருத்தங்களிலே ஏதாவது ஒரு திருத் தத்தை அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ள வில்லையானால், அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது 'எங்களுக்கு நிலச் சீர்திருத்தத்தில் நம்பிக்கை இல்லை, ஏழை மக்களுக்கு நில உரிமை அளிப்பதில் நம்பிக்கை இல்லை, சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டோம். அந்தப் பாவத்திற்காக இந்தச் சட்டம் கொண்டுவருகிறோம்' என்றாவது வெளிப்படையாக தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, with your prmission I move the following amendment :—

"In sub-clause (11), *omit* the word 'first.'"

இப்பொழுது இந்த விவாதத்தில், இந்த சட்டத்திலே போட்டிருக்கிற ஷரா பிரகாரம், இது "1960-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல்'" என்று இருக்கிறது. அதைத் திருத்தி 1955-லேயிருந்து என்று வைக்கவேண்டும்

[Sri M. A. Manickavelu] [20th September 1961

என்று சொல்கிறார்கள். இதிலே "ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" கொடுப்பதில், இம்மாதிரி விஷயங்களில் நிறையச் சிக்கல்கள் இருக்கின்றன. அதை கனம் கல்யாணசுந்தரமும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அதையெல்லாம் சமாளிக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், நான் அதைச் சமாளிக்க முடியாது என்றுதான் சொல்லுகிறேன். (ஸ்ரீ கல்யாணசுந்தரம்: மனது இருந்தால் சமாளிக்கலாம்) அவர்கள் சொன்ன மாதிரி மூன்று, நான்கு கை மாறியிருக்கிறது ; இன்னும்கூட கைகள் மாறும். ஆகவே, இன்னும் சிக்கல்கள் அதிகமாக இருக்கும். அதில் நிறையக் கஷ்டங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் செய்யவேண்டுமென்றால், ராணுவம் மாதிரி நிறையச் சிப்பந்திகளை வைத்துச் செய்யவேண்டும். (ஸ்ரீ கல்யாணசுந்தரம் : மாறி இருப்பதையாவது உண்மை யென்று ஒப்புக்கொள்கிறீர்களோ இல்லையோ. அது போதும்.) அது இருக்கிறது. ஆனால், அதில் வரும் சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமானால், நிறையச் சிப்பந்திகளை வைத்துப் பரிசீலனை பண்ணினாலும்கூட, இருக்கிற சட்டப் பிரகாரம் எத்தனை பேர்கள் அவர்களிடத்தில் உள்ள நிலங்களைப் பிரித்திருக்கிறார்கள், அதில் என்ன உபரி நிலம் வரும் என்று பார்த்தால், மிக்க கொஞ்சமாகத்தான் மீட்க முடியும். இருக்கிற சட்டத்திற்கு உட்பட்டு ஏதாவது செய்திருந்தாலும், அது பினாமி என்று சொல்லலாம். அப்பொழுது அது பினாமியா அல்லது பினாமியில்லையா என்று பார்ப்பதெல்லாம் ரொம்பக் கஷ்டம். உதாரணமாக ஒருவர் தன் மகளுக்கு ஒரு 30 ஏக்கரா எழுதி வைத்தார் என்றால், அது சட்டப் பிரகாரம் அன்பினால் செய்திருப்பார். பினாமி என்று அர்த்தம் இருந்தால்கூட, அது பினாமிதான் என்று கண்டிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது. இம்மாதிரியான பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படிப் பெரிய அளவில் சிப்பந்திகளை ஏற்படுத்தி விசாரணைகள் செய்தாலும், அதனால் விளையும் பலன் அதிகமாக இருக்காது. மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது போல்தான் ஆகும். (குறுக்கீடு) பிரயோஜனம் அதிகமாக இருக்காது என்றுதான் சொன்னேன்.

இதிலே நம் மாகாணத்தில் மட்டும்தான் இம்மாதிரிச் செய்கிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைக்க வேண்டியதில்லை. பக்கத்து மாகாணமான ஆந்திராவில் சட்டம் நிறைவேறிய பிறகுதான் அமுலுக்கு வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரிஸா மாகாணத்தில் சட்டம் வந்த பிறகு இரண்டு வருஷம் அவகாசம் கொடுக்கிறார்கள், அதற்குள் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். ஆகவே நம் அமைச்சர்கள்தான் இப்படிச் செய்துவிட்டார்கள் என்று யாரும் நினைக்கவேண்டாம். பல மாகாணங்களில் பலவிதமாக செய்கிறார்கள். நாம் இப்படிச் செய்திருக்கிறோம். (ஸ்ரீ என். கே. பழனிசாமி : அஸ்ஸாம் மாகாணத்தில் ஐந்து வருஷங்களுக்கு முன்பே செய்தாகி விட்டதே ?) அது இருக்கட்டும். ஆகவே, இதை எல்லாம் செய்வது மிகக் கஷ்டமான காரியம். அதனால் பிரயோஜனமும் அதிகமாக இல்லை என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டைப்பற்றிச் சொன்னார்கள். இதிலே சென்ட்ரல் ஆக்ட் பாதிக்கிறது. ஆகவே, அம்மாதிரிச் செய்வதற்கில்லை. 1955-லிருந்தே செய்துவிட்டார்கள் என்று சொல்லும்போது மூன்று, நான்கு மாதத்தில் என்ன வந்துவிடப்போகிறது. இன்னொன்று. நிலத்தைப் பிரித்து வைத்துவிட்டார்கள், எழுதி வைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இது எல்லாம் நிலச் சொந்தக்காரர்கள் பணம் கொடுத்து வாங்கினது அல்லது பரம்பரையாக அனுபவித்து வருவது. அந்த நிலங்களுக்கு இந்த வாதம் எப்படிப் பொருந்தும் ? புறம்போக்கு நிலமாக இருந்து, அரசாங்க நிலத்தை 100, 200 அல்லது 300 ஏக்கரா என்று எடுத்து பயிரிட்டு வந்தவர்கள் அம்மாதிரி பிரித்து எழுதி வைத்திருந்தால், அதைக் கவனிக்கலாம். அப்படியின்றி ஒருவருக்குச் சொந்தமான, உரிமையுள்ள நிலம் என்று சொல்லும்போது, "பண்டமண்டல் ரைட்", இருக்கிறது அதெல்லாம் குறுக்கே வரும். ஆகவே உரிமையோடு அவர்கள் செய்

திருப்பதை நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. யார் சட்டப் பிரகாரம் செய்யலாமோ அவர்கள்தான் செய்திருக்கிறார்கள். வேறு ஆட்கள் செய்ய முடியாது.

ஷுகர் போர்டு பற்றிச் சொன்னார்கள். இந்தச் சட்டம் வருகிறது, இதைத் தட்டிக் கழிக்க அம்மாதிரிச் செய்து ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலத்தை சிலர் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதிலே, மற்ற மாகாணங்களிலே, ஷுகர் பாக்டரிக்கு எக்ஸம்ஷனே கொடுத்திருக்கிறார்கள். நாம் அப்படிக் கொடுக்க வில்லை. ஷுகர் போர்டு என்று ஏற்படுத்தி, அவர்கள் தீர விசாரித்து, விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கொடுக்கலாம் என்கிறோம். எடுத்த எடுப்பில் அதைச் செய்ய வில்லை. ஜாக்கிரதையாகத்தான் செய்திருக்கிறோம்.

தேதியைத் தள்ளிப் போடுவதால் பலன் இருக்குமா என்றால், பலன் இருக்காது. ஆகையினால், இதைப் பொறுக்குக் கமிட்டியில் நன்றாகப் பரிசீலனை செய்து, விசாலமாக ஆலோசித்து, அதற்குமேல் இம்மாதிரியான முடிவுக்கு வந்திருக்கிறோம். நாம் வைத்திருப்பதுதான் நியாயமான தேதி ஆகையினால் அதை அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

SRI N. K. PALANISAMI : I am pressing my amendment.

DEPUTY SPEAKER : The question is—

" For sub-clause (11) *substitute* the following :—

" (11) ' date of commencement of this Act ' means ' 1st January 1955.' "

The amendment was put and declared lost. .. 10-00 a.m.

A poll was demanded and the House divided thus :—

Ayes.

1 Sri A. R. Marimuthu.	7 Sri N. Marudachalam.
2 ,, M. Kalyanasundaram.	8 ,, V. K. Kothandaraman.
3 ,, S. Pakkirisami Pillai.	9 ,, M. Selvaraj.
4 ,, K. Anbazhagan.	10 ,, C. Natarajan.
5 ,, N. K. Palanisami.	11 ,, P. U. Shanmugam.
6 ,, K. R. Nallasivam.	12 ,, K. Sattanatha Karayalar.

Noes.

1 Sri C. R. Ramaswamy.	12 Sri P. G. Karuthiruman.
2 ,, V. Arunachala Thevar.	13 ,, D. Dasarathan.
3 ,, M. A. B. Arumugasami.	14 ,, G. Gomathi Sankara Dikshitar.
4 ,, V. Chinniah.	15 ,, G. G. Gurumurthi.
5 ,, R. Chidambara Bharathi.	16 ,, R. Kandasami
6 ,, A. Chinnasami.	17 ,, M. R. Kandasami Mudaliar.
7 ,, N. V. Chockalingam.	18 ,, T. Karia Gounder.
8 ,, T. T. Daniel.	19 ,, P. Kolanda Gounder.
9 **The Hon. Sri C. Subramaniam.**	20 ,, V. K. Krishnamurthi.
10 The Hon. Sri M. A. Manickavelu.	
11 The Hon. Sri P. Kakkan.	

Noes—**cont.**

21 Sri R. Krishnaswami Naidu.
22 ,, P. G. Manickam.
23 The Hon. Sri V. Ramaiah.
24 The Hon. Srimathi Lourdhammal Simon.
25 Srimathi T. N. Anandanayaki.
26 ,, Hemalatha Devi.
27 ,, Kamalambuja Ammal.
28 ,, Kolanthai Ammal.
29 ,, P. K. R. Lakshmi Kantham.
30 ,, A. S. Ponnammal.
31 Sri J. Matha Gowder.
32 ,, K. K. Muthiah.
33 ,, S. Nagaraja Monigar.
34 ,, T. M. Nallaswami.
35 ,, G. Narayanaswami Naidu.
36 ,, A. Nesamony.
37 ,, P. M. Periakaruppan Ambalam.
38 ,, K. N. Palanisami Gounder
39 ,, K. Periannan.
40 Sri K. Ponnian.
41 ,, S. Ramakrishna Thevar.
42 ,, A. Raja Gounder.
43 ,, S. Ramalinga Padayachi.
44 ,, R. Shanmuga Rajeswara Sethupathi.
45 Dr. (Srimathi) T. S. Soundaramal Ramachandran.
46 Sri S. Sadasivam.
47 ,, T. V. Sannasi.
48 ,, M. S. Selvarajan.
49 ,, M. K. Somasundaram.
50 ,, R. Srinivasa Iyer.
51 ,, A. R. Subbiah Mudaliyar
52 ,, R. Subramaniam.
53 ,, R. Swaminatha Merkondar.
54 ,, K. Vasudevan.
55 ,, V. K. Ramaswami Mudaliyar.
56 ,, A. P. C. Veerabahu.
57 ,, S. Ranganatha Mudaliyar
58 ,, S. Pandiaraj.
59 ,, M. Wiliam.
60 ,, V. Subbiah.
61 ,, S. R. Munusami.

Ayes : 12; Noes : 61; Neutral : Nil.

The amendment was lost.

DEPUTY SPEAKER : In view of the verdict of the House on the amendment of Sri N. K. Palanisami the amendment moved by the hon. Member Sri V. K. Kothandaraman which is substantially identical is out of order.

As Sri M. P. Subramaniam is not in his seat, his amendment is deemed to have been withdrawn.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In view of the verdict of the House on the amendment of Sri Palanisami, I do not press my amendment, Sir.

The amendment of Sri V. K. Ramaswamy Mudaliar was, by leave, withdrawn.

The Government amendment was put and carried.

Sub-clause (13).

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

For sub-clause (13), *substitute* the following :—

"(13) 'existing sugar factory' means 'any sugar factory which was in existence and was carrying on production for not less than 180 days during 1955.'"

20th September 1961]

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவானது சர்க்கரை ஆலேகளுக்கு எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்பது சம்பந்தப்பட்டது. இந்த விளக்கமும் இது சம்பந்தமான பிரிவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நம் ராஜ்யத்திலே இருக்கும் சர்க்கரை ஆலேகள் பெரும்பாலும் விவசாயிகளிடத்திலே இருக்கும் நிலத்தை நம்பித்தான் இருக்கின்றன. விவசாயிகளிடத்தில் நிலம் இருந்தால் கிராமப் பொருளாதாரமே பாழ்பட்டுவிடும் என்று அமைச்சர் அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். விவசாயிகளிடம் நிலம் இருந்தால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும் என்ற எண்ணம் அமைச்சர்களிடத்தில் இருக்கிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது. சர்க்கரை ஆலேகளுக்கு நிலம் சொந்தமாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலே, புகலூர் சர்க்கரை ஆலே இருக்கின்றன. இவைகளெல்லாம் சொந்த நிலம் வைத்துக்கொள்ளாமல் விவசாயிகளுடைய நிலத்தை நம்பியே சர்க்கரை உற்பத்தி செய்துகொண்டு வந்திருக்கின்றன. அவை வெகு திறமையாகக்கூட நடந்து வந்திருக்கின்றன. கரும்பு போதவில்லை என்ற காரணத்திற்காக ஒரு நாள்கூட அந்த ஆலேகள் மூடப்பட்டது கிடையாது. அப்படியிருக்க இதற்கு அவசியம் என்ன? முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் லால்குடிக்குப் பக்கத்தில் சோதாரி சர்க்கரை ஆலேக்கு அஸ்திவாரக்கல் போட்டார்கள். அந்த ஆலேக்கு ஒரு ஏக்கர் நிலம்கூடச் சொந்தமாகக் கிடையாது. லால்குடி, முசிரி தாலூகாக்களில் இருக்கும் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்பட்டு, கரும்பு சாகுபடி இப்போதே ஆரம்பமாகிவிட்டது. அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் சர்க்கரை உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குள் கரும்பு வளர்க்க வேண்டுமென்று சொல்லி, பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணத்தில் கரும்பு சாகுபடி நடைபெறுகிறது. சாதாரண விவசாயிகளுக்குக்கூட ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்திருக்கிறது. பெரும்பாலான விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். திருச்சி ஜில்லாவில் லால்குடி தாலூகாவிலும் முசிரி தாலூகாவிலும் சிறிய நிலச் சொந்தக்காரர்கள் மிகவும் சந்தோஷத்தோடு, நமக்கு நிலேயான வருமானம் இருக்கும் என்ற உற்சாகத்தோடு கரும்பு சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். குத்தகை சாகுபடி செய்கிற விவசாயிகள்கூட தாங்கள் பயிரிடுகிற கரும்புக்கு நிச்சயமான விலே கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். விவசாயிகளின் கையில் நிலம் இருந்தால், சர்க்கரை ஆலேக்குத் தேவையான கரும்பு கிடைக்காது என்ற தத்துவத்தை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. பழைய சரித்திரமும் அந்தக் கருத்துக்கு ஆதாரமாக இல்லே. புதிய சர்க்கரை ஆலே தோன்றியும், அந்தக் கருத்துக்கு ஆதாரம் இல்லே. ஏதோ ஒரு கரும்பு ஆலேக்கு மட்டும் விசேஷ சலுகை கொடுத்தால், அது பச்சையாகத் தெரிந்துவிடுமே என்பதற்காக இது செய்யப்படுகிறது. சட்டம் நடைமுறைக்கு வரும்போது யார் யாருக்கு இது 'அப்ளே' யாகப் போகிறது? பேட்டைவாய்த்தலே சர்க்கரை ஆலேக்கு நிலம் வேண்டுமென்று எடுத்தார்கள். நடைமுறையில் சாத்தியம் இல்லே என்று அவர்கள் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆலேக்குச் சொந்தமாக நிலம் வேண்டுமென்பதை வற்புறுத்தவில்லே. பிரித்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு கரும்பு ஆலேக்கு நிலம் சொந்தமாக அவசியம்? ஒரே ஒரு கம்பெனிக்கு மட்டும் இந்த விதிவிலக்கு என்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

அமைச்சர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு, 'சர்க்கரை ஆலேக்காக மற்ற ராஜ்யங்களிலெல்லாம் விதி விலக்குக் கொடுத்துவிட்டார்கள்; நாம் நேரடியாகக் கொடுக்கவில்லே, சர்க்கரை போர்டு என்று ஏற்படுத்தப் போகிறோம், அந்த போர்டார் பார்த்துத்தான் நிலம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யப் போகிறார்கள்' என்று சொன்னார்கள். அதற்குக்கூட அவசியம் இல்லே. காவேரிக் கரையிலும், தமிழகத்தில்

எந்தப் பகுதியிலும் கரும்பு உற்பத்தி அளவை எடுத்துப் பார்த்தால், நாம் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறோம். ஏக்கர் ஒன்றுக்கு 50 டன் அளவுக்கு உற்பத்தியாகிறது. நூறு டன் கரும்பு உற்பத்தி செய்தால், பத்து டன் சர்க்கரை கிடைக்கும் அளவுக்கு 'ரிகவரி' இருக்கிறது. ஆக, ரிகவரியிலும் சரி, உற்பத்தியிலும் சரி தமிழகம் முன்னணியில் இருக்கிறது. அதற்குக் காரணம், இங்குள்ள விவசாயிகள் இயற்கையாகவே உற்சாகத்தோடு பயிரிட முன்வருவதுதான். விவசாயி கையில் நிலம் இருந்தால் கரும்பு சாகுபடி செய்யமாட்டேன் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். கரும்பு ஆலைகள் அதிகம் திறந்தாலுங்கூட குந்தகம் ஏற்படாது. கரும்பு ஆலைகள் இன்னும் எத்தனை ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் கணக்கிட்டு, நிலச் சீர்திருத்தத்தோடு அதைச் சம்பந்தப் படுத்த வேண்டும். விவசாயிகள் கையில் நிலம் இருந்தால், கரும்பு உற்பத்திக்கு ஊக்கம் அதிகமாகும்.

கரும்பு சாகுபடிக்கு கம்பெனியாரும், தனிப்பட்டவர்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும் போதுமான அளவு கடன் வசதி செய்து கொடுக்கிறார்கள். இந்த வசதி இருப்பதால், சிறிய விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால், அவர்களுடைய கையில் நிலம் இருக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், இப்பொழுதுதான் திடீரென்று அமைச்சர் அவர்கள் புதிய கருத்தைச் சொல்கிறார்கள். நிலப் பிரபுக்களை அழித்துவிட்டால், வியாபாரிகள், தொழிலதிபர்கள் இவர்களிடத்தில்தான் நாட்டை ஒப்படைத்துவிட்டவர்களாவோம் என்று புதிர் போடுகிறார்கள். வியாபாரிகளும், தொழிலதிபர்களும் இன்று நாட்டை அடிமைப் படுத்தவில்லையா ? நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் சில வியாபாரிகள், சில தொழில் அதிபர்களின் கையில் சிக்குண்டுதான் தேசத்தில் உற்பத்தியாகும் பொருள்களின் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய பிடிப்பிலிருந்து நாட்டுப் பொருளாதாரத்தை விடுவிக்கவேண்டித்தான் முதல் படியாக இந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். வியாபாரிகளுடைய கையிலிருந்து நாட்டு பொருளாதாரத்தை விடுவிக்க வேண்டுமானால் நிலச் சீர்திருத்தம் அவசியமாகும். 13வது உபபிரிவு "existing sugar factory" means any sugar factory which was in existence on the date of the commencement of this Act" என்று மசோதாவில் கண்டிருக்கிறது. என்னுடைய திருத்தம், 'existing sugar factory' means any sugar factory which was in existence and was carrying on production for not less than 180 days during 1955' என்று இருக்கிறது. 1955-ம் வருஷத்தில் ஏதாவது சர்க்கரை ஆலை இருந்து, அந்தச் சர்க்கரை ஆலைக்கு நிலம் சொந்தமாக இருந்து, அந்த வருஷத்திலே உற்பத்தி செய்திருந்தால் அவர்களுக்கு இருக்கட்டும். அதன் பிறகு ஏற்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டியதில்லை. அதற்குப் பிறகு ஏற்பட்ட சர்க்கரை ஆலைகளில் ஒரே ஒரு ஆலைக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்கிறது. வேறு எந்த சர்க்கரை ஆலைக்கு நிலம் சொந்தமாக இருக்கிறது ? ஆரூரான் சர்க்கரை ஆலை ஒன்றுக்காக வேண்டி சட்டம் செய்வதென்றால் இதைவிடக் கேவலம் இருக்க முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால்தான், 1955-ம் வருஷத்தில் சர்க்கரை ஆலை இருந்து, அந்த வருஷத்தில் 180 தினங்கள் உற்பத்தி செய்திருந்தால், அது இருக்கட்டும். அப்படிப் பார்த்தால், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை, புகலூர் சர்க்கரை ஆலை ஆகிய இரண்டும்தான் அதன்படி வரும். அவைகளுக்குச் சொந்த நிலம் இல்லை. ஒரே ஆலைதான் பாதிக்கப்படும். அது ஆரூரான் சர்க்கரை ஆலையாக இருக்கும். அதற்காக வேண்டி இந்தச் சட்டம் வருகிறது. குறிப்பிட்ட ஆலைக்கு சலுகை செய்வதற்காக வேண்டிச் சட்டம் செய்வதென்றால், அது கேவலமாக இருக்கும். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கின்றேன்.

• SRI R. SRINIVASA IYER : Sir, as regards the amendment of the opposition member this is not an amendment for the purpose of definition. It is really not only an amendment to the definition

but also to Chapter V of the Bill. The hon. Member who spoke before me said that there was no propriety in legislating for the purpose of one particular individual sugar factory. But similarly his amendment relates only to that factory. Why does he want to use the words '180 days during 1955' in his amendment? Because that one particular factory Tiru Aarooran Sugar, Ltd., in Thanjavur district which is in the hon. Member's mind did not work for 180 days in that year and therefore he wants to say that the "existing sugar factory" should have worked continuously for 180 days in 1955. (The Hon. Sri C. Subramaniam: He could as well have moved an amendment that exemption should not be given to that particular factory). Yes, that is what I wanted to say. By a ruse or rather by an indirect method, he wants to say that there shall be no exemption for that sugar factory. (Interruption from Sri M. Kalyanasundaram). The hon. Member should have brought forward an amendment to the exemption clause. This matter was dealt with at length by the Select Committee and the Hon. Minister for Finance stated—I do not now want to mention the name of the factory though the hon. Member has mentioned it—that that factory had invested some crores of rupees and the World Bank had given loans to them. If we are not going to give exemption to that sugar factory which has been started a few years ago and which is not working to full capacity for want of area, what will be the result and what will happen to Tamil Nad where we are experiencing shortage of sugar and we are not getting sugar at a cheap price. Also, who is to repay the loan which is guaranteed by the Government? All these things and other conflicts will arise. In this connection, I desire to point out that enough provision has been made in Chapter V with regard to the decision of the sugar factory in respect of land to be used for cultivation of sugarcane. Clause 40 says—

'On receipt of a copy of the return, additional particulars or information, as the case may be, forwarded by the authorized officer under sub-section (4) of section 9, the Sugar Factory Board shall, after making such inquiry and inspection of the land and the existing sugar factory as it deems fit and after satisfying itself that the land which is held by the existing sugar factory as owner and in respect of which permission is required, could with advantage be used for the cultivation of sugarcane for use in the existing sugar factory, grant the permission for the whole or part of such land and subject to such conditions as it deems fit or refuse to grant such permission.'

We have got so many safeguards. Merely because it is being owned by a sugar factory, unless the land is fit for growing sugarcane and unless sugarcane is grown, it is not going to be protected. Now the very object of the present Bill is not to divide land as I said yesterday. It is to make provisions for increasing production. Sugar is also an article of food. We must provide for that. We

can't be depending always on other States for sugar. At any time they may say ' we won't give you sugar '. We are short of sugar and we must provide for enough sugar for us.

I want to refer to one another important matter. If you distribute land held or owned by a sugar factory which is a company incorporated under the Indian Companies Act, to tenants, can you compel each tenant who may have three to five acres to cultivate sugarcane? Is it possible? Then, what about the crores of rupees invested? It is our money. The very principle of the Bill is misunderstood. It is not only a question of imposing ceiling on certain people. In 1955 when this ceiling of 30 acres on an individual was not thought of, a company was started as a sugar factory and invested crores of rupees, and installed machineries. It is for the purpose of stopping that sugar factory from continuing to work, this amendment is brought forward. As such it is not proper nor is it useful for the country at large. Let me not be misunderstood as arguing for a particular individual even though the hon. Member who spoke before me argued against that individual. Generally speaking we are trying to start more sugar factories. We see co-operative sugar factories coming up wherein Government is contributing 51 per cent of the share capital. They have got all the safeguards to see that the sugar factory is rur properly because government capital has been invested. Therefore unless the land is particularly registered for growing sugarcane, sugar factories cannot exist. Therefore we have made large number of provisions in Chapter V. This amendment is not only to alter the " definition " but acceptance of this amendment will result in the amendmen of each section of Chapter V. It is not a mere amendment of the definition. It is an amendment which goes into the very root of the policy which has been accepted in the Joint Select Committee. So I oppose the amendment.

SRI V. K. KOTHANDARAMAN : உப தலைவர் அவர்களே, என்னுடைய பெயரால் வந்திருக்கக்கூடிய திருத்தத்தைப் பற்றித்தான் எனக்கு முந்தி பேசிய திருவாளர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். 1955-வது ஆண்டிலே ஆறு மாதங்கள் சர்க்கரை ஆலை நடந்திருந்தால் அதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் திருத்தம். எனக்கு முன்பு பேசிய திருவாளர் சீனுவாச ஐயர் அவர்கள் 1955-ல் ஆரம்பித்தால் அப்போது விதிவிலக்கு என்று கொடுக்கப்பட்டிருப்பதை எதிர்ப்பது ஒரு நபரை மனதில் கொண்டே செய்யப்படுகிறது, இது என் என்றார். சர்க்கரை ஆலை என்ற பெயரால் தனி நபர் நிலப் பிரபுத்துவ மனப்பான்மையை வளர்ப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் நமது நோக்கம். தனி நபர் பேரில் உள்ள விருப்பு வெறுப்பு காரணமாக இந்தத் திருத்தத்தை நாங்கள் கொண்டுவந்திருப்பதாக அவர்கள் சொல்வது சரியல்ல. எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் மசோதாவுக்குப் பொருத்தமாக உள்ள விஷயத்தைப்பற்றித் தங்கள் கருத்தை வரை மறுத்துக் கொள்ளவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : மசோதா அடிப்படையில்தான் சொல்கிறேன். மந்திரியும் சரி, மற்றவர்களும் சரி குட்டிக் கதைகள் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் எனக்கும் சொல்வதற்கு உரிமை

யுண்டு. நானும் சொல்லலாம். மசோதாவை ஒட்டின கதைதான். வீட்டுக்குள் ஒளிந்துகொண்டு பிள்ளையிடம் அப்பா இல்லை என்று ஒரு தந்தை சொல்லச் சொன்னாராம். அந்தப் பிள்ளை அப்பா குதிருக்குள் இல்லை என்று சொன்னதாக ஒரு கதை உண்டு. அப்படி எங்கள் அப்பா குதிருக்குள் இல்லை என்கிற மாதிரி தனி நபரிடத்தில் நாங்கள் கொண்டுள்ள விருப்பு வெறுப்பு காரணமாக நாங்கள் இந்தத் திருத்தத்தை கொடுத் திருக்கிறோம் என்று சொல்லுவதை அவர்கள் அந்த தனி நபருக்காக வேண்டி சட்டத்திலேயே பாதுகாப்பு கொடுக்கிற ஒரு தன்மையைத்தான் காட்டுகிறது. உச்ச வரம்பு மசோதா வரப்போகிறது என்பதற் காகவே சர்க்கரை ஆலை பேரில் நிலத்தை சிலர் எழுதி வைப்பதும் நமக்கு சர்க்கரை வேண்டாமா ? சர்க்கரை ஆலைக்கு நிலம் தனியாக கொடுக்கத்தான் வேண்டும் என்று இவர்கள் சொல்லுவதும் நமக்கு எதன் காரணத்தினால் என்பது புரியாததல்ல. இன்றைக்கு $4\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய வகையில்—நாம் இங்கே பணத்தைக் கொடுத்தாலும் சர்க்கரை கிடைக்காமல் திண்டாடுகிறோம்—வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைப் பார்க்கிறோம். ஆகவே இன்றைய தினம் நிலப் பிரபுத் தன்மைக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் தனி நபருடைய ஆதிக்கத்துக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சர்க்கரை ஆலை என்ற பெயரால் விதிவிலக்கு அளித்து விவசாய மக்களுக்கு பெரும் தீங்கை இழைத்துவிடக்கூடாது. ஆகவே தயவுசெய்து திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN : சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, இங்கு வந்துள்ள திருத்தத்தின் நோக்கம் சர்க்கரை ஆலை களின் பெயரால் தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தின் உரிமையை விட்டுவிடக் கூடாது என்பதுதான். ஏதாவது ஒரு சர்க்கரை ஆலை கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்பட்டால் அந்தக் கூட்டுறவு ஆலைகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கு மானால் அந்த ஆலைகளுக்கு சொந்தமான நிலங்களுக்கு வேண்டுமானால் விலக்களிக்கலாம். அந்த நிலையை நாம் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். நில உச்சவரம்பு சட்டம் வருகிறது என்று தெரிந்து அதி லிருந்து தப்பித்துக்கொள்வதற்காகத் தனிப்பட்ட நபர்களை நம்புவதைக் காட்டிலும் இப்படி ஒரு தொழிற்சாலையை நம்பலாம் என்ற அடிப்படைக் கருத்தில் ஏறத்தாழ 3,000, 4,000 ஏக்கராக்களை அந்த ஆலைகளின் பெயரால் எழுதி வைப்பதும், ஆட்சியாளர் அதற்கு விலக்கு அளிப்பதும் சரியான முறை ஆகாது.

சர்க்கரை ஆலை வளரத்தான் வேண்டும். அதன் மூலம் தொழில் வளர வேண்டும் என்ற கருத்துடையவன் நான். ஆனால் அதற்காக தனிப்பட்ட முதலாளிகளுக்கு இத்தகைய ஒரு பாதுகாப்பையும் அளித்து நிலப்பிரபுவின் உடமையையே பாதுகாப்பது சரியாகாது. இந்தச் சர்க்கரை ஆலைகளுக்காக எழுதி வைத்திருக்கிற நிலம் கரும்பு விளைவிப்பதற்கு ஏற்றது தான் என்பதை நமது அரசாங்கத்தின் விவசாய இலாக்காவைச் சேர்ந் தவர்களாவது பரிசீலனை செய்து பார்த்தார்களா என்று கேட்க விரும்பு கிறேன். ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு உரிய நிலத்தில் ஏக்கருக்கு 13 டன்னாக இருந்த கரும்பு விளைச்சல் 18 டன் அளவு விளைந்திருக்கிறது. மற்ற இடங்களில் 30 டன் 40 டன்னாக கரும்பு விளைச்சல் இருக்கிறது. இருந்தும் கூட பெருமளவிற்கு இந்தச் சட்டத்திலிருந்து தப்ப வேண்டும் என்பதற்கு கரும்புக்கு லாயக்கில்லாத நிலத்தைக்கூட ஆலையின் பேரால் எழுதிவைத்து தப்பித்துக்கொள்ளுவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே நான் சொல்லிக் கொள்ளுகிறேன், சர்க்கரை ஆலைக்கு உரிமை இருக்க வேண்டுமென்று 10-30 கருதினால் அது கூட்டுறவு சர்க்கரை ஆலையாகத்தான் இருக்க வேண்டும். a.m. அல்லது எந்த ஆலையானாலும், கரும்பு விளைச்சல் நிரந்தரமாகக் கிடைக்க வேண்டுமே என்றால், உச்ச வரம்புச் சட்டத்தால் கரும்பு விளைச்சல் எப்படிப் பாதிக்கப்படும் என்று நான் கேட்க விரும்புகிறேன். உச்ச வரம்பு முறைப்படி அந்த நிலத்தை அரசாங்கம் மேற்கொண்டு, அந்த நிலத்திற்காக ஒரு

நஷ்டாட்டை சர்க்கரை ஆலைக்கு உரியதாக ஆக்கிவிட்டு அந்த நிலத்திலே கரும்புதான் விளைவிக்க வேண்டும் என்பதற்காக, கூட்டுறவு பண்ணை முறை அமைத்துவிட்டால், அதன் மூலமாகக் கரும்பை விளைவித்து சர்க்கரை ஆலைக்குத் தருவதற்கு இந்த அரசாங்கத்தால் முடியாதா ? கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்துவதன் மூலமாக, கரும்பு உற்பத்தியை நிரந்தரமாக்கி யாருக்கும் விதி விலக்கு அளிக்கப்படாமல் உச்ச வரம்புச் சட்டத்தை நிறை வேற்றலாம்.

அந்தச் சர்க்கரை ஆலை உலக பாங்கிலே கடன் வாங்க, நம்முடைய அரசாங்கம் அதற்குத் துணையாக இருந்திருக்கிற காரணத்தினால், அரசாங்க சார்பிலே கடனுக்கு ஈடு தருகிறோம் என்று தெரிவித்த காரணத்தால், அந்த நிலத்திற்கான உரிமை அந்த ஆலை பெற்றிருக்க வேண்டுமென்று அமைச்சர்கள் கருதக்கூடும். அப்படிக் கருதுவது எந்த வகையிலும் நீதிக்கு ஒத்ததாகாது.

பெரிய மிராசுதார்கள் இப்பொழுது எண்ணிக்கொண்டிருப்பார்கள், அப்போதே சர்க்கரை ஆலை வைக்கத் தவறிவிட்டோமே என்று. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு இடம் தராமல் உச்சவரம்பு சட்டம் செய்யப்பட வேண்டும். சர்க்கரை ஆலைக்கு நிலம் என்ற பெயரில் இந்தச் சட்டம் பயன்படாமல் போகச் செய்யாமல், அந்த நிலத்தை அரசாங்கம் மேற் கொள்வதற்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் கரும்பு உற்பத்தி செய்வது அந்தச் சர்க்கரை ஆலைக்குத்தேவையென்றால், கூட்டுறவுப் பண்ணை மூலமாக அதே கரும்பை உற்பத்தி செய்து அதே சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கவேண்டுமென்ற முறையை ஏற்படுத்தவேண்டும். இந்தச் சட்டத்தில் இருந்து முழு விதிவிலக்கு அளிப்பது நியாய மில்லை என்பதால் இந்தத் திருத்தத்தை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்த்து ஏற்கவேண்டும்.

மற்ற மாகாணங்களில் இப்படிச் செய்கிறார்கள், அதனால் நாங்களும் செய்கிறோம் ; அங்கே விதிவிலக்கு அளிக்கிறார்கள், ஆதலால் நாங்களும் அளிக்கிறோம் ; அங்கே பணம் உள்ளவர்களுக்கு செல்வாக்கு இருக்கிறது. இங்கேயும் இருக்கத்தான் செய்யும் என்று அந்த முறையிலே பேசாமல் உச்ச வரம்புச் சட்டத்தில் இப்படிச் சர்க்கரை ஆலைகளுக்கு முறைகேடான விதிவிலக்கு அளிக்காமல் இருப்பதற்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Sri K. R. NALLASIVAM : கனம் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். மற்ற மாகாணங்களிலே சர்க்கரை ஆலைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரை விதிவிலக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் அழுத்தம் திருத்தமாக சொல்ல விரும்புகிறேன். மற்ற மாகாணங் களில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 18 அல்லது 25 டன்வரைதான் உயர்ந்த பட்சமாகக் கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். இன்றைக்கு பெரும்பாலான விவசாயிகள் ஏக்கருக்கு 40 டன் கூட கரும்பு உற்பத்தி நம் ராஜ்யத்தில் செய்கிறார்கள் என்று நான் சொல்ல முடியும். நம் மாகாணத்தில் பள்ளம் படுகில் உள்ள ஒரு சில பகுதிகளில் உற்பத்தி அளவு குறைவாக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் அங்கங்கே எல்லாப் பகுதிகளிலும் சராசரி ஏக்கருக்கு 40 டன் கரும்பு எடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

(Srimathi T. N. Anandanayaki in the Chair.)

கரும்பு உற்பத்தியை பெருக்கவேண்டியதில் சிக்கல் இருந்தால் அதை சட்டபூர்வமாக தீர்க்க வழிவகை செய்யலாம். ஆனால் இந்தச் சட்டத்திலே இதற்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டிய

20th September 1961] [Sri K. R. Nallasivam]

அவசியம் இல்லை. கோவை ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் சர்க்கரை ஆலைகள் ஏற்படுகின்றன. அவைகள் எல்லாம் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்பு பூராவையும் ஒட்டு மொத்தமாக அரைக்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றன. தனிப்பட்ட நபர் களுக்கு இந்தச் சட்டத்திலே விதிவிலக்கு கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்று சொல்லி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri N. K. PALANISAMI : கனம் சபைத் தலைவி அவர்களே, ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். கரும்பு அதிகமாக உற்பத்தி செய்தும்கூட சர்க்கரை போதுமான அளவு கிடைக்கவில்லை. ஆகையால் விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று வாதம் செய்யப்பட்டது. மத்தியப் பிரதேசத்திலும் மகாராஷ்டிரத்திலும் அவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்காமல் இருக்கும்போது நாம் மாத்திரம் விதிவிலக்கு கொடுக்கக் காரணம் என்ன? நம்மைவிட அதிகமாக உற்பத்தி செய்யும் மற்ற ராஜ்யங்களில் விதி விலக்கு கொடுக்கவேண்டாமென்று திட்டக் கமிஷன் சொல்லி இருக்கும் போது நம் ராஜ்யத்தில் மட்டும் விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று ஏன் சொல்லவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. திட்டக் கமிஷன் சொன் னதை மீறி அவர்களாகவே விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. திட்டக் கமிஷன் பொதுவாக எல்லா ராஜ்யங் களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் நடக்க வேண்டும். இங்கு மட்டும் விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, மகாராஷ்டிர மாகாணத்திற்கு மாத்திரம் விதிவிலக்குக் கொடுக்கக் கூடாது என்று சொன்னதற்கு என்ன காரணம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்தத் திருத்தத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMY : கனம் தலைவி அவர்களே, சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு பயிரிடுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்களைப் பொறுத்தவரை இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கக் கூடிய நிலைமையை எதிர்த்து பேசுகின்ற நிலையில் நான் சில வார்த்தை கள் சொல்ல விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும் என்ற முன் யோசனையின் பேரில் தனிப்பட்டவர்கள் தங்களுடைய நிலத்தை கரும்பு பயிரிடுவதற்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட் டத்தில் 4,000 ஏக்கர் நிலம் சர்க்கரை மில்லுக்கென்று ஒதுக்கி இப்போது நிலச்சீர்திருத்த சட்டத்தில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கான ஒரு வழியை முன்கூட்டியே செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்பாட்டைத் தகர்த்தெறியும் முறையிலே அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டுமே அல்லாது அப்பேர்ப்பட்ட பாதுகாப்பு அளிக்கும் முறையிலே இந்த ஷரத்து உதவக் கூடாதென்ற காரணத்தினால்தான் நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

ஆலைகளுக்கு நிலம் சொந்தமாக இருக்குமானால் அந்தப் பகுதியில் இருக்கும் தனிப்பட்ட விவசாயிகளுக்கு பதிவு கிடைக்காது, அப்படி பதிவு கிடைத்தால் அவர்கள் எந்த நேரத்தில் வெட்டுவதற்கு ஆர்டர் கொடுக்கவேண்டுமோ அந்த நேரத்தில் கொடுக்காமல் காலம் கடத்தி போடுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு தொல்லை ஏற்படும். இந்த பகுதி விவசாயிகளுக்கு பரவலாக பதிவு கிடைப்பது கரும்பு பயிரிடக்கூடிய விவசாயிகளுக்கு ஏழை எளிய விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்காதபடி வெளி ஆலை முதலாளிகள் இடையூராக இருப்பார்கள் என்ற காரணத் தினால்தான் கரும்பு ஆலைகளுக்கு நிலம் ஒதுக்குவதை நான் எதிர்க் கிறேன்.

என் மாவட்டத்தைப் பொறுத்தவரை நெல்லிக்குப்பம் ஆலைக்காக சில நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பதிவு செய்யாமல் உள்ள அரியலூர்

ஆலைக்கு நிலங்களை ஒதுக்கி வருகிறார்கள். அதன்மூலமாக அங்கு இருக்கும் விவசாயிகளுக்கு பதிவு கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லாமல் அவர்கள் கரும்பு அறுவடை செய்கிற காலத்தில் கண்டிப்பாக விலைக்கு அளிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆலை முதலாளிகள் அடிக்கடி ஒரு குறிப்பிட்ட அளவு கரும்பை கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆலைகளுக்கு சொந்தமாக உள்ள நிலங்களில் விளைகிற கரும்புக்கு முதல் சலுகை காட்டி தனிப்பட்ட விவசாயிகளுடைய நிலங்களுக்கு இரண்டாவது சலுகை காட்டப்படுகிறது. என்னுடைய தொகுதியில் மதுரைப்பாக்கம் கிராமத்தில் லக்ஷ்மிநாராயண ரெட்டியார் என்பவர் கரும்பை வெட்டி ஆலைக்குக் கொண்டு போனார்கள். ஆலை முதலாளிகள் அதை எடுக்க மறுத்துவிட்டார்கள். பத்து, 15 லாரி லோட் கரும்பு ஆலை எதிரிலேயே போடப்பட்டு இன்றையதினம் விறகாகும் நிலைமையில் இருக்கிறது. போலீஸ் பந்தோபஸ்த் போட்டு கரும்பை காயவைத்து விட்டார்கள். ஆலை முதலாளிகள் ஆணவத்தின் காரணமாக பயிரிடு கின்ற விவசாயிகளின் நிலைமை அங்கே பாதிக்கும் சூழ்நிலை இருப்பதால் ஆலைகளுக்கு கரும்பு பயிரிடும் உரிமை தரப்பட்டது. விவசாயிகள் பாதிக் கப்படுவார்கள் என்ற காரணத்தினால் இந்தத் திருத்தத்தை ஆதரித்து மசோதாவில் கண்டிருக்கும் ஷரத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : ஸ்ரீமதி அம்மா அவர்களே, தனிப்பட்ட நபர் என்றால் எப்படியெப்படியிருக்குமோ அது அரசாங் கத்திற்குத் தெரியாது. விதிகளை ஏற்படுத்தும்போது "கன்ஸிஸ்டன்ட்டாக" இருக்கவேண்டும். முன்பும் "கமென்ஸ்மென்ட் ஆப் தி ஆக்ட்" என்று போட்டிருக்கிறோம். இங்கும் அப்படியே போட்டிருக்கிறோம். ஆனால் அவரவர்கள் இஷ்டப்படி வியாக்கியானம் செய்துகொள்ளலாம். நமக்கு சர்க்கரை ஆலைகள் வேண்டும். தாற்காலிகமாக அதிகமாகயிருக்கிறதே தவிர நமது சர்க்கரை தேவை அதிகமாகிக்கொண்டு போகிறது. நாம் நினைக்கும் இடத்தில் சர்க்கரை ஆலை ஆரம்பமாகாது. அதற்கு நிறைய மூலதனம் வேண்டும். 1½, 2 கோடி ரூபாய் மூலதனம் வேண்டும். எங்கு அதை ஆரம்பிக்கும் சூழ்நிலையிருக்கிறதோ அதைத் தடுத்தால் வேறு இடத்தில் ஆரம்பிக்கலாம் என்ற நிச்சயமில்லை. முன் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், தனிப்பட்ட ஒரு விவசாயி கரும்பைக் கொண்டு போய் அந்த ஆலையில் எடுத்துக்கொள்ளவில்லை என்று. அதற்கு நேர் விரோதமாக கரும்பு கொடுக்க மாட்டேன் என்று சொல்லும் சூழ்நிலையும் ஏற்படும்.

SRI A. GOVINDASAMY : என்னுடைய சந்தேகத்திற்கு விளக்கம் சொல்ல வந்த அமைச்சர் அவர்கள், கரும்பை விவசாயிகள் கொடுக்கமாட்டேன் என்று சொல்லும் சூழ்நிலை ஏற்படும் என்று சொன் னார்கள். விவசாயிகள் கரும்பை உற்பத்தி செய்து ஆலையில் கொடுத்து பணம் சம்பாதிக்க விரும்புவார்களேயல்லாது கரும்பு கொடுக்க மாட்டேன் என்று மறுக்கும் நிலை இதுவரை வந்ததில்லை. அப்படி ஏதாவது வந்திருந்தால் அதைச் சொல்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வந்தாலும் வரலாம் என்றுதான் சொன்னேன். அந்தமாதிரி சூழ்நிலையும் ஏற்படலாம். பொதுவாக விஷயத்தைப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட முறையில் அப்படி இப்படி என்று சொல்லக் கூடாது. ப்ளானிங் கமிஷன் எப்படி சொல்லியிருக்கிறதென்றால், அவர்களே சில சிபார்சுகளைச் செய்திருக் கிறார்கள். சர்க்கரை ஆலைக்கு விதிவிலக்கு கொடுக்கலாம். வெல் மானேஜ்ட் பார்ம்ஸ், விசாலமாக இருந்து, பண்ணை நன்கு நடந்து உற்பத்தி அதிகமானால் அதற்கு விதிவிலக்கு கொடுக்கலாமென்று சொல்லி யிருக்கிறார்கள். நாம் அதற்கு கொடுக்கவில்லை. சர்க்கரை ஆலைக்கும் எடுத்த எடுப்பில் கொடுக்கவில்லை. சில இடங்களில் கொடுத்திருக்கிறார் கள். ஷுகர் போர்ட் ஏற்படுத்தி அவர்கள் விசாரித்து கொடுக்கலாமா, கூடாதா என்ற பொறுப்பு அலாதியான ஒரு குழுவுக்கு கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆகவே அதில் ஆட்சேபணைக்கு இடமில்லை. சர்க்கரை ஆலை ஏற்படுவதால் விவசாயிகள் வெளியேற்றப்படுவார்கள் என்ற சூழ்நிலையும்

ஏற்படாது. ஆகவே இம்மாதிரி ஒரு விதியிருப்பதில் தவறில்லே. 1955–ல் 180 நாட்களுக்கு குறைவின்றி வேலே செய்வதென்ருல், குறிப்பிட்ட நபரை மனதில் வைத்துக்கொண்டுதான் இது கொடுக்கப்பட்டிருப்பதாக ஏற்படு கிறது என்று ஸ்ரீனிவாச அய்யர் அவர்களும் சொன்ஞர்கள். மற்றபடி வேறு சிக்கல்கள் இருப்பதாகவும் சொன்ஞர்கள். அவை, பொறுக்கு கமிட்டி விவாதத்தில் வந்தது. உலக பாங்க் பணம் கொடுத்திருக் கிறது. அதன் டீட்டெயில்ஸ்க்கு போகவேண்டியதில்லே. விதிவிலக்கு கொடுக்கலாம் என்று ப்ளானிங் கமிஷனும் சொல்லியிருக்கிறது. அதை ஒத்துக்கொள்ளாமல், எந்தெந்த சூழ்நிலேயில் கொடுக்கலாம், கொடுக்க லாமா, கூடாதா என்று சொல்ல தனிப்பட்ட குழுவிற்கு அதிகாரம் கொடுக் கப்பட்டிருக்கிறது மசோதாவில். இது நல்ல முறையில் அமைந்திருக் கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தை ஒத்துக்கொள்வதற்கில்லேயென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (SRIMATHI T. N. ANANDA-NAYAKI) : Now, I shall put the amendment to the vote of the House. Since the hon. Member Sri M. Kalyanasundaram is not in his seat, his amendment is deemed to have been withdrawn.

SRI V. K. KOTHANDARAMAN : I request that the amendment be put to vote.

The amendment was put and lost.

Sub-Clause 14

SRI N. K. PALANISAMI : I move—

In clause 3, *for* sub-clause (14), *substitute* the following :—

" ' Family ' means the person, the wife or husband, as the case may be, of such person, and his or her numarried minor children ".

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : I move the following amendment :—

In sub-clause (14), item (i), *delete* the word " minor ".

The amendment was duly seconded.

TEMPORARY CHAIRMAN (SRIMATHI T. N. ANANDA-NAYAKI) : The sub-clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : தலேவி அவர்களே, இன்றைய தினம் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் பூமிக்கு உச்ச வரம்பு கட்டுவதா அல்லது குடும்பத்திற்கு பொதுவாக கட்டுவதா என்ற பிரச்னே தான் நம் முன் நிற்பது. தனிப்பட்டவர்கள் இவ்வளவுதான் வைத்துக் கொள்ளவேண்டுமென்று உச்ச வரம்பு கட்டிஞல் யாருக்கும் கொஞ்சமும் பூமி இல்லாமல் போகும். ஆகவே, பாமிலி என்பதை ஒரு யூனிட்டாகக் கொண்டு அதற்கு இந்தளவு வைத்திருக்க வேண்டுமென்பதுதான் உச்ச வரம்பு. பொதுவாக, யூனிட் என்று எடுக்கும்போது குடும்பத்தைத்தான் யூனிட்டாக எடுத்துக்கொள்ளவேண்டும். தனித்தனியாக பூமி இருந்தாலும்

குடும்பமாகத்தான் வாழ்கிறார்கள். தங்கள் தங்களுக்கு கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்கவேண்டுமென்பதற்காக அல்ல அப்படி வாழ்வது. கூட்டாக வாழவேண்டுமென்பதற்காகத்தான். ஆக, "ஹூமன் சோஷியல் யூனிட்" டாக இருக்கிறது. ஒரு குடும்பம் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அதில் ஐந்து மெம்பர்கள் இருந்து, இரண்டு மாடுகள் வைத்து விவசாயம் செய்கிறார்கள். ஒரு குடும்பம் இரண்டு மாடுகளை வைத்துக்கொண்டு எந்த அளவு விவசாயம் செய்ய முடியும் என்று பார்த்தால் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் விவசாயம் செய்ய முடியும். ஆக ஒரு குடும்பத்தை ஒரு "ப்ளவ் யூனிட்" என்று வைத்துக்கொள்ளலாம். அதிகமாகப் போனால் மூன்று ப்ளவ் யூனிட் இருக்கலாம் என்று மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் வந்த மசோதாவில் இரண்டு பேர்கள் மேஜர்களாக இருந்தால் கூட குடும்பம் என்று வரும். இதில் இரண்டுபேர் மேஜராக இருந்தால் இரண்டு குடும்பங்களாகும். இப்பொழுது, 11 பேர்கள் இருந்தால் 60 எக்கர் வரை வைத்துக்கொள்ள இடமிருக்கிறது. ஒருவருக்கு இரண்டு மேஜர் ஸன்ஸ் இருந்தால், தகப்பனுக்கு 30 எக்கர் வைத்துக் கொண்டு அவர்கள் இரண்டு பேர்களுக்கும் 30, 30, எக்கர் என்று கொடுத்து விட்டால் 100 எக்கர் ஒருவருக்கு இருந்தாலும், பத்து எக்கர் தான் மிச்சமாகும். இரண்டு மைனர் ஸன்ஸ் இருந்தால் பத்து எக்கரையும் எடுக்கவேண்டியதில்லை. ஆகவே இதில் 100 எக்கர் வரையிலும் வைத்துக்கொள்வதற்கு வசதியிருக்கிறது. ஒவ்வொருவரும் 10 எக்கர் என்ற முறையில் இன்னும் அதிகமான அளவு வைத்துக்கொள்வதற்கு இந்த மசோதாவில் இடமிருக்கிறது. ஆகவே, உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று நிர்ணயித்திருந்தாலும் இதில் 100 எக்கர் வரை வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுப்பதுபோல்தான் இருக்கிறது. அந்த முறையில்தான் இந்த டெஃபினிஷன் அமைந்திருக்கிறது. மேஜர் ஸன் என்றிருந்தாலும் சரி, மைனர் ஸன் என்றிருந்தாலும் சரி, ஒரு குடும்பம் ஒரு யூனிட் என்ற முறையில் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். அதை எற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : Madam, so far as the definition of the word 'family' is concerned, I think it creates some complications and does not fit in well with the spirit of the legislation. As the definition now stands, it excludes the category of individuals, viz., unmarried sons and unmarried grandsons. We do not understand on what principle this category of individuals has been excluded from the purview of the definition.

Coming to the Explanation, I wish to point out that it is rather exclusive in character. It only refers to minor sons, minor grandsons and unmarried granddaughters. It excludes unmarried sons and unmarried grandsons.

THE HON. SRI C. SUBRAMANIAM : They are also included in the definition.

SRI T. T. DANIEL : It is not clear. I feel that they are not included in the definition. The definition of 'family' as it now stands does not include unmarried major sons and grandsons. I am only expressing my opinion. We do not know why that category of individuals has been excluded. As I said before, the Explanation is rather exclusive in character. While imposing the ceiling area, we have followed the cardinal principle, viz., that the ceiling area must be the same for all citizens of the State

irrespective of caste, creed or personal law which govern them. According to that principle, we have prescribed 30 standard acres. But, in the Explanation, that principle has not been followed. When we fix the ceiling area so far as the 'family' is concerned, we have adopted more or less impliedly or expressly, two kinds of definition, one pertaining to groups of individuals in the State who are governed by the Hindu Law and another for the citizens of the State who are not governed by the Hindu Law. In the result, we are adopting a particular kind of ceiling area for one section of citizens and another kind of ceiling for another section of citizens of the State. I would only like to ask whether it is correct and proper. If it is the object to exclude such of those minor sons and minor grandsons between whom and other members of the family a partition has taken place, why should it be only in respect of the members who are governed by the Hindu Law? I want that the Explanation should be comprehensive and should be made applicable to other citizens of the State irrespective of the personal law by which they are governed. I wish to suggest some alteration to this sub-clause. After item (ii) of sub-clause 14, we can add 'and shall not include sons or grandsons or minor sons or minor grandsons between whom and other members of the family a partition by means of a registered instrument has taken place before the date of the commencement of this Act.' Then, it will fit in well with the spirit of the legislation. I shall also draw attention to another difficulty. Here, much emphasis is laid on the partition which has been effected by a registered instrument. There can be also a partition by court decree. But, here, they have contemplated partitions among these people only through a registered instrument. As there can be partitions effected through court decrees also, we will have to make it clear that all partitions whether effected through registered instruments or through court decrees will be taken into account. These are the few points to which I wish to draw the attention of the Government. I request the Government to take these points into consideration and make suitable modifications in the definition of the word 'family'.

THE HON. SRI C. SUBRAMANIAM: தலைவி அவர்களே, இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று இந்தச் சட்டத்தில் குடும்பம் என்று வரும்போது எப்படியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும். இதை நாம் நிர்ணயம் செய்யும்போது இரண்டு விதமாக பார்க்கவேண்டும். ஒன்று, ஒரு குடும்பத்தில் ஐந்து பேர்களுக்கு மேல் இருப்பார்களேயானால் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் வைத்துக்கொள்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது குடும்பத்திற்குள்ளேயே இருக்கின்றவர்கள் தனிப்பட்ட முறையில் சொத்து வைத்திருக்கின்றவர்கள், குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் 10 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்று மொத்தமாக 60 ஏக்கர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் நிர்ணயித்திருக்கிறோம். இதில் யாரை யாரை குடும்பத்தில் சேர்ப்பது என்பதை கவனிக்கும் போது, திரு. டானியல் அவர்கள் குறிப்பிட்டது குடும்பத்திலுள்ள உரிமை எல்லா இடத்திலும் ஒரே மாதிரியல்ல. ஹிந்து சட்டப்படி ஆண்களுக்கு தனிப்பட்ட உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று கிருஸ்தவர்களுக்கு வேறு சட்டமிருக்கிறது.

அவிபக்த குடும்பமாக இருந்தால் அதாவது பாகம் செய்யாத குடும்பமாக இருந்தால் குடும்பத்தில் யார் யாருக்கெல்லாம் உரிமை இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஹிந்து சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

ஜாயின்ட் ஃபாமிலி என்று வரும்போது இந்துக்களுக்குத்தான் வருகிறது. கிருஸ்துவர்களுக்கு கிடையாது, முஸ்லீம்களுக்கு கிடையாது. இதில் இப்போதிருக்கின்ற சட்டத்தின் மூலமாக பார்க்கின்றபோது, அவிபக்த குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தைக்கும் அந்தக் குடும்பத்தில் உரிமை ஏற்பட்டுவிடுகிறது. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். புதிதாக உரிமை வருவதில்லை, பாகமாகாத குடும்பமாக இருந்தால் அந்த குடும்பத்திற்கு இருக்கின்ற பொது சொத்தில் புதிதாக பிறக்கின்ற ஆண் குழந்தைக்கு உரிமை வந்துவிடுகிறது. பிறப்பதற்கு முன்னால் கூட உரிமை உண்டு. இருந்தாலும் குழந்தை பிறந்த பின்னால்தான் உரிமை செயல்படுத்தப் படுகிறது. வெறும் சொத்து உரிமை இருப்பது அல்ல. மைனருக்கு பாகம் கேட்கக் கூடிய உரிமை அதன் மூலம் இருக்கிறது என்பதை நாம் முதலில் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். தகப்பனாருக்கு சொத்து இருந்தால், அல்லது பொது குடும்ப சொத்தாக இருந்தால், பிறக்கின்ற ஆண் குழந்தைகள் எல்லோருக்கும், பேரனுக்கும் இரண்டாவது பேரனுக்கும் அதில் பாத்தியம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

11-00 a.m. இரண்டாவது கிரிஸ்தவர் குடும்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள். குடும்பம் என்று சொல்லும்போது பொதுவாக எல்லோரும் சேர்ந்து வாழ்வதைக் குடும்பம் என்று சொல்கிறோம். தகப்பன் வழியாக இருந்தாலும் சரி, அல்லது பூர்வீக சொத்தாக இருந்தாலும் சரி, அல்லது தானாக சம்பாதித்த சொத்தாக இருந்தாலும் சரி, தகப்பனார் பேரில் சொத்து இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு அதில் எந்தவிதமான பாத்தியமும் இல்லை. கணவன் என்ற முறையில் மனைவிக்கு ஜீவனாம்சத்திற்கு வழி செய்தாலொழிய அதில் மற்றவர்களுக்கு உரிமை கிடையாது. தகப்பனார் பெயரில் இருக்கக்கூடியது தகப்பனாருக்குத்தான். அவர் இறந்த பிறகு வேண்டுமானால் அந்த வம்சாவளியில் யாருக்கு வரவேண்டுமோ அவருக்கு வரலாம். அது வேறு விஷயம்.

இப்படி இதையும் மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த குடும்பம் என்பதற்கு ஒரு டெஃப்பனிஷன் கொடுக்கும் அவசியம் இருக்கிறது. இப்படி இரண்டையும் மனதில் வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு இரண்டு பேர்களுக்கும் நியாயம் செலுத்த முடியும் என்று யோசித்துப் போட்டிருக்கிறோம். ஒரு விதமாகப் போட்டால் ஹிந்துக் குடும்பங்களை பாதிக்கிறது. இன்னொரு விதமாகப் போட்டால் ஹிந்துக்களல்லாத குடும்பங்களை பாதிக்கிறது. செலெக்ட் கமிட்டியில் இதைத் திருத்தம் செய்ததற்கே முக்கிய காரணம் இரண்டு குடும்பத்தாருக்கும் ஓரளவு நியாயம் கிடைக்கக் கூடிய முறையில், அதிக வித்தியாசம் இல்லாமல் சொத்து உரிமை இருக்க, நிலத்தை வைத்துக்கொள்ள, இந்த முறையில் திருத்தி அமைத்தால் முடியும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஹிந்து குடும்பத்தை எடுத்துப் பார்க்கலாம். ஹிந்து குடும்பத்தில் மைனருக்குக்கூட பாகம் வாங்க உரிமை இருக்கிறது. அந்த உரிமையைப் பயன்படுத்தி பாகமாகியிருந்தால் என்ன ஆவது என்று கேள்வி கேட்கப்படுகிறது. இன்றைக்கு இருக்கும் சட்டப்பிரகாரம் ஒவ்வொருவரும் பிரித்துக்கொண்டு அவரவர் பேருக்கு சொத்து வைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக அந்த உரிமையைப் போக்க முடியாது. இனிமேல் பிறக்கின்ற குழந்தைகளுக்கு இந்த உரிமை இல்லை என்று வேறு சட்டம் வேண்டுமானால் செய்யலாமே தவிர லாண்ட் ஸீலிங் சட்டத்தின்மூலம் அதை மாற்றி அமைக்க முடியாது. இங்கே

இருக்கக்கூடிய எக்ஸ்ப்ளனேஷனில் இருக்கக்கூடிய உரிமையை ஒப்புக் கொள்ளுகிறோம் என்று இருக்கிறதே தவிர புதிதாக உரிமை ஒன்றும் கொடுக்கவில்லை. இதிலே குழப்பமில்லாமல் இருப்பதற்காகப் போட்டிருக் கிறதே தவிர புது உரிமை எதையும் யாருக்கும் கொடுக்கவில்லை.

அதைவிட்டு ஹிந்து குடும்பங்களில் பாகம் பண்ணியது போக, பாகம் பண்ணாமல் இருந்தால் மைனராக இருந்தாலும், மேஜராக இருந்தாலும் அது ஹிந்து ஜாயின்ட் ஃபாமிலி ஆகிவிடுகிறது—அது வேறு. இன்றைக்கு இந்த மாதிரி பாகம் செய்து விட்டார்கள் என்று சொல்லுவது வாஸ்தவம். ஆண் குழந்தைகள் இருந்தால், அங்கெல்லாம் பாகம் செய்திருக்கிறார் கள். ஆகையால் அது ஒரு யூனிட்டாக இருந்தால் ஒவ்வொருவரும் 30 ஏக்கர் பெற உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இங்கே இப்படி இருக்கும்போது கிரிஸ்தவ குடும்பத்தை எடுத்துப் பாருங் கள். ஹிந்துக்கள் மாதிரியே கிரிஸ்தவர்களுக்கும் போட்டால் என்ன ஆகிறது ? எல்லோருமே இந்தக் குடும்பத்தில் வந்து சேர்ந்து விடுகிறார்கள். மேஜர் ஆகிவிட்டால் தனி உரிமை இருக்கும் காரணத்தினால் அவர்களுக்கு மேஜர் என்பது இல்லாமல் கிரிஸ்தவ குடும்பம் என்று சொன்னாலே யார் யார் அவர்கள் பேரில் அண்டிப் பிழைக்கிறார்களோ அவர்களை குடும்பம் என்று சொல்லப்படுகிறது. குடும்பம் என்றால் மனைவி, மைனர் குழந் தைகள் என்று ஆகி விடுகிறது. மேஜரானவுடன் தனிப் பொறுப்புள்ள வனாகிவிடுகிறான். அதே மாதிரி ஒரு பெண் கல்யாணம் ஆகும்வரையில் தகப்பனை அண்டிப் பிழைக்கிறாள். ஆகையால் அவர்களும் குடும்பத்தில் வருகிறார்கள். அவர்களையும் கணக்கிட்டு 5 பேர், 10 பேர் இருக்கும் என்று பார்த்து ஃபாமிலி டெஃபனிஷன் போட்டிருக்கிறது. இதன் காரணமாக பல பேர்கள் நினைக்கிறார்கள் சொத்து இருக்கிறவர்களுக்கு மைனர் இருந் தாலும் தனியாக 10 ஏக்கராவது கொடுக்கவேண்டும் என்று. முக்கிய காரணம் ஹிந்து குடும்பங்கள் பாதிக்கப்பட்டால் பல பேர்கள் பாகப் பிரிவினை செய்துகொண்டிருப்பார்கள். வெறும் 5 மட்டும் போட்டிருந்தால் 5 பேராக இருந்தால் தனியாக மைனர் பேரில் சொத்து இருந்தாலும் யாரும் தனியாக வைத்துக்கொள்ளமுடியாது. ஆகையால் இரண்டுக்கும் உள்ள தாரதம்மியத்தை நீக்க மைனர் பேரிலும் தனியாக சொத்து இருந்தால் ஒவ்வொருவருக்கும் 10 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று போட்டிருக்கிறது. ஹிந்து குடும்பத்திற்காக அல்ல. ஹிந்துக்களல்லாதவர் களுடைய குடும்பங்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று 10 ஏக்கர் என்று போட்டிருக்கிறது. இரண்டையும் வைத்துப் பார்த்தால் இதைத் தவிர வேறு விதத்தில் போட்டால் ஹிந்துக்களுக்கு சாதகமாகப் போகிறது. அது இன்னொருவருக்கு பாதகமாகப் போகிறது. இரண்டையும் சமன் செய்ய யோசனை செய்து இரண்டு குடும்பத்திற்கும் ஹிந்து குடும்பத்திற்கும், ஹிந்துக்களல்லாதவர்களுடைய குடும்பத்திற்கும், நியாயம் வழங்கவேண்டு மென்று பூராவும் ஒரே மாதிரி வந்துவிடாது. ஓரளவாவது வர வேண்டு மென்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் டேனியல் அவர்கள் ஹிந்துக்களுக்கு அதிக சாதகம் செய்வதாகவும், மற்றவர்களுக்கு அதிக பாதகம் செய்வதாகவும் நினைத்துப் பேசுகிறார்கள். மைனர்க்கு 10 ஏக்கர் கொடுக்கலாம் என்றார் அவர்களுக்கு ஏற்படும் பாதகத்தைத் தவிர்க்கச் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் இன்றைக்கு நம் சமுதாயம் ஒன்றுபட்ட சமுதாயமாக ஒரே சமுதாயமாக இருந்தால் சில விளக்கங்களைக் கொடுத்து சட்டம் செய்துவிட முடியும். இன்றைக்கு ஹிந்து ஆக்ட் இருக்கிறது. ஹிந்து சக்செஷன் ஆக்ட் வேறு இருக்கிறது. முஸ்லீம் சட்டம் இருக்கிறது. இன்னும் கிரிஸ்த வர் சட்டம் இருக்கிறது, இதையெல்லாம் தவிர பழக்கத்தில் இருக்கும் சட்டம் என்றுகூட இருக்கிறது. இதையெல்லாம் வைத்துக்கொண்டு, அத்தனையையும் மனதில் வைத்துத்தான் விளக்கம் கொடுக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் சமுதாயத்தில் இருக்கும் நிலைமையை அனு சரித்து, நிலைமைக்கு ஏற்ப இந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒன்றை மட்டும் எடுத்து விவாதித்தால் பயன் இல்லை. இந்த ஸ்கீமை எடுத்துப் பார்த்தால், எப்படி அமைந்திருக்

கிறது என்று பார்த்தால், எல்லோருக்கும் நியாயம் அளிக்கும் முறையில் செய்யப்பட்டிருக்கிறது என்பது நன்ருக விளங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், திருத்தத்தை ஆதரித்து, குடும்பம் என்ருல் என்ன என்பதைப்பற்றி எனக்கு முன்பு பேசிய தோழர் கள் விளக்கிச் சொன்ஞர்கள். அதன்பேரில் ரொம்பவும் தெட்டத் தெளி வாக விளக்கவுரை ஒன்றை கனம் நிதி அமைச்சர் அவர்களும் கொடுத் தார்கள். குடும்பம் என்று சொல்லக்கூடியதற்கு இதில் இருக்கக்கூடிய டெஃபனிஷனைக் குறித்து அதில் ஏதோ ஹிந்து குடும்பம் என்ருல் என்ன, அதற்கு சட்டத்தில் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி மாத்திரம் விளக் கம் கொடுத்து அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்குவதற்கான முயற்சி எடுப்பதற்கு பதிலாக இதை இப்படியே கொண்டுவருவதன் மூலமாக நாம் இந்த நிலவுடைமைக்கு உச்ச வரம்பு எந்த நோக்கத்தோடு கட்டுகிருேம் என்று சொல்லுகிருேமோ அது வெற்றி பெறக்கூடிய அளவு இருக்கிறதா என்று நாம் பார்த்தாகவேண்டும். ஆனுல் ஒவ்வொரு சட்டம் வரக்கூடிய நேரத்திலும் அதற்கு பல விதமான சட்டங்களைக் காட்டி, இந்தச் சட்டம் இப்படி இருக்கிறது, அந்தச் சட்டம் அப்படி இருக் கிறது, அரசியல் சட்டத்திலே அது போல இருக்கிறது என்று காட்டி சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டே செல்வதனுல் சட்டங்கள் நிறைவேறக் கூடிய அளவுக்கு தான் இருக்க முடியுமே தவிர சட்டங்களின் பலனை மக்கள் அனுபவிக்கும் அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்தால் உண்மையிலேயே கிடையாது என்றுதான் சொல்லவேண்டும். உதாரணத் திற்குச் சொல்லவேண்டுமானுல், பீடித் தொழிலாளர் சட்டம் நிறை வேற்றப்பட்டு இரண்டு வருஷம் ஆகி விட்டது. (கனம் ஸ்ரீ சி. சுப்பிர மணியம் : அதற்கும் இந்தச் சட்டத்திற்கும் என்ன சம்பந்தம்) எந்த நோக்கத்தோடு கொண்டு வந்தோமோ அது நிறைவேருமல் அதன் நிலைமை இன்றைக்கு எந்த மாதிரி இருக்கிறதோ அந்த மாதிரி இந்தச் சட்டத்தின் நிலைமையும் போகக்கூடாது என்ற காரணத்தினுல், இதைச் சொல்லுகிறேன். ஹிந்து குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஆண்டு அனு பவிக்கலாம், ஒவ்வொருவரும் ஒரு குடும்பமாகப் போகலாம் என்று ஒவ்வொருவருக்கும் குடும்பம் என்ற பெயரைக் கொடுக்கவேண்டியதில்லை. ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு குடும்பம் என்று சொல்லிக்கொள்ளலாம். சாதாரணமாக, கல்யாணமானவர்களைத்தான் குடும்பம் என்று சொல்ல முடியுமே தவிர, தனிப்பட்ட நபர்களை ஒரு குடும்பம் என்று சொல்ல முடியாது. ஒரு மரத்தை மட்டும் நட்டு வைத்துவிட்டு, அதை ஒரு தோப்பு என்று சொன்னுல் யாராவது அதை ஏற்றுக்கொள்ள முடியுமா ? அதே போல், கல்யாணமாகாதவரை பிரம்மச்சாரி என்றுதான் சொல்வார்களே தவிர, அவரையும் ஒரு குடும்பம் என்று சொன்னுல், எப்படிப் பொருந்தும் ? குடும்பம் என்று சொல்லுகிற நேரத்திலே, ஏதோ இந்து லாவை யும், பிற லாவையும் காட்டி ஒரு சமாதானம் சொல்வார்களேயானுல், அந்த வகையிலே இந்தச் சட்டம் இயற்றப்படுமானுல், உண்மையிலேயே இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் எந்த விதப் பலனையும் அதனுல் அடைய முடியாது. இதை தயவுசெய்து உணர்ந்து, அதற்குத் தகுந்த வகையில் இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். அப்படி மாற்றுவதற்கு எந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டியிருந்தா லும் சரி, இன்றைக்கு நிதி அமைச்சர் அவர்களும், ரெவின்யூ அமைச்சர் அவர்களும் நன்கு சட்டம் தெரிந்தவர்கள். அதுவும் பீ.ஏ.,பி.எல். படித்த வர்கள், தவிர டெல்லிக்கு அடிக்கடி போகக்கூடியவர்கள். அவர்கள் முயற்சி செய்து எந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்ருலும், மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி இல்லையென்ருல், வேண்டுமென்றுதான் செய்கிருர்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஏதோ நிலைமையைச் சமாளிக்க சமாதானம் கூறுவ தாகத்தான் இந்தச் சட்டம் இருக்கிறது என்று நினைக்க வேண்டியிருக் கிறது. ஆகவேதான், குறைந்தபட்சம், ஒரு புருஷன், ஒரு மனைவி, மூன்று குழந்தைகள் என்று ஐந்து பேர்கள் கொண்டது ஒரு குடும்பம் என்று

20th September 1961] [Sri V. K. Kothandaraman]

திட்டவட்டமாக இருக்க வேண்டுமென்று கூறுகிறேன். அதற்கு மேலே இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும், ஒரு அளவு கொடுக்கலாம். அந்த மாதிரி ஒரு சட்டம் வரவில்லையானால், இந்தச் சட்டம் எந்த அளவுக்கும் உதவியற்றதாகவும், பிரயோஜனமற்றதாகவும் இருக்குமென்று தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : I think the Government can move their amendment now so that hon. Members can speak on that also.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment :—

'In sub-clause (14), *for* the existing Explanation, *substitute* the following—

Explanation.—For the purpose of this clause, in the case of persons governed by Hindu Law, 'minor sons' and 'minor grandsons' shall not include sons or grandsons—

(i) between whom and the other members of the family, a partition by means of a registered instrument has taken place; or

(ii) in respect of whose family properties a preliminary decree for partition has been passed before the date of the commencement of this Act.'

DEPUTY SPEAKER : Now the Government amendment also is before the House for discussion.

* SRI R. SRINIVASA IYER : Sir, the amendment now moved by the Government makes one of the points raised by the hon. Member, Sri Daniel, clear. If it is a final decree for partition, it need not be mentioned here because a copy of the decree has got to be sent to the Registrar's office and it has to be registered. Only a preliminary decree will declare the rights of parties and it is but proper that the amendment should be there. So far as the other two amendments moved by Sri Kothandaraman and Sri Palanisami are concerned, it will cut at the root of the definition itself. Every time they have been harping on the purposes of the Act. Here only reasonable restrictions can be made under Article 19 of the Constitution. We are trying to make those restrictions not with a view to take away the rights as the Hon. Minister for Finance has already pointed out, but to safeguard the existing rights under certain restrictions and those restrictions are being made. Here we have got to remember the definition of the words 'separate property'. Though the Hon. Minister for Finance has explained it, I would add one word. Under the Mohamedan Law each member can have his own property, each member has his own property. There is no joint family among Muslims and no right by birth. They may trade or purchase any property individually. A father can have property. A son can have property. A wife can have property. A wife has got a defined share. According to the Muslim

Law of Shariat, as soon as her father dies, she can get her defined share. The original definition in the original Bill was confusing and it made a distinction. It was even stated by Mr. Patanjali Sastri, retired Chief Justice of the Supreme Court, that it was discriminatory when the matter came up for discussion in the Select Committee. We had a lot of discussion and after an adjournment the definition of the word ' family ' has been defined as it is. Here one amendment wants the removal of the word ' minor '. That means ' major sons ' also will come into the picture. It would only increase the number of members of the family. A major son will be having his property and he has got a right by birth. His wife's property will come into his ceiling limit. We have got to understand several illustrations given for determining the ceiling area in the ceiling clause. So far as Christians are concerned, they are governed by a separate law. Each, whether a major or minor, can have separate property. The only thing is that they should not interfere with the property after the date of the commencement of the Act, viz., 6th April 1960. If they already own property, they are entitled to live separately or live together.

So far as Muslims are concerned, it is the same thing. So far as the major sons in a Hindu family are concerned, they are considered separately. Here we are imposing another important restriction which perhaps has not been understood or particularly concentrated upon by the hon. Members who moved the amendments, and it is that even minor sons who have got right by birth, if they have not had registered partition, they are included in the pool. Another important thing is that we are disqualifying oral partitions and we are recognizing only registered partitions. Now the Explanation is made clear that only if a preliminary decree has not been passed, they will continue to be members of the joint family. Under these circumstances, the amendments are quite unnecessary and they will go against the spirit of the Bill. If only hon. Members had read fully the proceedings of the Joint Select Committee (pages 77–82) circulated to them, the present confusion would not have arisen. The definition of the word ' family ' as it is, is the best under the circumstances and we had also considered the definitions mentioned in the Acts of other States. Therefore, I oppose the amendments and request the House to accept the clause as amended by the Government.

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விளக்கமானது, சட்டத்தினுடைய நோக்கத்திற்கு ஏற்றதாக இருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால், என்ன நடக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதற்கு ஏற்றதாக இருக்கிறது. ப்ரீஆம்பிளில் கூறப்பட்ட நோக்கத்தைக் கூட பூர்த்தி பண்ண முடியாது. நாங்கள் கொடுத்திருக்கிற இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் கூட, அதன் மூலம் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியுமா என்றால் அதுவும் முடியாது. மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். 11–வது உப பிரிவிலே நாங்கள் கொடுத்த திருத்தம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டு, இன்னும் ஸீலிங் ஏரியா சம்பந்தமாக நாங்கள் கொடுக்கக்கூடிய திருத்தங்களையும்

20th September 1961] [Sri M. Kalyanasundaram]

ஒப்புக்கொண்டால்தான் சட்டத்தின் நோக்கம் நிறைவேற பிரயோசனப் படும். அடிப்படையில் இரண்டு கருத்துக்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது, என்ன செய்ய விரும்புகிறோம் என்பதைப் பற்றி. ஒருவர் பேரிலே 200 ஏகர் 300 ஏகர் இருக்க வேண்டாம், அதைப் பல பேர்கள் பேரிலே பிரித்து பட்டா வைத்தால் போதும், ஹோல்டிங் பெரிய ஸைஸ் ஆக இருந்தாலும் பரவாயில்லை என்கிற மாதிரி அவர்கள் கொடுக்கக்கூடிய பதில் இருக்கிறது.

'குடும்பம்' என்பதற்கு நாங்கள் ஏன் இப்படி விளக்கம் கொடுக்க விரும்பு கிறோம் என்றால், குடும்பம் என்றால் ஒரே யூனிட்டாக இருக்க வேண்டும் இயற்கையாக வயது வந்து பிரிவினை ஏற்பட்ட குடும்பங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இந்து சட்டத்திலுள்ள உரிமையை எப்படி எடுப்பது என்று சொல்லி, இந்து சட்டத்தில் இருக்கக் கூடிய உரிமையை வழங்குவதிலே, அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைக்கு மேலே போகிறார்கள். இந்து சட்டத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அமைச்சர் அவர்கள் பிறந்த குழந் தைக்குப் பிறந்த தேதியிலிருந்து உரிமை ஏற்படுகிறது, அந்த உரிமையை எப்படி எடுக்க முடியும் என்று சொன்னார்கள். வயற்றிலே இருக்கக்கூடிய குழந்தை கூட உரிமை கோர முடியும் என்று சொல்லுகிறார்கள். குடும்பத் தலைவர் ஒழுங்காக இல்லாமல் இருந்தால், சொத்தை சரியாக நிர்வகிக்கவில்லையானால், மைனர் குழந்தைகள் உரிமைக்கு பாதகம் ஏற் படும் என்ற காரணம் காட்டப்பட்டு, பாகப் பிரிவினையைக் கட்டாயப் படுத்த முடியுமே தவிர, வேறு காரணத்தைக் கொண்டு முடியும் என்று நான் நினைக்கவில்லை. சட்டத்தை ஏமாற்றுவதற்காக மைனர் குழந்தை களுக்குப் பிரித்து வைத்திருக்கலாமே தவிர, அக்கரையோடு செய்துவிட வில்லை. விஷயம் தெரியாமல் பாகப் பிரிவினை செய்து ரிஜிஸ்டர் செய்ய தவறியவர்கள்—யாரும் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை—அவர்களுக்குத்தான் இந்தச் சட்டத்தினால் பாதகம் ஏற்படும். இந்து சட்டப் படி கொடுக்க வேண்டிய சொத்து உரிமையை பூராவாகக் கொடுக்கவேண்டு மென்று மனதில் வைத்துக்கொண்டு இருந்தால், நில உடமைக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்ற நோக்கம் நிறைவேறாது. சட்டம் கொண்டு வருவதில் அடிப்படை நோக்கம் என்ன ? அடிப்படை தத்துவம் என்ன ? பரம்பரைச் சொத்து உரிமையைக் கூட ஓரளவுக்கு மாற்றுகிறோம். சொத் உரிமை பற்றிய கருத்துக்களை, கண்ணோட்டத்தைக் கூட ஓரளவுக்கு மாற்று கிறோம். சொத்து உரிமை ரொம்பவும் புனிதமானது. அதைத் தொடவே கூடாது என்ற கருத்தை வைத்துக்கொண்டிருந்தால்தான் இம்மாதிரிக் குழப்பங்களும், கோளாறுகளும் வரும். லட்சியத்திற்கும் எடுக்கக்கூடிய நடவடிக்கைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. முரண்பாடு இருக்கிறது. அதனால்தான் குடும்பத்திற்கு விளக்கத்தை இம்மாதிரி திருத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்து குடும்பத்திற்கும், இந்து அல்லாத குடும் பத்திற்கும் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை போக்க வேண்டும். அல்லது ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒருவருக்குப் பாகப்பிரிவினை ஆகாமல் இருந்தால்கூட தனியாகச் சொத்து வைத்துக் கொள்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு ஸ்ரீதன சொத்தாகஇருந்தால் 10 ஏக்கரா வரை விதி விலக்குக் கொடுத்திருக்கிறோம். இம்மாதிரி விளக்கம் கொடுப்பது ஆண்களுக்குக் கூட ஸ்ரீதன சொத்து மாதிரி ஆகிறது. எங்களுடைய மற்ற திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், குடும்பம் குடும்பம் என்பதற்கு விளக்கத்தில் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு இவ்வளவு நேரம் பேசுவது வீண், அனுவசியம் என்று கருதுகிறேன். இருந்தாலும் எங்க ளுடைய கருத்துக்களை இங்கே சொல்ல வெண்டியது அவசியமாக இருக் கிறது. குடும்பம் என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கம் சரியாக அமையவில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன். வயது வந்தவர்களை தனி குடும்பமாக அங்கீகரிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. குடும்பச் சொத்தை மைனர்களுக்குத் தனித்தனியாக பிரித்துக்கொடுக்க வேண டும், அவர்களுக்கு நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்கின்ற அடிப் படையிலே இந்த விளக்கம் இருப்பதினால், என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 'பாமிலி டெபனிஷன்' அசல் மசோதாவிலே வேறு மாதிரியாக இருந்தது. அதைப் பொறுக்கு கமிட்டியிலே இம்மாதிரியாக திருத்தி அமைத்திருக்கிறார்கள். இந்து சட்டப் பிரகாரம் சில சலுகைகள் இருக்கின்றன. அசல் மசோதாவில் இருந்த மாதிரி விளக்கமிருந்தால், ஒரு சமுதாயத்திற்கு அதிக சலுகை இருக்கிறது, மற்றவர்களுக்கு அது பிரதி கூலமாக இருக்கிறது. அதை அனுசரித்துத்தான் 'பாமிலி டெபனிஷனை' இந்த மாதிரி திருத்தி அமைத்திருக்கிறோம். எந்த அளவுக்கு சொத்து உரிமையை நாம் மீறிப் போகலாமோ அந்த அளவுக்கு போக முடியுமே தவிர, இருக்கிற சட்டத்திற்கு நேர் விரோதமாக நாம் போக முடியாது. இந்து சட்டப் பிரகாரம் இந்துக் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. ஆகையினால் நாம் அதை அனுசரித்துத்தான் ஆக வேண்டும். அதை ஒட்டித்தான் இந்த அளவிலே நாம் விளக்கம் கொண்டுவந்திருக்கிறோம். அதோடு 'ஓரல் பார்டிஷனை' நாம் ஒத்துக் கொள்ளவில்லை. சட்டப் பிரகாரம் நாம் அதையும் ஒத்துக்கொள்ளலாம் ஆனால், நடைமுறையில் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால் எல்லோரும் அம்மாதிரி 'ஓரல் பார்டிஷனை' செய்துகொண்டதாகச் சொல்லி விடுவார்கள். அதனால்தான் இப்பொழுது கொடுத்திருக்கிற திருத்தத்தில் 'ரிஜிஸ்டர்டு இன்ஸ்ட்ருமென்ட்' இருந்தால்தான் ஒத்துக்கொள்ளலாம், அல்லது கோர்ட்டு மூலம் பிரிலிமினரி பார்டிஷன் டிகிரி ஆகியிருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இம்மாதிரியாக விளக்கம் அமைந்தால் தான் இந்துக்கள், முகம்மதியர்கள், கிரிஸ்தவர்கள் இவர்களிடையே பாகு பாடு கூடியவரையில் இல்லாமல் இருக்க முடியுமே தவிர, அசல் மசோதா பிரகாரம் விளக்கம் இருந்தால் ஒரு சமுதாயத்தினருக்கு அதிக சாதக மாக இருக்கும் என்று கருதி, இதைப் பற்றி நன்றாக விவாதித்து கடைசி யிலே இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். இப்பொழுது இருக்கிற ஸ்கீம் பிரகாரம் பார்த்தால் இந்தத் திருத்தங்களை ஒத்துக்கொள்ளுவதற்கில்லை. இந்த ஸ்கீமுக்கு உள்ளடங்கி இருக்கிறதா என்று பார்த்தால், நாங்கள் கொடுத்திருக்கிற 'பாமிலி டெபினிஷன்' தான் சரி என்று முடிவுக்கு வந்திருப்பதால், இந்தத் திருத்தங்களை ஒத்துக்கொள்ளுவதற்கில்லை.

The amendments of Sri N. K. Palanisami and Sri V. K. Kothandaraman were put and lost.

The Government amendment was put and carried.

Sub-clause 18

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

" In sub-clause (18), *delete* the words beginning with ' and such other local area comprising a hill as the Government may, by notification, from time to time, specify.' "

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The sub-clause and the amendment are before the House for discussion.

11-30 a.m. SRI M. KALYANASUNDARAM : ஸார், மலைப்பிரதேச நிலங்களுக்குப் பூராவாக விதி விலக்குக் கொடுக்க வேண்டும் என்று ஷெடூலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் என் திருத்தத்தைக் கொடுத்திருப்பதன் காரணம், எல்லா மலைப் பிரதேசங்களுக்கும் இன்னும் எதை எதை சர்க்கார் மலைப் பிரதேசம் என்று கருதுகிறதோ அவற்குற்றிம்விலக்குக் கொத்டுக்க வேண்டிய அதிகாரம் அரசாங்கத்திற்குக் கொடுக்கக் கூடாது என்பதற்காக

தான். ஆகவே, இம்மாதிரி மலைப் பிரதேசங்களுக்கு விலக்கு வேண்டாம் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். தோட்டங்களுக்கு விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது கொடுக்க வேண்டியது தான். இன்னும் தோட்டங்களை விஸ்தரிக்க அவசியம் இருந்தால், விலக்கு கொடுக்கலாம். அதல்லாமல், மற்ற சாகுபடிகள் செய்யும் நிலங்களுக்கு விலக்கு என்றால், அப்படிப்பட்ட நிலங்கள் நிறைய இருக்கிறது. அப்படிப் பட்ட நிலங்களுக்கு ஏன் விலக்குக் கொடுக்க வேண்டும். நீலகிரி ஜில்லா, கொடைக்கானல் முதலிய பிரதேசங்களில், 300, 400 ஏக்கரா என்று வைத்திருக்கும் தனி நபர்கள் இருக்கிறார்கள். அம்மாதிரியான நிலங் களுக்கு பெரும் அளவில் விலக்குக் கொடுப்பது கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம். தோட்டங்களுக்கு, அதாவது பிளாண்டேஷன்களுக்கு காபி, தேயிலை இவை உற்பத்தியாகும் நிலங்களுக்கு விலக்கு வேண்டியது தான்; விஸ்தரிப்பதானாலும், அதையும் நான் எதிர்க்கவில்லை. மற்ற மலையிலிருப்பவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வசதிகள் கொடுத்திருக்கிறோம்; அவர்களுக்கு என்று ஒரு கமிஷனர் இருக்கிறார். ஆகவே, மலைஜாதியினருக்கும் அங்கு வாழும் குடியானவர் களுக்கும் நிலம் கொடுப்பதில் என்ன தவறு? இன்றைக்கும் அந்த நிலங்கள் இந்த மலை ஜாதி ஏழைகள் உழைப்பால்தான் வளம் அடைந் திருக்கிறது. இந்தப் பெரிய சொந்தக்காரர்கள் ஒரு மம்மட்டியை எடுத்து ஒரு கொத்து கொத்தினதும் இல்லை. இந்த மலைஜாதி ஏழைகள்தான் பல கஷ்டங்களையும், குளிரிலும், மழையிலும் அவதிப்பட்டு அங்கு உழைக்கிறார் கள். நிலங்களைச் சீர்படுத்துகிறார்கள். ஆகவே இம்மாதிரியான நிலங் களுக்கும் விலக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிக் கொடுத்து கீழேயிருந்து சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் வாழவும், மேலே மலைஜாதியினர் உழைக்கவும், விட்டுவிடுவது சரியாகாது. எந்த பெரிய சொந்தக்காரரும் மேலே போய் மலையில் வேலை செய்யவில்லை. ஆகவே, என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

Sri J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இதிலே மலைப்பிரதேசத்திலே உள்ள பூமிகளுக்கெல்லாம் விலக்கு கொடுக்கப்படுகிறது. மலைப்பிரதேசத்தில், டீ, காபி, ரப்பர், கார்டமம் போன்றவைகளுக்கு மாத்திரம் டெபனிஷனில் இடம் கொடுத்தால், அது போதாது. இன்றைக்கு மலைப்பிரதேசத்திலுள்ள நிலைமையைப் பற்றிச் சற்று சிந்திக்க வேண்டும். என்னுடைய ஜில்லாவான நீலகிரியைப் பொறுத்தவரை, அங்குள்ள விவசாயிகள் மிகக் கஷ்டமான நிலைமையில் இருந்துகொண்டு, சர்க்காரிடத்தில் அண்டி டீ விவசாயம் செய்ய அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்கும் அளவில்தான் இருக்கிறார்கள். இங்கே ஷெடூல் 1—ல் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும் போது, அந்த மலைப்பிரதேச நிலங்களுக்கு இல்லாமல், தோட்டங்களுக்கு மட்டும் விலக்குக் கொடுங்கள் என்று சொல்லுவது உசிதமாகாது. விவசாய பூமிகள் எல்லாம் என்றில்லாமல், டீ, காபி, ரப்பர் இவைகளுக்கு மட்டும் என்று போட்டுவிட்டால், பின்னால் டீ உற்பத்தி செய்ய வேண்டுமானால் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படும். இன்றைக்கு மக்கள் டீ பயிரிடத் தயாராக இருக்கிறார்கள். டீ இன்றைக்கு சாதாரண விவசாயப் பொருளாக மட்டும் இல்லை. அதன் காரணமாக பல தொழிற்சாலைகள் ஏற்பட ஏதுவாக இருக்கிறது. நிறைய தொழில் வாய்ப்புகள் ஏற்படும் நிலைமை இருக்கிறது. அதற்கும் மேலாக அதனால் நமக்கு பாரின் எக்சேஞ்சும் கிடைக்கிறது. ஆகவே அது மிக மிக அவசியமானதாக இருக்கிறது. ஆகவே, அங்குள்ள எல்லா பூமிகளுக்கும் விலக்குக் கொடுக்க வேண்டியது மிக அவசியமாகிறது. இது சம்பந்தமாக பிளானிங் கமிஷனும் தெட்டத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. டீ, காபி, ரப்பர் போன்ற அத்தியாவசியமான பொருள்கள் விளையும் பூமிகளுக்கு ஸீலிங் கட்டக் கூடாது என்று. அது அன்னியச் செலவாணியைப் பாதிக்கும். என்று அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை அதிகமாக

உற்பத்தி செய்ய வேண்டுமென்பதுதான் சர்க்காரின் கொள்கை. ஒரு வாரத்திற்கு முன்பு கூட டெல்லியில் அகில இந்திய கூட்டத்தில் டீ அதிகமாக நம் நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு சர்க்கார் பண உதவிகளும், கடன் உதவிகளும் கொடுத்து உதவ வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான பூமிகளுக்கு இன்றைக்கு ஸீலிங் கட்ட வேண்டுமென்றால், பின்னால் டீ உற்பத்தி பாதிக்கப்படும். ஆகையினால், ஸ்ரீ கலியாணசுந்தரம் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை நான் அழுத்தம் திருத்தமாக ஆட்சேபிக்கிறேன்.

*SRIMATHI T. N. ANANDANAYAKI : ஸார், இந்த ஷெடூலில் மலைப் பகுதிகள் நிர்ணயிக்கப்படவில்லை. அது மாவட்ட வாரியாக, கிராமம் கிராமமாக மொத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிளாஸ் 70 படி விலக்கு அளிப்பதில் பொறுக்குக் கமிட்டி கவனம் செலுத்தி செய்திருக்கிறது. இங்கே அடிப்படை கிராம வாரியாக இருக்கிறதே ஒழிய, தனிப்பட்ட சர்வே நம்பர்களைக் கொண்ட பூமிகள் இதில் கொடுக்கவில்லை. உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில், அம்பாசமுத்திரம் பகுதியில்,கட்டளை மலை எஸ்டேட் என்று இருக்கிறது. அது ஒரு கிராமமாக இல்லை. சர்வே நம்பர்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் அது மலைப் பகுதி என்பதை மறுக்க முடியாது. மலைப்பகுதி என்பதை ஒரு கிராமமாக எடுக்க முடியாத நிலையில், சர்வே நம்பர்களைக் கொண்டிருக்கும் சில இடங்கள் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அங்கு ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்க சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் "By notification, from time to time, specify" என்று கொடுத்து இருக்கிறார்கள். அந்த அதிகாரம் இல்லாவிட்டால், பல சங்கடங்கள் ஏற்பட்டுவிடும். கொடைக்கானலில், மற்ற மலைப் பகுதிகளில் இம்மாதிரியான சலுகைகளைக் கொடுத்துவிட்டு, கிராமமாக இல்லாமல், சர்வே நம்பர்களாக இருக்கும் நிலங்களுக்கு, குறைந்த வசதி உள்ள நிலங்களுக்கும் ஜனநாயக ஆட்சியில் இம்மாதிரியான சலுகைகளும் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஏழைகளுக்காகப் பரிந்து பேசும் கட்சிக்காரர்கள் இம்மாதிரி திருத்தம் கொடுப்பது அவர்களுக்கு உகந்ததல்ல. இந்தச் சலுகைகள் வரவேற்கத் தக்க சலுகைகள், இவைகளை மற்ற சிறு நிலச்சுவாந்தார்களுக்கும் கொடுக்க சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அப்போழுதுதான் கட்டளை மலை எஸ்டேட் போன்ற, சர்வே நம்பர்களைக்கொண்ட பிரதேசம், இன்னும் அது போன்ற பிரதேசங்கள் சலுகைகளைப் பெற சௌகரியமாக இருக்கும். கனம் கலியாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தம் சிறு நிலச்சுவாந்தார்களைப் பாதிக்கும் முறையில் இருக்கிறது. "ஹில் ஏரியா" என்று எடுத்துக்கொண்டால், ஷெடூலில் கிராம அடிப்படையில் போட்டிருக்கிறார்கள். வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் அது சரியாகப் போய்விடும். ஆனால், நான் குறிப்பிட்ட திருநெல்வேலி பிரதேசம் போன்றவைகளுக்கு சர்க்காரிடம் அதிகாரம் இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் கிடைக்கும். இந்தத் திருத்தத்தைப் பார்த்தால், அமென்மெண்ட் கொடுத்திருக்கும் அங்கத்தினர்கள் உள்ள அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், இதனால் யாருக்கு லாபம் என்றெல்லாம் யோசனை செய்யாமல் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே தவறாகப் புரிந்துகொண்டு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஒரு திருத்தம் கூட கொடுத்திருக்கிறார், அதாவது 15 ரூபாய் கிஸ்தி செலுத்துகிற நிலங்களை ஒரு ஏக்கர் என்றும், 15 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துகிற நிலங்கள் 1½ ஏக்கர் என்று வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் திருத்தம் கொடுத்திருக்கிறார். அந்த அளவுக்குத் திருத்தங்களைக் கொடுக்கிறார்கள். திருத்தங்கள் கொடுக்கும்போது அதன் பொருளை அறிந்து கொடுத்து திருத்தங்கள் கொடுக்க வேண்டும். புரியாமல் திருத்தங்கள் கொடுத்துக் கொள்ளக் கூடாது. ஆகவே திருத்தங்களைப் பார்த்தால் யாருக்குமே புரியவில்லை. இப்பொழுது சிலருக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய திருத்தங்களை ஏற்றுக்கொண்டால்

20th September 1961] [Srimathi T. N. Anandanayaki]

அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பாதுகாப்புகள் இல்லாமல் போய்விடும். அதனால் சிறியவர்களுக்குத்தான் நஷ்டம் ஏற்படும். பெரியவர்களுக்கு லாபம்தான் ஏற்படும். அதன் பிறகு அரசாங்கத்தின் வேலை குறைந்து போய்விடும். ஆகவே இதில் அரசாங்கம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைப் பறிப்பதில் அர்த்தம் இல்லை. அதைப் பறிப்பதும் நல்லதல்ல. ஏழைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள் ஏழைகளுக்குத்தான் பாதகம் இழைக்கிறார்கள். ஆகவே அதை மாற்றுவது சரியல்ல. கட்டாயம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதைக் கேட்ட பிறகாவது இந்தத் திருத்தத்தைக் கொடுத்தவர் அதை வாபஸ் வாங்கிக்கொள்ளவார் என்று நினைக்கிறேன். இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை எதிர்க்கிற நேரத்தில் இதைப் பற்றி பேசியவர்களுடைய நோக்கத்தையும் பார்க்க வேண்டும். அவர்கள் வழக்கமாகப் பேசுகிற பல்லவியையே இப்பொழுதும் பேசி வருகிறார்கள். எந்த வகையில் நில உச்ச வரம்புக் கொள்கையைப் பற்றிப் பேசும்பொது எந்த நிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்களோ அதே பல்லவியைத்தான் இப்பொழுதும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்பொழுது எந்த ஆட்சேபணையைச் சொன்னார்களோ அதே ஆட்சேபணையைத்தான் இப்பொழுதும் சொல்லுகிறார்கள் மலைப் பிரதேசத்தைப் பற்றி சர்க்கார் கொடுத்திருக்கக் கூடிய வருணனைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள். வேறு எந்தப் பிரதேசத்தையும் மலைப் பிரதேசம் என்று சொல்லிவிடுவார்களோ என்ற சந்தேகம் அவர்களுக்கு ஏற்படுகிறது. சிலருக்கு சர்க்காரைப் பற்றி எப்பொழுதும் சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. அந்த சந்தேகம் எப்பொழுதும் சர்க்காரிடத்தில் ஏற்பட்டு விடுகிறது. அதை மாற்றிக்கொள்ள வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ள மாட்டார்கள். கடைசி கிளாசில் ஏதாவது சட்டம் செய்தால் அது சட்டசபைக்கு வந்து அதை அங்கீகரிக்க வேண்டும் என்ற உரிமை இருக்கிறது. எதைச் செய்தாலும் அது சட்டசபைக்கு வந்து அங்கீகாரம் அடைய வேண்டும் என்ற உரிமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது சந்தேகப்பட வேண்டிய அவசியமேயில்லை. எல்லா இடங்களையும் மலைப் பிரதேசம் என்று சொல்லக்கூடிய உரிமை இல்லை. மலைத் தோட்டப் பிரதேசங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னாலும் வாதாடுவதற்கு இடம் இருக்கிறது. வக்கீல் வைத்து வாதாடலாம். இதைப் பற்றித்தான் ஷெடூலில் போடப்பட்டிருக்கிறது. நோடிபிகேஷன் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்த செலக்ட் கமிட்டிகூட ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதிதான் கடைசியாகக் கூடியது. அப்பொழுது கூட சில விண்ணப்பங்கள் வந்தன. சில பிரதேசங்களை மலைப்பிரதேசங்களாக கருதவேண்டும் என்று எவ்வளவோ விண்ணப்பங்கள் வந்தன. அவைகளை எல்லாம் கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. வந்த பிறகு அவைகளைப் பற்றிக் கவனிக்கப்படும். பதில் வந்தவுடன் பின்னால் அதைப் பற்றி விசாரணை செய்யலாம். அப்பொழுது ஆலோசனை பண்ணிக் கொள்ளலாம். ஷெட்யூலில் இருப்பதைத் தவிர இன்னும் சில பிரதேசங்களைக்கூட சேர்க்க வேண்டியதாக இருக்கலாம். எவ்வளவோ பிரதேசங்கள் ரொக்கப் பண்டங்களை விளைவிக்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சேர்க்க முடியாது. கனம் மாதா கௌடர் அவர்கள் கூட நிறைய பயிர்கள் இடுகிறார்கள் என்று குறிப்பிட்டார் அதையும் கவனிக்க வேண்டும். ஸ்ரீ என்.கே. பழனிசாமியின் திருத்தத்தைப்பற்றி அம்மையார் சொன்னதைக்கூட சிலவற்றை நான் ஆட்சேபிக்க வேண்டியதாக இருக்கிறது. பின்னடி வரப்போவதைப்பற்றிக் குறிப்பிட்டார். இப்பொழுது அதைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. அதுவரும்போது அதைப்பற்றிக் குறிப்பிட்டால் அவர்கள் அதைப்பற்றி நன்றாகப் புரிந்துகொள்ளுவார்கள். இப்பொழுது சொல்லிவிட்டால் பின்னால் அதைப்பற்றி பேசாமல்கூட இருந்துவிடுவார்கள்.

அப்பொழுதுதான் தாங்கள் செய்த தவறை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். ஆகவே அதைபற்றி இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியமில்லை. சில பிரதேசங்களுக்கு எக்ஸம்ஷன் கொடுக்கக்கூடிய அதிகாரம் சர்க்காருக்கு அவசியம் இருக்கவேண்டும். சர்க்காருடைய அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. சர்க்கார் பண்ணுவதெல்லாம் தப்பு என்று சொல்லுவது சரியல்ல. எப்பொழுதுமே சர்க்காரை சந்தேகப் பட்டுக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அது சரியான முறையல்ல. அதிகாரத்தை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யவேமாட்டார்கள். ஆகவே இந்தத் திருத்தத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மலை நிலங்களுக்குப் பொதுவாக விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. மலை நிலங்கள் மண் நிலங்கள் குன்று நிலங்கள் இவைகளைக் குறிப்பாகத்தான் சொல்ல வேண்டும். எவ்வளவோ நிலங்கள் பார்ப்பதற்கு மலை நிலங்களாக இருக்கலாம்; குன்று நிலங்களாக இருக்கலாம். அந்தப் பிரதேசம் காணப்படுவதன் மூலம் அதை மலைப் பிரதேசம் என்று குறிப்பிட்டுவிட முடியாது. எவ்வளவோ நிலங்கள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கலாம். அந்த நிலங்கள் மலை நிலங்களாகவும் குன்று நிலங்களாகவும் காணப்படலாம். எவ்வளவோ நிலங்கள் மேடான இடமாதலால் மலை நிலமாக சேர்க்க வேண்டியவைகளாக ஆகிவிடலாம். கனம் அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும் வட ஆற்காடு மாவட்டத்தில் எவ்வளவோ நிலங்கள் மலை நிலங்களாகவும் தோன்றும், குன்று நிலங்களாகவும் தோன்றும், ஆனால் அவைகள் சாகுபடிக்கு வரக்கூடியதாகவும் இருக்கும். அப்படிப் பட்ட ஏராளமான நிலங்களை அங்கு பார்க்கலாம். அங்கு எவ்வளவோ புஞ்சை நிலங்கள் கரம்பை நிலங்களாக இருப்பதன் காரணத்தால் அவற்றை மலை நிலங்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆகவே குறிப்பாக மலை நிலம் குன்று நிலம் என்றால் என்ன என்பதைப் பற்றி சரியான விளக்கம் இருக்க வேண்டும். இவ்வளவு ஆயிரம் அடி உயரத்துக்கு மேல் இருந்தால் அது மலை நிலம் என்றும், இவ்வளவு அடிக்குக் கீழ் இருந்தால் அது மண் நிலம் என்றும் பாகுபாடு செய்ய வேண்டும். அந்த முறையில்தான் விதி விலக்கு அளிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் விதி விலக்கு அளிக்கக் கூடாது. அப்படிப் பாகுபாடு செய்யாவிட்டால் மண் தரை நிலங்களும் மலை நிலங்களாக மாறுவதற்கு வழி ஏற்பட்டு விடும். இயல்பான நிலங்களாக இருந்தால் அவற்றை விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய அளவில் உச்ச வரம்பு கட்டப்பட வேண்டும். அதில் விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். எவ்வளவோ பெரிய முதலாளிகளுக்குத் தேயிலை காபி தோட்டங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் மலைப்பிரதேசத்தில் இருக்கின்றன என்பதால் விதி விலக்குத் தரப்பட்டுள்ளன. விதி விலக்கு அளிப்பதைக் கைவிட்டு, தேயிலை, காபி, தோட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில் கோடைக்கானலுக்குப் போக நேரிட்டது. அங்கு கோடைக் கானலுக்கு அப்பால் பத்து அல்லது பனிரெண்டு மைல் தூரத்தில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அங்கு சென்றிருந்தபோது அங்குள்ள விவசாயிகள் என்னிடம் வந்து, அவர்கள் பயிர்ச்செலவுக்கு ஆளுக்கு $1\frac{1}{2}$ அல்லது 2 எக்கர் நிலம் கேட்ட தாகவும், அரசாங்கம் அவர்கட்கு அதைக் கொடுக்கவில்லை என்றும், வேறு ஒரு பெரிய முதலாளிக்கு அதே இடத்தில் 250 எக்கர் அரசாங்க நிலம் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். நில உச்ச வரம்பு கொண்டுவரும் இக் காலத்திலேயே ஏழை விவசாயிக்கு ஒன்றரை அல்லது இரண்டு எக்கர் நிலம் கொடுக்காமல் பெரிய மிராசுதாருக்கு 250 எக்கர் நிலம் கொடுக்க வேண்டிய காரணம் என்ன? தோட்ட முதலாளிகளுக்கு 250, 300 எக்கர் வரையில் நிலம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சிறிய விவசாயிகளுக்கு இரண்டு எக்கர் கூடக் கொடுக்கப்படவில்லை என்றால் பள்ளத் தரை நிலங்கள் எல்லாம்கூட மலை நிலங்களாகத்தான் மாறிப்

20th September 1961] [Sri K. Anbazhagan]

போகும். இந்த நிலையில் அரசாங்கப் பொது நிலங்களையே எப்படிப்பட்டவர்க்கு எவ்வளவு நிலம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்ய வேண்டும். எந்த எந்த இடங்களில் மலை நிலங்கள் இருக்கின்றன என்றும் முன்னதாக அறிவிக்க வேண்டும். விதி விலக்கு கொடுப்பதைப் பற்றிப் பின்னால் 70-வது விதியில் சொல்லப்பட்டுள்ளது. அங்கும் மலை நிலங்களுக்கெல்லாம் விதி விலக்கு அளிக்கலாம் என்பதை மாற்றி ஒருவர் இவ்வளவு நிலம்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அமைக்க வேண்டும். காபி, தேயிலைத் தோட்டங்களாக இருந்தாலும், மேலளவு இவ்வளவு எக்கர் நிலம்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்குமேல் வைத்துக்கொள்ளக் கூடிய உரிமை எவருக்கும் இருக்கக் கூடாது. 1,000 அல்லது 2,000 எக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கும் நிலையை மாற்றி 60, 80 எக்கரா உச்ச வரம்பு கட்ட வேண்டும். மற்ற நிலங்களுக்கு முப்பது எக்கர் என்று சொல்வது போன்று இதற்கும் ஓரளவு செய்ய வேண்டும். எந்தப் பயிர் செய்தாலும் ஒருவருக்கு உடமையாக இத்தனை எக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று இருக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். அந்த முறையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவது அவசியமாகும். இதை ஏற்காவிடில், ஏழைகளுக்குத் துன்பம்தான் விளையும். இந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் உண்மையிலேயே ஏழைகளுக்கு நியாயம் செய்வதாகத்தான் ஆகும். இல்லாவிட்டால் ஏழை ஏழையாகவும் பணக்காரர் பணக்காரராகவும் வளரவே வழியாகும். ஏழைகளின் நன்மையை உத்தேசித்து அதிலும் மலைப் பிரதேச ஏழைகளின் நன்மையைக் கருதி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் சபைத்தலைவர் அவர்களே, மலைத் தோட்டங்களுக்கு விதி விலக்கு கொடுக்கக் கூடாது என்பதை நான் ஆதரிக்கிறேன். ப்ளான்டேஷன் ஏரியாவை அதிகரிக்க வேண்டும், அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலேதான் அவைகளுக்கு சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். கூட்டுறவு முறையிலே பல இடங்களில் ப்ளான்டேஷன்கள் ஏற்படுத்த சர்க்கார் திட்டம் வகுப்பதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். அப்படியிருந்தால், இதற்கு ஏன் விதி விலக்கு கொடுக்கவேண்டும்? உச்ச வரம்பு கட்டி, மிச்சமிருக்கும் நிலங்களை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒரு புறம் சொல்லிக்கொண்டிருக்கும்போது, திருச்சி ஜில்லாவிலே ஒரு ராஜாவுக்கு 400 எக்கர் மலைப் பிரதேசத்திலே கொடுக்க என்ன காரணம்? மதுரை ஜில்லாவில் ஆயிரக்கணக்கான எக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு பெரிய மிராசுதாருக்கு கொடைக்கானல் மலையிலே 300 எக்கர் கொடுக்க என்ன காரணம்? ஒரு பக்கம் உச்ச வரம்பு என்று சொல்லிவிட்டு, இன்னொரு பக்கம் பெரிய மிராசுதாருக்கு நிலம் கொடுப்பதற்காக இந்த விதி விலக்கு கொடுக்கப்படுகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : On a point of personal explanation Sir, நான் மறுபடியும் பேச விரும்பவில்லை. என்னுடைய திருத்தத்தின் நோக்கத்தை சில கனம் அங்கத்தினர்கள் புரிந்துகொள்ளாமலோ, அல்லது புரிந்து கொண்டும் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகவோ பேசினார்கள். அதைப்பற்றி விளக்குவதற்காக நான் இப்பொழுது எழுந்திருக்கின்றேன்.

70-வது பிரிவு 5-வது உப பிரிவிலே, "ஹில் ஏரியா" என்று எந்த நோக்கத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் "ஹில் ஏரியா" என்பதை விளக்க வேண்டியதில்லை. இந்த மசோதா பூராவும் பார்த்தால், அந்த ஒரு இடத்தில்தான் "ஹில் ஏரியா" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பிரேரேபித்த மசோதாவிலே கூட குறிப்பிட்ட அளவுக்குமட்டும் தான் விவரித்திருந்தார்கள். அரசாங்கமே அதிகாரம் எடுத்துக்கொள்ள வில்லை, முதலில் பிரேரேபித்த மசோதாவிலேகூட. ஆனால், மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போய் வந்த பிறகு, "ஹில் எரியா" என்பதற்கு விஸ்தாரமாக விளக்கம் கொடுத்து, அரசாங்கம் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறது.

Sri R. SRINIVASA IYER : I would like to point out to the hon. Member that the definition contains the expression "and such other local area comprising a hill........"

Sri M. KALYANASUNDARAM : ஷெட்யூலில் கண்டுள்ளதற்கு மேல் இன்னும் அதிகமாக விஸ்தரிக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது ? இன்னும் விஸ்தரிப்பதற்கான அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. மலைத் தோட்டமானாலும், ஏழைகளின் கையிலிருக்கும் நிலம் பாதிக்கப் போவதில்லை. பெரிய நிலப்பிரபுக்கள் தோட்டத் தொழிலே தெரியாதவர்கள், மம்மட்டி பிடிக்கத் தெரியாதவர்கள், 300, 400 எக்கர் அடமானம் செய்துகொண்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் பாதகம் ஏற்படுமே தவிர ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படாது. ஆனால், ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படுமென்று சொல்லி ஏழைகளுக்காகக் கண்ணீர் வடிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

Srimathi T. N. ANANDANAYAKI : Sir, on a point of personal explanation . . . . .

DEPUTY SPEAKER : The Hon. Minister will now reply. I request the hon. Member to resume her seat.

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நோடிபிகேஷன் கூடாது என்பதுதான் திருத்தம். ஷெட்யூலை ஆட்சேபிக்கவில்லை. எது ஹில் எரியா என்று சில கிராமங்கள் ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதலில் சில கிராமங்கள் மட்டும் போட்டிருந்தோம். பிற்பாடு மேலும் சில கிராமங்களைச் சேர்த்திருக்கிறோம். ஏனென்றால், சில இடங்கள் ஹில் எரியா என்று முதலில் தெரியாமல் இருந்தன. கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னபடி, ஆகஸ்டு 12-ந்தேதி வரையில்கூட சில பகுதிகள் அம்மாதிரி ஹில் எரியாவாக இருந்தவை தெரியாமலிருந்தன. அம்மாதிரி தெரிய வந்தால், அதை "நோடிபை" பண்ணலாம் என்று இருக்கிறது. எதை வேண்டுமானாலும் "ஹில் எரியா" என்று சொல்லிவிட் முடியாது. டெபனிஷன் க்ளாஸில் "and such other local area comprising a hill" என்று போடப்பட்டிருக்கிறது. மலை இருக்கிற பிரதேசமாக இருந்தால்தான் "ஹில் எரியா" என்று "நோடிபை" செய்யமுடியுமே தவிர, நினைத்ததையெல்லாம் செய்துவிட முடியாது. ஏதோ அரசாங்கம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று வழக்கமாகப்பாடும் பல்லவியை இங்கே சொல்லவேண்டியதில்லை. நோடிபிகேஷன் பிறப்பிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு வேண்டாம் என்று திருத்தம் கொடுத்துவிட்டு, அதிலே கூட வழக்கமான பல்லவி வேண்டாம் என்றுதான் நான் சொல்கிறேன். நோடிபிகேஷன் போடும்போது அரசாங்கம் சிந்தித்துத் தான் செய்யும். இஷ்டமான இடத்தையெல்லாம் நோடிபை செய்து விடுவார்கள் என்று நினைக்கவேண்டாம். Hill area என்றுதான் குறிப்பாக இங்கே இருக்கிறது. "area comprising a hill" என்று லிமிடேஷன் இருக்கிறது. தப்பாக நோடிபை செய்தாலும்கூட, அது சட்டசபை முன்பு வைக்கப்படும். ஆகவே, இந்தத் திருத்தம் வேண்டியதில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

20th September 1961]

DEPUTY SPEAKER : The hon. Member Srimathi T. N. Anandanayaki can now speak, but I would like her to be very brief.

SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of personal explanation, Sir. நிலமில்லாத ஏழைகளைச் சொல்லவில்லை. பெரிய பணக்காரர்களை விட்டு, சின்ன பணக்காரர்களை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கேட்டேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை.

SRI M. KALYANASUNDARAM : I am pressing my amendment, Sir.

The amendment was put and lost.

Sub-clause (20)

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir. I move the following amendment :—

In item (*b*) of sub-clause (20)—

(*a*) in sub-item (ii), *omit* the word ' and ' at the end;

(*b*) after sub-item (ii), *insert* the following sub-item, namely—

" (iii) any land of which the land revenue alone or portion thereof has been granted in inam to any person, provided that such grant has been made, confirmed or recognized by the Government; and

(*c*) *re-number* the existing sub-item (iii) as sub-item (iv).

The idea is to provide for such lands where melwaram alone is given as inam regarding which we will not have proper data. Therefore it is necessary to have such an amendment.

The amendment was put and carried.

Sub-clause (29)

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

In sub-clause (29), after the word " seaman ", *add* the following words " whose monthly salary does not exceed Rs. 500 ".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The sub-clause and the amendment are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களும், ஆகாயப் படையிலும் கடற்படையிலும் பணி புரிபவர்களும் திரும்ப வந்து அவர்கள் விவசாயத்தில் ஈடுபடவேண்டுமானால், நிலத்தை மீட்கும் உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த விளக்கம், நிலத்தைச் சொந்த சாகுபடிக்கு

[Sri M. Kalyanasundaram] [20th September 1961

மீட்கும் உரிமை சம்பந்தமானது. அதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்கும் இருக்கமுடியாது. யாருக்கு அந்த உரிமை கொடுக்கவேண்டும் என்று இந்த உப-பிரிவு நிர்ணயிக்கிறது.

ராணுவத்தில் வேலை செய்கிற பெரிய அதிகாரிகள் திரும்ப வந்த பிறகு, சொந்த சாகுபடிக்குத் தேவையான நிலத்தை, உச்ச வரம்புக்கு உட்பட்டு, வைத்துக்கொள்ளட்டும் ; வருமானத்தை எடுத்துக்கொள்ளட்டும். நிலமே வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் இயற்றவில்லை. ஆனால், குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றிவிட்டு சொந்த சாகுபடிக்காக என்று சொல்லி, நிலத்தை மீட்கும் உரிமையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பது என் திருத்தத்தின் நோக்கம். யாருக்கு அந்த உரிமை வழங்கவேண்டும் ? மாதமொன்றுக்கு 500 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் வாங்குபவர்களுக்கு வேண்டுமானால் ஓரளவுக்கு அந்த உரிமை வழங்கலாம். எந்த அளவுக்கு அந்த உரிமை வழங்கலாம் என்பது பற்றி அது சம்பந்தப்பட்ட பிரிவு பின்னால் வரும்போது குறிப்பிடுகிறேன். 500 ரூபாய்க்கு குறைவாக இருக்கிறவர்களுக்கு ஓரளவு உரிமை கொடுக்க
12–00 noon. வேண்டியதுதான். மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கி 250 ரூபாய்க்கு மேல் பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு இப்படி நிலம் நீக்கும் உரிமையை கொடுத்திருப்பது சரியானதாகாது. இந்த மசோதாவை முதலில் குறிப்பிட்டிருக்கிற நோக்கங்கள் இருக்கின்றனவே, அவற்றின் லட்சியம் ஈடேறவேண்டுமென்றே இதை கொடுத்திருக்கிறேன். ஆகவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : 'Member of the Armed Forces, —Seamen— '

என்பதற்காக இந்தத் திருத்தம். அதுவும் இது 64-வது பிரிவில்

"Notwithstanding anything contained in this Chapter, any member of the Armed Forces may, after discharge or release from the service of the Air Force, Army or Navy of the Union of India, or of the Merchant Navy, as the case may be, resume possession of land up to the ceiling area from the cultivating tenant for the purpose of personal cultivation."

என்று இருப்பதற்கு இது தடை விதிக்கிறது. ஜென்மம் பூரா நாட்டுக்காக வீட்டை விட்டு பட்டாளத்தில் சேர்ந்து ஆர்ம்ட் போர்ஸில் பணியாற்றி திரும்பியவர்களுக்கு உயிரையும் திரணமாக மதித்து சமுத்திரத்திலே போராடியவர்களுக்கு நாம் இந்தச் சட்டத்தின்படி பட்டாளத்திலிருந்து திரும்பி வந்தவுடன் அவர்கள் நிலத்தை சொந்த சாகுபடிக்கு மீட்டுக்கொள்ளலாம் என்று சொல்லுகிறோம். அதுவும் உச்ச வரம்புக்கு உட்பட்டேதான். முன் காலத்தில் சண்டையில் சேர்ந்துதே தசத்திற்காக பணியாற்றியவர்களுக்கு கிராமம் கிராமமாக மானியங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் இந்த மாதிரி ஒரு சிறிய பாதுகாப்பை கொடுத்திருப்பது சரியல்ல என்று சொல்வது சரியாகாது. அதுவும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் என்று வரையரை செய்வதும், அத்தகைய பாகுபாடு காட்டுவது நல்லதல்ல. நாட்டுக்காக தன் வீட்டைவிட்டு, மனைவி மக்களை விட்டு (நேற்றுக்கூட பேபரில் பார்த்தோம், விமானம் நாச வேலைக்கு உள்ளாகியதா என்று தெரியவில்லை)—இப்படி தங்கள் உயிரையே அர்ப்பணித்து பணியாற்றி திரும்பியவர்கள் விஷயத்தில் கட்டுப்பாடு வைப்பது நியாயமல்ல. ஆகவே இந்த திருத்தத்தை நான் எதிர்க்கிறேன்.

உ

20th September 1961]

SRIMATHI T. N. ANANDANAYAKI : உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தப்படி 'whose monthly salary does not exceed Rs. 500' என்று இருக்கிறது. மாதச் சம்பளம் எப்போது எந்த நேரத்தில்? வீட்டுக்கு வந்த பிறகு 500 ரூபாய் சம்பளமா? அல்லது வேலையில் இருந்தபொழுது 500 ரூபாய் சம்பளமா? என்பதை முதலிலே விளக்கவேண்டும்? (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: வீட்டுக்கு வந்தபிறகு பென்ஷன்) சரி, அதற்கு பேர் பென்ஷன் என்றே வைத்துக்கொள்வோம். திருத்தத்தில் ஸாலரி என்பதற்கு பென்ஷன் என்கிறார். அது எப்படி பொருந்துமோ அது அவருக்குத்தான் தெரியும். மற்றொன்று ஆர்மியில் பலர் 4 வருடம், 5 வருடம், 3 வருடம் காண்ட்ராக்ட் சர்வீஸில் இருக்கிறார்கள். சிவில் சர்வீஸ் போல ஓய்வு பெறும் வயதுவரையில் ஒருவர் பணியாற்றமுடியும் என்று சொல்ல முடியாது. நடுவிலேயே காண்ட்ராக்ட் முடிந்து வருகிறவர்களும் இருக்கிறார்கள். மெடிகல் டெஸ்ட் செய்து தகுதியில்லையென்றாலும் ஓய்வு பெறும் வயதிற்கு முன்பே வருகிறவர்களும் இருக்கிறார்கள். அப்படியிருக்க இதையெல்லாம் ஆலோசிக்காமல் 500 ரூபாய் என்று குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமல்ல. நாட்டுக்கு உழைப்பதற்காக சேனையில் சேருகிறார்கள். உயிரையும் பணயம் வைத்து சேனையில் சேருகிறார்கள். ஆகவே அந்த பணியிலிருந்து வந்தவுடன் அவர்களுடைய நிலத்தையாவது மீட்டுக்கொள்ள, நாம் ஒரு பாதுகாப்பு அளிக்கவேண்டியது மிகவும் அவசியம்தான். ஒரு கட்டுப்பாட்டோடு ஒரு ஒழுங்கோடு சேனையில் பணியாற்றிய அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதனால் உணவு உற்பத்தி பெருகக் கூடும். அதுவும் அந்தக் காலத்தில் போர்வீரர்களுக்கு எத்தனையோ மானியங்கள் அளித்தார்கள். சேர, சோழ, பாண்டியர் காலத்தில் "செருமுனை சென்றவர்களுக்கு செஞ்சோற்றுக் கடனளிப்பதற்காக" பல மானியங்கள் வழங்கி இருக்கிறார்கள். இப்போது நாம் வீரத்திற்கு மதிப்பு கொடுக்கிறோமா இல்லையா என்பதை சிந்திக்கவேண்டும். உழைப்பிற்கும், வீரத்திற்கும் மதிப்பு கொடுக்கிற நாம் இத்தகைய ஒரு திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவது தகாது என்று சொல்லி, இதை கனம் அங்கத்தினர் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : மாதம் 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் எல்லாம் ஏதோ கடனில் உயிரை விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று இங்கே கண்ணீர் விடுவது போதாது. அவர்கள் நாட்டுக்காக போராடுகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். விவசாயிகளும் அதில் சளைத்தவர்களும் அல்ல. நாட்டின் சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்கள். அவர்களுக்கு பாதுகாப்பு என்கிற பெயரால் இவர்களுக்கு ஏமாற்று அளிக்கிற ஒரு காரியம் நடக்குமானால் அது எதிர்க்கத்தக்கது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். சேரன், சோழன் காலத்து சமாசாரத்தை எடுத்தால் அது வேறு விவகாரம். இப்போது நாம் அந்த காலத்தில் இல்லை. நமது அமைச்சர் அவர்கள் கூட "புதிய இந்தியா" வை சிருஷ்டிக்க போகிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் அந்த வாதம் பொருத்தமற்றது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதே மிகவும் புத்திசாலித்தனம் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI M. P. SUBRAMANIAM ; சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது அங்கிருந்து வெளியே வருகிறவர்கள் திரும்பி வரும்போது அவர்கள் நிலத்தை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று 64-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதை அல்லது இந்த உப பிரிவு 29-ல் இருப்பதை, 500 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கி வந்தவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலத்தை

எடுத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்பதுதான் திருத்தத்தின் நோக்கம். எனக்குத் தெரிந்தவரையில் இந்த நோக்கத்தை இந்தப் பிரிவிலும் கொண்டு வரலாம், 64-வது பகுதியிலும் கொண்டுவரலாம். இந்த அடிப்படை நோக்கத்தை ஒப்புக்கொள்கிறார்களா என்பதுதான் கேள்வி. ராணுவ சேவை செய்தவர்களுக்கு நாம் இதன் மூலம்தான் மரியாதை காட்டவேண்டும், என்று தேவையில்லை. வேறு பல துறைகளில், பல வகைகளில் அவர்களுக்கு அரசாங்கம் சலுகைகள் காட்டமுடியும். பொதுவாக ஒரு விதியிருக்கும்போது, அதற்கு மேற்பட்டு யாரும் "பர்ஸனல் கல்டிவேஷனுக்கு" எடுத்துக்கொள்ளக் கூடாது என்றுதான் சொல்லப்படுகிறது. திருத்தம் கொடுப்பவர்கள் ஏதோ ராணுவ சேவை செய்தவர்களின் முக்கியத்துவத்தைக் குறைத்துச் சொல்வது போலவும், இந்தத் திருத்தத்தை எதிர்த்துப் பேசுபவர்கள் அவர்களின் முக்கியத்துவத்தைஅறியாது பேசுவதுபோலவும் பேசுவது உண்மை நிலையை உணராததுதான் காரணம். முப்பது ஏக்கர் வரை அவர்கள் வைத்துக்கொள்ள உரிமையிருக்கிறது. நிலம் சொந்தமாக வைத்துக்கொள்ள, அதிலிருந்து வருமானம் அடைய தடை ஒன்றும் இருக்கப்போவதில்லை. சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்வதில் எல்லோரையும் போல் அவர்களையும் பாவிப்பதில் ஒரு கெடுதலும் வரப்போவதில்லை. இதை இதிலும் செய்யலாம் அல்லது 64-வது பகுதியிலும் செய்யலாம். உத்தியோக வரி, விற்பனை வரி போன்றவை கொடுப்பவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ள தகுதியற்றவர்கள் என்று சேர்த்திருந்ததை இப்பொழுது மாற்றியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட பகுதி வரும்போது அதுபற்றி பேசிக்கொள்ளலாம். ராணுவத்தில் 500 ரூபாய் சம்பளம் வாங்கி வந்தவர் என்று எடுத்துக்கொண்டாலும் 100, 150 பென்ஷன் வாங்கி வருபவர்கள் சொந்த சாகுபடிக்கு நிலம் எடுத்துக்கொள்ள தடை இருக்கும் என்பதை இந்தப் பிரிவில் சேர்த்துக்கொள்ளலாம். இதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMI : அவைத் தலைவர் அவர்களே, கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய பேலின் பிரிஜ் உறுப்பினர் அவர்கள் சம்பளத்திற்கும், பெண்ஷனுக்கும் வித்தியாசம் தெரியாத முறையில் 500 ரூபாய் ஸாலரி என்று வாங்கிக்கொண்டு எப்படி வரமுடியும் என்ற வினாவை எழுப்பினார்கள். வேலை செய்யும்போது வாங்குவது ஸாலரி, ஓய்வு பெறும்போது வாங்கும் ஊதியத் தொகை பென்ஷன் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்களானால் அந்த சந்தேகம் அவர்களுக்கு எழவேண்டிய அவசியமே இருந்திருக்காது. பட்டாளத்தில் சென்று டிஸிப்ளின் கற்றுக்கொண்டு வந்ததால் அதிக விளைச்சல் வந்துவிடுமென்று எதிர்பார்ப்பது விபரீதமாக முடியும் என்பதில் யாருக்கும் இரண்டு வித கருத்து இருக்க முடியாது. அங்கு அவரது வீரத்தைக் காட்டுவதற்கு, அவரது பலமும் மூளையும் பயன்பட்டிருக்கலாம். ஆனால் விவசாயத் துறையில் அவர்களுக்கு அந்தளவு அனுபவம் இருக்குமா என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மை விவசாயிதான் நிலத்தில் நல்ல பலன் ஏற்படச் செய்ய முடியும்.

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவோ விவசாய மக்கள் மிலிட்டரிக்கு போயிருக்கிறார்கள். மீண்டும் இங்குவந்து நன்கு விவசாயம் செய்யும் அன்பர்கள் இருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMI : பட்டாளத்தில் இருப்பவர்களைக் குறை கூறுவதாக நினைத்துக்கொண்டு மாஜி பட்டாள வீரர் வக்காலத்து வாங்கிக் கொண்டுவந்தார்கள். இன்று அவர்கள் அமைச்சராக இருந்தாலும் அவர்கள் விவசாயத் துறையில் ஈடுபடுவார்களானால் எதிர்பார்க்கிற பலனை அவர்களால் உண்டாக்கமுடியும். ஆனால் பட்டாளத்திலுள்ள அத்தனை பேர்களும் ஓய்வு பெற்று வந்து அந்த அளவு உற்பத்தியை பெருக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். பட்டாளத்திலிருந்து

வருகிறவர்கள் கொஞ்சம் கடுமையானவர்கள் என்ற காரணத்தினல் அவர்கள் நல்லவர்களாகயிருந்தாலும், திரும்பிவரும்போது ஊரிலுள்ள சில பொல்லாதவர்கள் " இந்தமாதிரி சட்டம் இருக்கிறது, இந்த ஷரத்தின் அடிப்படையில் விவசாயியை அப்புறப்படுத்திவிடலாம், சொந்தசாகுபடிக்கு நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள் " என்று தூண்டிவிட்டு அங்கு பயிரிட்டு வரும் ஏழை விவசாயியை வெளியேற்றும் நிலே ஏற்படுமென்ற காரணத்தால் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of personal explanation. The hon. Member was telling that I did not know the difference between 'salary' and 'pension'. I need not learn the meaning of these words from the hon. Member Sri A. Govindasamy But, the trouble is this. The amendment moved by the hon. Member Sri Kalyanasundaram speaks only about salary and does not mention anything about 'pension'. So, I am not at fault. Under these circumstances, the hon. Member should not say that I do not understand the meaning of these words and the difference between the two. On the other hand, the hon. Member Sri Govindasamy has not understood the meaning all right and he has not cared to look into the amendment.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஐயா, இது ஒரு விசேஷ சலுகை கொடுப்பது, ராணுவத்தில் சேவை செய்தவர்களுக்கு. கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்களும் இந்த சலுகையை ஆட்சேபிக்கவில்லே. இவ்வளவு சம்பளம் வாங்குகிறவர்களுக்குத்தான் கொடுக்கலாம், அதற்கு மேல் உள்ளவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று சொல்கிருர்கள். அவர்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக பெரிய சேவை செய்கிருர்கள், உயிரைக்கூட மதியாமல். இங்கு நடக்கும் விஷயம் ஒன்றும் வ ; ளுக்கு தெரியாது. அவர்கள் எங்கேயோ இருக்கிருர்கள். அவர்கள் திரும்பி வரும்போது முன்பு இருந்த நிலே இருந்தால்தான் அவர்கள் மேலும் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியும். ராணுவத்தில் பெரிய உத்தியோகஸ்தர்களாக இருப்பவர்கள், காப்டன் போன்ற பதவிகளில் இருந்தவர்கள், ஒரு "ஸ்டான்டேர்ட்" வாழ்க்கை நடத்தியவர்கள் பின் தங்கள் வாழ்க்கையை சரிவர நடத்தமுடியாத நிலேயை ஏற்படுத்துவது சரியல்ல. முன்பெல்லாம் வீர மானியம் என்று ராணுவ வீரர்களுக்கு பெரிய பெரிய ஜாகீர்கள் கொடுத்திருக்கிருர்கள். நாம் இங்கு இப்பொழுது ஜாகீர் கொடுக்கவில்லே. அவர்கள் சொந்த நிலத்தை அவர்கள் மறுபடியும் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள உரிமை கொடுக்கிருேமே தவிர பெரிதாக ஒன்றும் கொடுக்கவில்லே. ஆகவே இந்த சலுகையை அவர்களுக்கு கொடுக்கவேண்டியதுதான். இது ராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு தனி சலுகை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதில் பாகுபாடுவேண்டாம். ஐந்து நூறுக்குள் இருக்கவேண்டும், அதற்கு மேல் கூடாது என்று இருக்கவேண்டியதில்லே. ஏழைகள் உப்பு இல்லே என்று அவஸ்தைப்படுகிருர்கள், பணக்காரன் சர்க்கரை இல்லே என்று அவஸ்தைப்படுகிருன். அதற்கதற்கு ஒரு ஸ்டான்ட்டேர்ட் இருக்கிறது. ஆகவே பாகுபாடு இப்பொழுது இருப்பது போலவே இருக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : எனது திருத்தம் தெளிவாகயிருக்கிறது. ரிட்டயராகும்போது வாங்கும் சம்பளத்தை குறிப்பிடுகிறேன். அதில் குழப்பமில்லே. திருத்தத்தை ஒப்புக்கொண்டால் வார்த்தையை எப்படி மாற்றலாம் என்று பார்த்து திருத்தலாம். ஆனல் இதை ஒப்புக்கொள்ள கனம் அமைச்சர் அவர்கள் தயாராயில்லே. ஆகவே, இதை வற்புறுத்துகிறேன்.

The amendment was put and lost.

Sub-clause (35)

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In sub-clause (35), after the words ' cultivation of land by its owner ', *add* the words ' who should be resident within three miles of the land '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" For sub-clause (35) (iii), *substitute* the following :—

(iii) ' by hired labour or by servants on wages payable in cash or kind (but not as a share of produce) with his own stock as far as possible under the supervision of himself or any member of his family residing within a distance of five miles from the location of the land '."

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I move—

" In sub-clause (35), *insert* the following as Explanation I, after (iii) and *renumber* the existing Explanation as Explanation II.

' Explanation I : Any person whose residence is more than five miles from his land, will be deemed to have no personal cultivation.' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : The sub-clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் சபைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பெர்ஸனல் கல்டிவேஷன் என்ன முறையில் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் கொடுத்திருக்கும் டெ·.பினிஷன் நேர்விரோதமாக இருக்கிறது. 1936-லிருந்தே உழுபவனுக்கு நிலம் சொந்தமாக இருக்கவேணடும் என்று சொல்லி வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல, சுதந்திரம் அடைந்த பின்னாலும் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் நாம் நிலம் உழுபவனுக்கு சொந்தமாக இருக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுகிறோம். இப்போது மட்டுமல்ல, 1937-ம் ஆண்டு இந்தியா பூராவும் காங்கிரஸானது மெஜாரிட்டி கட்சியாக இருந்தபோது எ.ஐ.ஸி.ஸி.-யில் இதைப்பற்றி தீர்மானம் போட்டிருக்கிறது. அதாவது அங்கங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் சட்டசபைக்கும் பார்லிமென்டுக்கும் போனவுடன் விவசாயத்தில் இன்டர்மீடியர்களை போக்கக்கூடிய வகையில் சட்டம் செய்ய பாடுபடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1901-ல் வெள்ளைக்காரன் இருந்த போதே லான்ட் எலியனேஷன் ஆக்ட் ஏற்படுத்தினார்கள். அதோடு விவசாயம் செய்கின்றவர்கள்தான் நிலத்தை விற்கவோ வாங்கவோ செய்யவேண்டும் என்று அன்றையதினமே சட்டம் இயற்றினார்கள். பொது

வாக இருக்கின்ற "அப்ஸன்டீ லான்ட் லார்டிஸமை" போக்க வேண்டும் என்று நாம் தீர்மானம் போட்டிருந்த போதிலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தபட்சம் விவசாயம் செய்கின்றவர்கள் நிலத்தின் பக்கத்தில் அதாவது ஐந்து மைல்களுக்குள்ளிலாவது இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பெர்ஸனல் கல்டிவேஷன் என்று சொல்லும்போது குறைந்தது "எலிமென்ட் ஆப் லேபர்" என்ற அளவிலாவது இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பூமிக்குப் பக்கத்திலாவது இருக்கவேண்டும் என்பதையாவது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? சென்னையில் ஒருவர் இருந்துகொண்டு, கோபியில் ஏராள மான நிலங்களை விவசாயம் செய்துகொண்டிருக்கலாம். அதேபோன்று காரைக்குடியில் ஏராளமான சொத்துக்களை வைத்துக்கொண்டு இங்கிருந்து கொண்டே பெர்ஸனல் கல்டிவேஷன் என்று சொல்லிக்கொண்டு விவசாயி களை வெளியேற்ற முடியும். இதை தடுக்க வேண்டியது மிகவும் அவசியம். அப்ஸன்டீ லான்ட் லார்டிஸம் இருக்கக்கூடாது என்று நாம் தீர்மானித் தாலும் குறைந்த அளவு விவசாயம் செய்கின்றவர்கள் பக்கத்தில் இருக்க வேண்டும் என்ற முறையில்தான் இந்த திருத்தம் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : ஸார், இது சொந்த சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கம். குத்தகை சாகுபடி என்றிருந்தால் விளக்கம் வேறு விதமாக இருந்திருக்கவேண்டும். சொந்த சாகுபடி என்று சொல்லும்போது குடும்பத்தின் சொந்த உழைப்பு இருக்கவேண்டும் என்பது தான் சாதாரண விளக்கம். இதில் பெர்ஸனல் கல்டிவேஷன் என்று சொல்லியிருப்பது நிலத்தை மீட்பதற்குத்தான் முக்கியமாக பயன்பட்டி ருக்கிறது. எந்த அடிப்படையில் நிலத்தை மீட்கலாம் என்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சொந்த சாகுபடி என்ற பெயரால் கூலி ஆட்களை வைத்துக்கொண்டு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள் எத்தனையோ பேர்கள். அவர்களை எல்லாம் இந்தச் சட்டம் பாதிக்காது. இப்போது உச்சவரம்புக்குட்பட்டு வரக்கூடியவர்கள், இதுவரை சொந்த சாகுபடி செய்யாதவர்கள் சொந்த சாகுபடிக்கு எடுக்கும்போது எந்த அடிப்படையில் வழங்குவது என்பதுதான் இதில் வரக்கூடிய விளக்கம். ஒருவருக்கு ராஜ்யத்தில் பல ஜில்லாக்களில் நிலங்கள் இருந்தாலும் இந்த சட்டத்தின்படி சொந்த சாகுபடி என்று சொல்லி அந்த நிலங்களை எல்லாம் மீட்கலாம். இந்தச் சட்டத்திற்கு முன்னால் வருகின்றவர்களை இது பாதிக்காது. எந்த முறையிலும் குடியானவனுடைய பிழைப்பை கெடுக்கக் கூடிய வகையில் நிலத்தை மீட்கக்கூடாது என்பதுதான் இதன் பிரதான மான நோக்கம். அதற்கு எந்த வகையில் உதவி செய்வது என்பதை நாம் பார்க்கவேண்டும். யாருடைய உழைப்பைப்பற்றியெல்லாம் பேசி னோம், ஆனால் விவசாயிகளுடைய உழைப்புக்கு என்ன பதில் என்பதுதான் தெரியவில்லை. விவசாயிதான் இந்த நாட்டின் முதுகெலும்பு, அவன்தான் இந்த நாட்டின் அஸ்திவாரம், என்றெல்லாம் பேசுகிறார்கள், ஆனால் அவனுக்கு நிலம் தருவதற்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது மட்டும் ஏன் மறுக்க வேண்டும். அவனுடைய உழைப்பு சாதாரணமானது அல்ல, நாள் பூராவும் நிலத்தில் வேலை செய்து தன்னுடைய இரத்தத்தை மண்ணில் கொட்டித்தான் பலன் எடுத்துத் தருகிறான். ராணுவத்தில் போராடுவதைமட்டும் நாம் சொன்னால் போதாது, அதே போன்றுதான் மணணில் போராடுகிறான், அவனுக்கு பதில் என்ன? விதையும் தண்ணீரும் மண்ணில் போட்டுவிட்டால் பதில் தந்து விடாது, விவசாயி மண்ணில் இறங்கி வேலை செய்தால்தான் பதில் கிடைக்கின்றது. அப்பேர்ப்பட்ட விவசாயிக்கு நிலம் தருவதற்கு இந்தச் சட்டத்தின்மூலம் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் கொடுக்கப்பட்டி ருக்கும் பெர்ஸனல் கல்டிவேஷன் என்பதற்குள்ள விளக்கத்தில், நான் கொடுத்திருக்கும் திருத்தம், மிகவும் நிதானமாகத்தான் கொடுத்திருக் கிறேன். சொந்த சாகுபடி என்று சொல்லும்போது நிலத்தில் இறங்கி நேரடியாக உழவேண்டும் என்று சொல்லவில்லை, சாதாரணமாக மேற்

பார்வை செய்வதைக்கூட நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன், ஆனால் இவ் விதம் சொந்த சாகுபடி வைத்திருப்பவர்கள் அந்த கிராமத்தில் இருக்க வேண்டும், அல்லது கிராமத்தின் அருகாமையிலாவது இருக்க வேண்டும் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். யாருக்கு வேண்டுமானாலும் சொந்த சாகுபடி என்று சொல்லி எடுத்துக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தில் சொல்லியிருப்பதைத்தான் ஆட்சேபிக்கவேண்டியிருக்கிறது. இப்போது இதன்படி எந்த விவசாயிடமிருந்தும் நிலத்தைப் பறித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கிறது 62, 63-வது பிரிவில். வேறு பாதுகாப்பும் எதுவும் இல்லை. விவசாயிக்கு இதில் எந்தவிதமான பாதுகாப்பு இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆகவே இதை நாம் அமல் நடத்தும்போது விவசாயி களிடத்தில் வெறுப்புணர்ச்சிதான் ஏற்படும். அதன்மூலம் உற்பத்தி பாதிக்கும். விவசாயமே பாதிக்கும். என்னுடைய திருத்தத்தின்படி ஒரு சில கட்டுப்பாடு கொண்டுவரவேண்டியதுதான். சமுதாய நலத்திற்காக ஒரு சிலருடைய நலனில் கட்டுப்பாடு செய்யவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டால் கட்டுப்பாடு செய்யவேண்டியதுதான். சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டு சில கட்டுப்பாடுகளை கொண்டுவரவேண்டியதுதான். இதில் விதி விலக்கு கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதைப்பற்றி பின்னால் கவனிக்கப்படவேண்டும். அது வேறு விஷயம். பல சிறு நிலச்சுவான்தார்கள் சென்னையில் இருக்கலாம், அவர்களுக்கு தவிர்க்க முடியாத காரணத்தின்பேரில் விதிவிலக்கு கொடுக்கவேண்டும்என்று தோன்றினால் அதைப்பற்றி பின்னால் பரிசீலிக்கலாம். ஆகவே இந்தப் பிரச்னையை இந்தத் திருத்தத்தோடு சேர்க்கவேண்டிய அவசியமில்லை. முக்கியமாக திட்டக் கமிஷன் கூறிய யோசனைக்கு மாறாக, "எலிமென்ட் ஆஃப் பெர்ஸனல் கல்டிவேஷன்" என்பது எப்படியிருக்கவேண்டும் என்று சொன்னதற்கு நேர்மாறாக செலக்ட் கமிட்டி திருத்தம் செய்திருக்கிறது. ஆகவேதான் இதன் பேரில் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை, வற்புறுத்தவேண்டியிருக்கிறது. நான் கொடுத்திருக்கும் எந்த திருத்தத்தையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இருப்பினும் இம்மாதிரியான சட்டங்களை இயற்றும் போது சரியான கருத்துக்களை சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்ற முறையில் இந்தக் கருத்துக்களை சொல்லி, என் திருத்தத்தையும் வற்புறுத்தி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m. *SRI M. P. SUBRAMANIAM : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 35-வது உட்பிரிவில் சொந்தச் சாகுபடி என்பதைப்பற்றி விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. அதிலே நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தின் முக்கிய நோக்கமெல்லாம் சொந்தச் சாகுபடி செய்யக் கூடியவர்கள் சொந்த நிலத்திலிருந்து மூன்று அல்லது ஐந்து மைல் சுற்றுவட்டாரத்தில் குடியிருக்கவேண்டும் என்று திருத்தி அமைக்க வேண்டுமென்று கூறுவதற்காகத்தான். ஏற்கெனவே நடந்த பொது விவாதத்தில் இதைப்பற்றி பலர் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். இப் போது உள்ள அடிப்படையில் சட்டம் நிறைவேறினால் பலர் வெளியே அப்புறப்படுத்தப்படக்கூடிய நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். பொறுக்குக் குழுவிலேகூட கட்சிப் பாகுபாடின்றி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், விவசாயத்தைப்பற்றி, நன்றாக தெரிந்தவர்களெல்லாம் இந்த மசோதாவிலுள்ள அடிப் படையில் சட்டம் நிறைவேறினால் ஆயிரக் கணக்கான விவசாயிகள் வெளி யேற்றப்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் அரசாங் கத்திற்கு. ஏற்கெனவே மற்ற சட்டங்களினால் சாகுபடியாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்புகளும், இந்தச் சட்டத்தின் மூலமாக சொந்த சாகுபடிக்கு மீட்டுக்கொள்ளுவது என்ற பெயரால், மற்ற சட்டங்களினால் கிடைத்த பாதுகாப்புக்களெல்லாம்கூட போய்விடும் என்று தெளிவாகப் பலர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதனால் என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால் குத்தகை சாகுபடி நிலங்களெல்லாம் பண்ணை சாகுபடி நிலங்களாக மாறும். நிலத்தில் குத்தகைதாரனாக இருந்தவன்

20th September 1961] [Sri M. P. Subramaniam]

அன்றுடக் கூலி அல்லது மாதக் கூலி ஆகக்கூடிய நிலைமைக்கு வந்து விடும் என்று எல்லோராலும் வலியுறுத்திக் கூறப்பட்டிருகிறது. ஆகையால் சொந்த சாகுபடிக்கு யார் எடுத்துக்கொள்வது என்பதைப்பற்றி அரசாங்கமும் நாமும் அதிக கவனம் செலுத்தவேண்டும். சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளுபவர் உண்மையாகவே சொந்தத்தில் சாகுபடி செய்யவேண்டும் —உண்மையான விவசாயியாக இருக்கவேண்டும். யார் உண்மையான விவசாயி, யார் உண்மையாக விவசாயம் செய்யவேண்டுமென்ற விருப்பம் உடையவர்கள் என்று பார்க்கும்போது தங்களுடைய நிலத்திலிருந்து மூன்று மைலுக்குள் அல்லது ஐந்து மைலுக்குள் இல்லாதவர்கள் நிச்சய மாக விவசாயியாக இருக்க முடியாது. அமைச்சர்காளக இருப்பவர்கள் விவசாயிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர்கள் அல்ல. ஐந்து மைலுக்கு அப்பால் இருந்துகொண்டு சொந்த சாகுபடி செய்கிறேன் என்றால் யாரால் அதை நம்ப முடியும்? மூன்று அல்லது ஐந்து மைல் தூரத்திலிருந்தாலேயே சாகுபடிச் செய்வது சற்று கடினமாக இருக்கக்கூடிய விஷயம் சொந்தசாகுபடி செய்வதென்றால் காலை முதல் மாலை வரை வயலில் மேற்பார்வை பார்க்கவேண்டியிருக்கிறது. ஒரே ஊரில் இருந்தால்கூட காலையும் மாலையும் சென்று மேற்பார்வை செய்யாவிட்டால் விவசாயம் எப்படி இருக்கும் என்பது விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஐந்து மைல் வட்டாரத்தில் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லாமலிருந்தால், நிலம் இருக்குமிடத்திலிருந்து 100 மைல் தூரத்தில் ஒருவன் இருந்தால் மாதத்திற்கு 50 ரூபாய் அல்லது ஆண்டுக்கு 300 ரூபாய் என்று கொடுத்து ஆள் போட்டுக்கொண்டு அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், ஏதாவது தவறு இருந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்துவிடுவார்கள். தஞ்சை ஜில்லாவில் பண்ணை நிலங்களில் மேற் பார்வை பார்க்க அதிக வேலை கிடையாது. ஏனென்றால் தண்ணீர் பாய்ச்சி, வயலை உழுது, பயிரை நட்டு விட்டால் அறுவடை காலத்தில் கொஞ்சம் மேற்பார்வை பார்த்தால் போதும். மாதம் 20 மரக்கால் அல்லது 15 மரக்கால் என்று கொடுத்துவிட்டு சென்னையில் இருந்துகொண்டு செய்ய முடியும். இங்கே பணி மனையில் வேலை செய்துகொண்டு, அல்லது வியாபாரத் துறையில் இருந்துகொண்டு, அல்லது மற்ற துறைகளில் வேலை செய்துகொண்டு சொந்த சாகுபடி என்ற பெயரால் சென்னையில் இருந்து கொண்டு தஞ்சையில் நிலத்தை மீட்டுக்கொள்ள வழிவகை இதனால் ஏற்படும், இதனால் பலர் வெளியேற்றப்பட வாய்ப்பு இருக்கிறது, விவசாயி களல்லாதவர்களுக்கு இதன்மூலமாக சலுகை கொடுத்திருப்பதால் இத் தகைய கெடுதல்கள் நேரும். அரசாங்கத்திற்கே இத்தகைய நோக்கம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இதை அரசாங்கம் நன்றாக உணர்ந்து இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். பலர் சுட்டிக் காட்டியது போல திட்டக் கமிஷன் இதைப்பற்றி ஆழ்ந்த கருத்தைத் தெரிவித்திருக்கிறது. நிச்சயமாக இது தவிர்க்கப்படவேண்டும் என்று தெளிவாக்கியிருக்கிறார்கள். அதையும் ஆலோசித்து இந்தத் திருத்தத்தை நிச்சயமாக ஏற்றுக்கொண்டு . . . (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் : அது இப் போது எடுக்கப்பட்டு விட்டது) நோக்கத்தைப் பார்க்கவேண்டும். எப்படி அது எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அமைச்சரைப் போல நாலு பேர்கள் சொல்லியிருக்கக்கூடும், அவர்களும் சரிதான் என்று எடுத் திருக்கக்கூடும். ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் விவசாயம் தெரிந்தவர்கள் என்பதை நாட்டுக்குக் காட்டிக்கொள் வார்கள் என்று எண்ணி, நிலத்திலிருந்து அதிக வெளியேற்றம் இல்லா மல் தடுக்க இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : என்ன காரணம் என்று கேட்டார்கள். விவசாயி என்றால் நடந்துதான் போகவேண்டும், அவன் காரில் போகக்கூடாது, மோட்டார் சைக்கிளில் போகக்கூடாது என்று போட்டிருந்தார்கள். சிலர் கேட்டார்கள், நடந்துபோனால்தான் ஒருவன் விவசாயியா, விவசாயிக்கு எந்த சௌகரியமும் இருக்கக்கூடாதா, 10 ஏக்கர்

இருக்கக்கூடியவன் காரில் போய்ப் பார்க்கக்கூடாதா—கனம் அங்கத்தினர் நல்லசிவம் போகின்ற மாதிரி—என்று. அதன்பேரில்தான் அதை எடுத்து விட்டார்கள்.

Sri **A. R. SUBBIAH MUDALIAR** : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் பழனிசாமி அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் பிரேரேபித்திருக்கின்ற திருத்தத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன். அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்திலிருந்து அவர்கள் சொந்த விவசாயம் செய்தவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் இரண்டு பேர்களும் நகரத்திலிருக்கின்றவர்கள். சொந்த விவசாயத்தைப்பற்றித் தெரிந்தால் இந்த மாதிரி சொல்ல மாட்டார்கள். இப்போது ஒவ்வொரு கிராமத்திற்கும் போக கார் வசதி இருக்கிறது. அன்றாடம் போகலாம் என்று இருக்கும்போது சபை அங்கத்தினர் பழனிசாமி அவர்களுடைய திருத்தத்தைப் பார்த்தால் கொள்கையே அடிபடும் நிலைமை இருக்கிறது. "Cultivation of land by its owner who should be resident within three miles of the land" என்று சொல்லுகிறார்கள். அதாவது மூன்று மைலுக்குள்ளாக இருந்தால்தான் அவர்கள் சொந்த சாகுபடி வைத்துக் கொள்ளலாம், அதற்கு அப்பாற்பட்டு இருந்தால் சொந்த சாகுபடி செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு லோயர் டிவிஷன் கிளார்க் இருக்கிறார். அவருக்கு நிலம் இருக்கிறது. நிலம் இருக்கக்கூடிய இடத்திலிருந்து 10 மைலுக்கு அப்பால் இருக்கக்கூடிய ஊரில் அவர் வேலையாக இருக்கிறார். அவர் சனிக்கிழமை இரவு வந்து ஞாயிற்றுக்கிழமை பூராவும் கிராமத்தில் இருந்து விடுமுறையில் வேலைக்காரர்கள் செய்வதைப் பார்க்க வசதி இருக்கிறது. சாதாரண எளியவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள், அத்தகையவர்கள் செய்யக்கூடாது என்று திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது ஒரு விதத்திலும் பொருத்தமில்லை. நாகரீகம் பெருகிக் கொண்டிருக்கும்போது சாதாரணமாக 10 மைல் தூரத்தை 15 நிமிஷத்தில் போகக்கூடிய வசதி இருக்கும்போது, மூன்று மைலுக்குள் இருந்தால் தான் செய்ய முடியும், அப்போதுதான் வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லுவது கொஞ்சம்கூட பொருத்தமல்ல என்று சொல்லிக்கொண்டு இதை எதிர்க்கிறேன்.

*Sri **R. SRINIVASA IYER** : ஸார், இந்த 35-வது ஸப்-க்ளாஸ் சொந்த சாகுபடி பற்றியது. இதிலே பின்னாலே சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய விதிகளுக்கு டெஃபனிஷன் கொடுத்திருக்கிறது. எதை எடுத்தாலும் தஞ்சாவூர் ஜில்லாதான் சிலர்களுக்கு கண்ணில் படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலே பழைய டெல்ட்டா மட்டுமல்லாமல் புது டெல்ட்டாவில்கூட தஞ்சையிலிருந்து 39-வது மைலில் இருக்கக்கூடிய கிராமங்களில் பண்ணை வைத்திருக்கிற நேரில் அடிக்கடி காரில் போய் நேரில் பார்க்கிற மிராசுதார்கள் இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் இப்போது இருக்கக்கூடிய வசதிகளில் 100 மைல்கூட போகலாம். யாரோ சொன்னார்கள் சொந்தச் சாகுபடி என்றால் தினம் மூன்று தடவை—அரச மரத்தைச் சுற்றுவது வேறு காரணத்திற்காக—இந்த மாதிரி நிலத்தை சுற்றிச் சுற்றி வந்தால்தான் பர்ஸனல் கல்ட்டிவேஷன் என்று. பர்ஸனல் ரிஸ்கை எடுத்து ஆட்களுக்கு சம்பளம் கொடுத்து கல்ட்டிவேஷன் செய்து பர்ஸனல் சூபர்விஷன் வைத்துக் கொள்வது பர்ஸனல் கல்ட்டிவேஷன்தான். அவன் தானே நின்று, நாற்று நட்டு, உழுது பயிரிட்டால்தான் பர்ஸனல் கல்ட்டிவேஷன் என்பதல்ல. சீர்காழி பகுதியில் ஏஜெண்டுகளை வைத்து பெரும்பாலும் வேலை செய்கிறார்கள். கோனேரிராஜபுரம் போன்ற பகுதிகளில் போய்ப் பார்த்தால் காலையில் வடு மாங்காயையும் பழையதையும் சாப்பிட்டு வெளியே கூட கிளம்ப முடியாமல் வாசல் திண்ணையிலேயே படுத்துக்கொண்டிருப்பார்கள். அந்தக் கிராமத்தினர் எல்லாவற்றையும் ஏஜெண்டுகள் பார்த்துக் கொள்ளுகிறார்கள், அப்படிப்பட்ட ஏஜெண்டுகள் என்ன ஆவது. அந்த

20th September 1961] **[Sri R. Srinivasa Iyer]**

ஏஜெண்டுகள்கூட ரெப்ரெஸண்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அங்கு அந்த மாதிரி ஏஜெண்டை வைத்து சாகுபடி செய்வது வழக்கம். மூன்று மைலுக்குள் இருக்கவேண்டும் என்று சொன்னால், மூன்று மைலுக்குள் இருப்பவர்கள்தான் சொந்த சாகுபடி செய்ய முடியும் என்று அர்த்தம் அல்ல.

இன்னும் திட்டக் கமிஷன்பற்றிச் சொன்னார்கள். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்திருக்கிறது. நான் அந்தத் புத்தகத்தை கேட்டனுப்பினேன். ஒன்பது புத்தகங்கள்தான் வந்தன, அவைகளை யாரோ வாங்கிக்கொண்டு போய் விட்டார்களாம். எனக்குக் கிடைக்கவில்லை. அதில் சிறு மிராசுதார்களாக இருக்கிறவர்கள் குத்தகைக்கு விட்டு நிலம் வைத்துக் கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு சிறு மிராசுதாரர்களுக்கு பிரமாதமாக என்னவோ அள்ளிக் கொடுத்து விட்டதாகவும், அதனால் லட்சக் கணக்கான விவசாயிகள் வெளியேற்றப்படுவதாகவும் பிரசாரம் நடக்கிறது. அதோடு சத்தியாக்கிரஹமும் நடத்தப்படுகிறது. சிறிய நிலச்சுவான்தார்களுக்கு நாம் என்ன பண்ணி விட்டோம் என்பதைப் பார்க்கவேண்டும். 1952-வது ஆண்டிலே 14-வது ஆக்டிலே அவர்களுக்கு ஒரு வேலிக்கு எக்ஸெம்ஷன் கொடுத்தோம். 1955-ல் கொண்டு வந்தபோது, அந்த ஒரு வேலிக்கு கொடுக்கப்பட்ட எக்ஸெம்ஷன் போய்விட்டது. ஐந்து ஏக்கர் வரையிலேதான் எடுத்துக் கொள்ளலாம் என்று செய்துவிட்டோம். இந்த ஐந்து ஏக்கர் வரையிலும் 1956-லே கொண்டுவந்த சட்டப்படி, 60—40 குத்தகைக்கு அப்பாற்பட்டதாகச் செய்துவிட்டோம். அதாவது 1955 செப்டம்பர் மாதம் 27-ம் தேதிக்கு முன் இருந்த ஒப்பந்தப்படி குத்தகை கொடுப்பதாய் சாகுபடிதாரன் ஒப்புக் கொண்டால் அதுவும் அப்புறப்படுத்த முடியாது என்று செய்துவிட்டோம். சிறு நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்கு அந்த அளவுக்குகூட நிலம் இல்லாவிட்டால், அதிலிருந்து கிடைக்கக்கூடிய அரிசி இல்லாவிட்டால், காலக்ஷேபம் செய்வதே கஷ்டம் என்று முறையிட்ட காலத்திலே கனம் அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும்கூட இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே முதலிலிருந்த நில உச்ச வரம்பு டிராப்ட் பில்லில் ஐந்து ஏக்கரை திருப்பி எடுத்துக்கொள்ளலாம் என்று போடப்பட்டிருந்தது. இப்போது அந்தச் சர்ச்சைக்கு நான் போக விரும்பவில்லை. "பர்சனல் கல்டிவேஷனை" ப் பற்றித்தான் இப்போது சர்ச்சை. ஐந்து ஏக்கரில் பாதியை எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். அதில் சில கஷ்டமேற்படும் என்று சொல்லி பின்னால் அதை மூன்று ஏக்கர் என்று பண்ணியிருக்கிறார்கள். மூன்று ஏக்கர்கூட இஷ்டம்போல் எடுத்துக்கொள்ள முடியாது. இன்கம் டாக்ஸ் செலுத்தக் கூடாது. இப்போது பே கமிஷன் வந்த பிறகு இன்கம் டாக்ஸ் செலுத்தாத அப்பர் டிவிஷன் கிளார்க்கூட இருக்க முடியாது. அதற்குமேல் சம்பளமுள்ளவர்கள் நிச்சயம் இன்கம்டாக்ஸ் செலுத்துவார்கள். காரணம், 3,000 ரூபாய்க்குமேல் வரி உண்டு என்றிருப்பதால், அவனுடைய சம்பளமும், அதோடு வீடு இருந்து வாடகையும் சேர்ந்தால், அவன் இன்கம்டாக்ஸ் கட்டும்படியாக நேரிடுகிறது. சீலிங்பற்றி நம்முடைய சபையிலே மே 60-லே ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதில் 39-வது பக்கத்தைப் பார்த்தால்,

"The investigation made by the Special Officer, Sri N. Raghavendra Rao, shows that, except for South Kanara, the percentage of landholders who let out their lands varies from 11 to 33; out of these, only about half are absentee-landlords; and even among the absentees, several live very close to the villages where the lands are situated. The proportion of those who do not live in the rural areas at all will be very small."

இதை எதற்குப் படித்துக்காட்டுகிறேன் என்றால் சூபர்விஷன் என்றிருந்தால், நேரிலே இருந்துதான் பார்க்க வேண்டுமென்று அவசியமில்லை. நிலச்சுவான்தார் நிலத்திலிருந்து 3 அல்லது 5 மைலுக்குள் வசிக்க வேண்டு

[Sri R. Srinivasa Iyer] [20th September 1961

மென்று சொல்வது தவறு. நான்-கெஜடட் ஆபீசராக இருக்கக்கூடியவர்கள் சென்னையிலிருந்துகொண்டு, தங்கள் ஊரில் 4 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு, அங்கிருந்து வரக்கூடிய அரிசியை நம்பிக்கொண்டு சாப்பிடக்கூடியவராக இருக்கிறார்கள். அவர்கள் சாகுபடியை செய்யக்கூடாமல் இருந்தால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாவார்கள். அவர்களுக்கு பர்சனல் சாகுபடிக்கு நிலம் வைத்துக்கொள்ள உரிமை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு ஊரிலிருந்து அரிசி வராது. சென்னையில் வாங்க நேரிடும். அப்போது இன்று இருக்கக்கூடிய விலையைவிட அரிசியின் விலையும் உயர்ந்துவிடும். இங்கு அரிசியை விலைகொடுத்து வாங்கிக்கொண்டு, அவர்களால் காலக்ஷேபம் செய்ய முடியாது. மேற்சொன்ன புஸ்தகத்திலே (Ceiling on landholdings—Extracts from Reports on Agrarian Reforms) 59-வது பக்கத்திலே, சின்ன மிராசுதாரர்கள், சின்ன வியாபாரம் செய்ய வேண்டியிருக்கிறது என்றும் போடப்பட்டிருக்கிறது. மூன்று ஏக்கரை மட்டும் வைத்துக்கொண்டு, பர்சனல் கல்டிவேஷன் செய்து ஒரு குடும்பம் காலக்ஷேபம் செய்ய வேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாக அது முடியவே முடியாது. ஆகவே அவர்கள் வேறு தொழில் செய்யவேண்டும். அவர்கள் கிராமத்தில் இருந்துகொண்டுதான் பர்சனல் சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்கள் தொழில்விட்டு தாங்களாகவே அங்கு போய், இப்போது நிலத்தில் இருப்பவர்களையும் அப்புறப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் ஒருவகையில் ஏற்பட்டு விடும். நல்லது பண்ணப் போய் அது கெட்டதாகத்தான் முடியும். இப்போது பண்ணியிருக்கிற சட்டப்படியே 60, 61, 62-லே இருக்கக்கூடிய பிரிவுகள்கூட போதுமான அளவு இல்லையென்று ஏற்பட்டு விடும். அப்படி இல்லாவிட்டால் அநேக இக்கட்டுகள், கண்டிஷன்கள் போட்டு, இந்தமாதிரி 3 ஏக்கர், 5 ஏக்கர் என்றுதான் சாகுபடி செய்ய வேண்டுமென்று இருக்கக் கூடாது. இப்போதுள்ளபடி 3 ஏக்கர் வரை பர்சனல் கல்டிவேஷன் செய்யலாம் என்று போட்டாலே, இன்கம்டாக்ஸ் கட்டினால் அப்புறப்படுத்த முடியாது. ஆகவே முதலாவது இன்கம்டாக்ஸ் செலுத்துகிறவர் 3 ஏக்கர் எடுக்க முடியாது. இரண்டாவது, அவரிடமுள்ள பர்சனல் கல்டிவேஷன் ஏரியாவைக் கழித்து மிச்சத்தைதான் எடுத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. ஆகவே, பர்சனல் கல்டிவேஷன் என்றால் என்ன வென்று யோசனைபண்ணி கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நம்முடைய மாநிலத்துக்கு பொறுத்தமான வகையில், நம்முடைய தமிழ்நாட்டுக்குப் பொறுத்தமான வகையில் அதன் பழக்கவழக்கங்களை ஒட்டி காரியங்கள் செய்வதுதான் நல்லது. அப்படி இல்லாமல் மணிப்புரி ராஜ்யத்தில் அப்படி இருக்கிறதே, அப்படி செய்தால் என்ன என்று கேட்கப்படுகிறது. அங்கு இப்போது தான் லாண்ட் ரெவின்யூ சட்டமே வருகிறது. இன்னும் நிலங்களை சர்வே செய்யப்படவில்லை. எல்லாம் சர்க்கார் நிலங்களாக இருக்கின்றன. ஆகவே அவர்கள் அப்படிச் சட்டம் போடுகிறார்கள். அதைப்போய் இங்கே சொல்வது முறையல்ல. தவிர, இப்படி நிலச்சுவான்தார் வாஸம் 3 மைல், 5 மைலுக்குள் இருக்க வேண்டும் என்று சொன்னால், அதனால் உற்பத்தி வேறு பாதிக்கப்படும். இப்போதே ஒரு குடியானவனும் சரியாக நடக்கவில்லை. அதேபோல் சாகுபடியாளர்களும் சரியாக நடந்துகொள்ளவில்லை. அப்படி இருக்கும் போது இன்னும் இதை மாற்றியமைக்கவேண்டுமென்று சொன்னால், இதிலே ஜாஸ்தி கஷ்டங்கள்தான் ஏற்படும். "cultivation with own labour, hired labour, hired staff, etc." என்று சேர்க்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது எதற்கு என்று புரியவில்லை. குடியானவனுக்கு முதலில் உழவுக்கு மாடுகள் வேண்டும். அந்த மாடுகளையே அவர்களுக்கு நிலச் சொந்தக்காரர்கள் வாங்கிக் கொடுத்து உதவுகிறார்கள். அவர்கள் அதற்கு ரூபாயே கொடுத்திருக்க மாட்டார்கள். ஆனால் நம்பிக்கைக்காக அவர்களிடமிருந்து எழுதி வாங்கி இருப்பார்கள். மாடு செத்துவிட்டால்கூட நிலச் சொந்தக்காரனுக்குத்தான் நஷ்டமே ஒழிய, அது குடியானவனை பாதிக்காது. இதைத் தவிர, அவர்களுக்கு விதை, உரம் முதலியவைகளையும் அவர்கள் குடியானவர்களுக்கு கொடுத்து உதவுவார்கள். இப்படியெல்லாம் உதவிகள் செய்துவிட்டு, மாதம் ஒரு முறையோ, மூன்று மாதத்

20th September 1961] [Sri R. Srinivasa Iyer]

திற்கு ஒரு முறையோ அல்லது வருஷத்திற்கு ஒரு முறையோ அல்லது கண்டுமுதல் சமயத்திலோ போய் வருவார்கள். இதுதான் நம்முடைய நாட்டிலே வெகு காலமாக இருந்துவரும் பழக்கங்கள். ஆகவே நம் நாட்டிலே இருக்கக்கூடிய பழக்கத்தை யொட்டி சட்டம் செய்தால்தான், அது யாரையும் பாதிக்காது. ஆகவே, விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானுல், பர்சனல் கல்டிவேஷன் என்பதற்கு, நிலச்சுவான்தாரின் வாசஸ்தலம் நிலத்திலிருந்து 3 மைல் என்றோ அல்லது 5 மைல் என்றோ இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும், ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் அவர்களும் சேர்ந்து கொடுத்திருக்கிற திருத்தத்திலே "by hired labour or by servants on wages payable in cash or kind (but not a share of produce) with his own stock as far as possible under the supervision of himself or any member of his family . . ." என்றிருக்கிறது. இதிலே "as far as possible" என்றிருப்பது சரிவர விளங்கவில்லை. இதற்கு அர்த்தமே இல்லை. சட்டப்படி பார்க்கும்போது, இதிலே பர்சனல் சூபர்விஷன் எது அல்லது பர்சனல் சூபர்விஷனு, இல்லையா என்கிற விஷயங்களெல்லாம் சர்ச்சைக்குரியதாக ஆகிவிடும். ரொம்ப ஆலோசனை பண்ணித்தான், சட்ட ரீதியாக எவ்விதத் தகராறும் ஏற்படாத வகையில் (personal cultivation-க்கு definition) போடப்பட்டிருக்கிறது. இப்போது இவர்கள் கொடுத்துள்ள திருத்தம் உண்மையிலேயே ஆபத்தைத்தான் விளைவிக்கும். ஆகவே பர்சனல் கல்டிவேஷன் என்பதற்கு, செலக்ட் கமிட்டியிலே என்ன திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ, அதையே ஏற்றுக்கொள்வது நல்லது. ஆகவே, அதை மாற்றவோ, திருத்தவோ வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பர்சனல் கல்டிவேஷன் அதாவது சொந்தச் சாகுபடி என்றால் என்ன என்பதற்கு நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அது, 5 மைல் விஸ்தீரணத்திற்கு உள் பட்டிருந்தால், அதை பர்சனல் கல்டிவேஷனுக எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான் அது. ஆனுல் கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச அய்யர் சொல்வது என்னவென்றால், காசியிலே உட்கார்ந்துகொண்டு, ராமேஸ்வரத்திலே விவசாயம் செய்யலாம் என்பது அவருடைய கருத்து. விருப்பமும் ஆகும். அதைத்தான் அவர்கள் இவ்வளவு தூரம் சுற்றிவளைத்துச் சொன்னுர்களே தவிர, வேறொன்றும் கிடையாது. அதைவிட்டுவிட்டு, இந்தத் திருத்தத்தினுல் பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று சொல்வதானது, எந்த அளவுக்கு அதிலே ஆபத்து இருக்கிறது என்பதைத்தான் என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏற்கனவேயே, ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான விவசாயிகள் சாகுபடி செய்வதிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார்கள்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அங்கத்தினர் அவர்கள் ராமேஸ்வரத்தில் விவசாயம் செய்யலாம் என்று சொன்னுர்கள். ராமேஸ்வரத்தில் எப்படி விவசாயம் செய்ய முடியும்.? அங்கேதான் ஒரே மணலாக இருக்கிறதே ?

SRI V. K. KOTHANDARAMAN : இப்போது இருக்கக்கூடியதே இருக்கவேண்டுமென்று சொன்னுல், அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்கலாம். சொந்தக்காரர்களைக்கொண்டோ அல்லது ஏற்கனவே விவசாயம் பண்ணிக்கொண்டிருந்த விவசாயியை அப்புறப்படுத்திவிட்டு, ஒரு லேபரை வைத்தே விவசாயம் பண்ணலாம் என்றளவுக்கு உரிமை கொடுக்கக்கூடிய நிலைமை இருக்குமானுல், ஏற்கனவே இதிலே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலைமை எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். சிறு நில சொந்தக்காரர்கள் வெளியிலே அரிசியை வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவடும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அந்த வகையிலே நான் சொல்லக்கூடிய திருத்தத்தை

ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மாதத்திலே 500 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடியவர்களுக்கு இந்த மாதிரி இருக்கக்கூடாது என்றுவது ஒரு திருத்தத்தை இப்போது ஏற்றுக்கொள்ளுங்கள். இந்தத் திருத்தத்தை அவர்கள் கூறுகிற வாதத்தையொட்டி ஒரு திருத்தமாகக் கொடுக்கிறேன். இதற்கு அவர்கள் தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI R. SRINIVASA IYER : அப்படிப்பட்டவர்கள் இன்கம் டாக்சுக்குள் வந்து விடுவார்களே. அப்போது அவர்கள் எப்படி சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ள முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த நிலைமை சட்டத்திலே ஏற்படுமானால், உண்மையிலேயே சிறிய நிலச்சுவான்தார்கள் என்று சொல்லக்கூடிய எத்தனை பேர்கள் பினாமி மாற்றங்கள் செய்திருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே இப்போதுள்ள சட்டம் விவசாயிகளை பாதிக்கக்கூடிய அளவிலே, அவர்களை வெளியேற்றக்கூடிய அளவிலே திட்டவட்டமாக தெரிந்துகொள்ள முடிகிறது. அந்தக் காரணத்தினால்தான், எத்தனை மைல்கள் விஸ்தீரணத்திற்குள் நிலம் உட்பட்டிருக்க வேண்டும், அதற்குமேல் இருந்தால் எந்த அளவுக்கு சாகுபடி செய்தால் நல்லது, எந்த அளவுக்குச் சாத்தியம் என்பதை யெல்லாம் நிர்ணயிக்க வேண்டும். அதைவிட்டு, நிலம் வைத்திருப்பவர்கள்தான் விவசாயம் செய்ய வேண்டுமென்று சொன்னால், நான் சொல்வேன், விவசாயம் தெரிந்தவர்கள்தான் விவசாயம் செய்யவேண்டும். அதேபோல் என்ஜினியரிங் படித்தவர்கள்தான் அந்தத் துறை மந்திரியாக இருக்க வேண்டும் அல்லது சட்டம் படித்தவர்கள்தான் சட்ட மந்திரியாக இருக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனக்கு நிலம் இருக்கிறதா, இல்லையா என்பது இப்போது ஆராய்ச்சி செய்யவேண்டிய விஷயமல்ல. அந்த அளவுக்குத் தைரியம் இருந்தால், நான் சேலஞ்ஜ் பண்ணுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member should not use the word ' challenge ' in the House.

SRI V. K. KOTHANDARAMAN 'சாலெஞ்ஜ்' பண்ணுவதிலே தவறு ஒன்றும் கிடையாது. (சிரிப்பு.)

DEPUTY SPEAKER : The hon. Member should not use the word ' challenge '.

SRI V. K. KOTHANDARAMAN : தஞ்சாவூர் ஜில்லாவிலேயே எல்லோருடைய கண்ணும் இருக்கிறது என்று ரொம்ப கவலைப்பட்டார் ஒரு அங்கத்தினர். தஞ்சாவூர் ஜில்லாவில் 100-க்கு 90 பேர்கள் ஹரிஜனங்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள். ஹரிஜன முன்னேற்றம் ஹரிஜனங்களுக்கு பாதுகாப்பு, விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்தி இப்படி யெல்லாம் சொல்லிக்கொண்டு, அந்த மக்கள் பாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமானால், அது ஹரிஜன மக்களுக்கு மிகப் பெரிய துரோகம் செய்யக்கூடிய அளவுக்குக்கொண்டுபோய்விடும். நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தம் அவர்களுக்கு ஓரளவுக்கு பாதுகாப்பாக இருக்கும்—முழுக்க முழுக்க பாதுகாப்பு ஏற்படாது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு ஓரளவுக்காவது பாதுகாப்பு இருக்கும் என்ற காரணத்தினால், நாங்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தத்தை தயவு செய்து கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 35-வது உப பிரிவிலே ' பெர்ஸனல் கல்டிவேஷன் ' என்பதற்கு விளக்கம் நல்ல முறையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில நண்பர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் சில மைல் தூரத்தில் இருக்கக்கூடியவர்கள்தான் நேரடி விவசாயம் செய்ய அருகதையுள்ளவர்கள் என்று கூறுகிறது. நண்பர் பழனிசுவாமி அவர்கள் சொன்னார்கள்

20th September 1961] [Sri P. G. Karuthiruman]

சென்னையிலிருந்து கோபியில் விவசாயம் செய்வது என்று. சென்னையிலிருந்து மட்டுமல்ல, டெல்லியிலிருந்துகூட விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் : டெலிபோன் மூலமாகக்கூட செய்யலாமே.) விவசாயத்தில் பழக்கப்பட்டவர்கள், விவசாயத்தை நேரிடையாக அறிந்தவர்கள் எங்கிருந்தாலும் விவசாயத்தை சிறப்பாகச் செய்ய முடியும். எனக்குத் தெரியும் இங்கு இருக்கக்கூடிய சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் கூட தினம் இங்கிருந்து கடிதம் எழுதியனுப்புகிறார்கள். இத்தனை ஏக்கருக்கு இத்தனை விதை நெல் இந்த வயலில் விடவேண்டும். இத்தனை அமோனியம் சல்பேட் போடவேண்டும், இத்தனை நாட்களில் நடவு நடவேண்டும் என்றெல்லாம் எழுதி சிறந்த முறையில் விவசாயம் நடத்துகிறார்கள், சிறப்பாக நடத்துகிறார்கள் என்று திட்டவட்டமாக சுட்டிக்காட்ட முடியும். அவர்கள் அனுபவம் இல்லாமல் அந்தக் காரியங்களைச் செய்ய முடியாது. ஏற்கனவே விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் வேறு தொழிலிலே இருந்தாலும்கூட, சிறப்பாக உயர்ந்த முறையில் விவசாயத்தை நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். 'பெர்ஸனல் கல்டிவேஷன்' என்றால், அவர்கள் அதில் எவ்வளவு தூரம் ஈடுபடுகிறார்கள், ஆலோசனை சொல்லுகிறார்கள் என்பதற்கெல்லாம் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முப்பது ஏகரா உச்ச வரம்பு என்று நாம் வைத்துவிட்டோம். விவசாயம் செய்வதிலே சொந்த பூமி உள்ளவர்கள் ஒரு ரகம், அவர்களை மிராசுதார்கள் என்று சொல்லலாம். சொந்த பூமி கொஞ்சம் வைத்துக்கொண்டு, குத்தகை சாகுபடிக்கும் கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் இன்னொரு ரகம். சொந்த பூமி இல்லாமல் குத்தகைக்கு மட்டும் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒரு தனி ரகம். இது அல்லாமல் நான்காம் ரகமாக விவசாயத்தில் ஈடுபடுகிறவர்கள் விவசாயத் தொழிலாளர்கள். உழுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சொன்னார்கள் என்று கூறுகிறார்கள். நிலத்தை உழுபவர்கள் யார், விவசாயத் தொழிலாளிகள்தான். உழுபவர்கள், குத்தகைக்காரர்கள் எல்லோருக்கும்தான் நிலம் சொந்தம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். விவசாயத் தொழிலில் ஆண்கள் மட்டுமா ஈடுபட்டிருக்கிறார்கள். வயலில் போய் பார்த்தால் நாற்று நடும் சமயத்தில்—ஒரு ஏகராவுக்கு 30 பேர் வேண்டும்—30 பேரும் பெண்கள். களை எடுக்கும்போது பார்த்தால் 20 பேர்கள் பெண்கள் இருப்பார்கள். அறுவடையின்போது பார்த்தால் 30 பேர்களில் 25 பேர்கள் பெண்கள் இருப்பார்கள். உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்றால் விவசாயத்தில் எந்த விதத்தில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு நிலம் சொந்தம். விவசாயத்தைப்பற்றி தெரியாத நிலையிலே அவர்கள் பேசுகிறார்கள். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : இப்படியிருந்தால் ஏன் அப்படி காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள் ?) விவசாயத்தில் எல்லோருக்கும் ஒரு பங்கு இருக்கிறது. சிறப்பான முறையிலே உற்பத்தியை பெருக்குவதற்கு திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பதைத்தான் பார்க்க வேண்டும். ஐந்து மைல், 6 மைல் தூரத்தில் இருக்க வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. பெண்களுக்கு நாம் எல்லா உரிமைகளும் கொடுத்திருக்கிறோம். ஐந்து மைலில் இருப்பவர்களைத்தான் கலியாணம் செய்து கொள்ளவேண்டும், 25 மைலில் இருப்பவர்களைக் கலியாணம் செய்து கொள்ளவேண்டாம் என்று கூறுகிறதுபோல் இருக்கிறது. அப்படி ஐந்து மைலுக்கு அப்பாலுள்ளவர்களை கலியாணம் செய்துகொண்டால் உரிமை கிடையாது என்று சொல்லுகிறார்கள். பதினைந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர் ஒருவர் 5 மைலுக்குள் கலியாணம் செய்துகொண்டால்தான் இந்த உரிமை இருக்கும். இருபத்தைந்து மைலில் கலியாணம் செய்து கொண்டால் அவர்கள் வேறு ஏதாவது தொழிலில்தான் ஈடுபடவேண்டும், விவசாயத்தை விட்டுவிடு என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஐந்து மைலுக்குள் கலியாணம் செய்துகொள்வதற்கு அவர்கள் கட்சி ஆதரவு கொடுத்து, விளம்பரப்படுத்தி வேண்டியதைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். இதில் இத்தனை மைலுக்குள் இருக்கவேண்டுமென்று சொல்லுவதில் அர்த்தமில்லை. 'ஆப்செண்டி லாண்டுலார்டிஸம்' என்றால் என்ன ? பூமியைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் விவசாயத் தொழிலே

தெரியாமல் ஒருவர் பட்டா வைத்துக்கொண்டு, வேறு ஏஜண்டு வைத்து சாகுபடி செய்தால் அதுதான் 'ஆப்சண்டி லாண்டுலார்டிஸம்'. இன்றைன்று நஞ்சையைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தோட்டச் சாகுபடி இருக்குமானால் அங்கு ஒரு துறை இருக்கும் மாடு கட்டுவதற்காக. அங்கு போய் சில தினங்களுக்கு பூமியின் சொந்தக்காரர் தங்கவேண்டியிருக்கும். தஞ்சாவூர் அயன் நஞ்சையையே நினைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, பாக்கி இருக்கக்கூடிய பூமியைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். மேட்டக்கால்கள், தோட்டக்கால்கள், தோப்பு துறவுகள் ஆகிய பூமிகளிலே கால் போடுவதற்கு, மாடு கட்டுவதற்கு இடம் கட்டாயம் இருக்கும். பூமிச் சொந்தக்காரர்கள் அங்கு ஒன்றிரண்டு நாட்கள் இருந்து காரியங்கள் செய்ய வேண்டிய நிலைமை இருக்கும். 50, 60 சத விகிதம் கிணற்றுப் பாசனம் இருக்கக்கூடிய இடங்களிலெல்லாம், எந்த இடத்தில் விவசாயம் நடக்கிறதோ, அந்த இடத்தில் அவர்களுடைய குடும்பத்தார்களோ, குடும்பத்தைச் சார்ந்தவர்களோ, பூமி சொந்தக்காரர்களோ இருப்பதற்கு வசதி நிச்சயம் இல்லாமல் இருக்காது. அப்படி இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. 'பெர்ஸனல் கல்டிவேஷன்' என்பதற்கான விளக்கத்தை ரொம்ப நல்ல முறையில் ஆலோசனை செய்து செலக்ட் கமிட்டியில் முடிவு செய்திருக்கிறார்கள். எலெக்ஷனில் 3 மைலுக்குள் போலிங் பூத் இருக்க வேண்டுமென்ற நினைப்பில், 3 மைலுக்குள் இருந்தால்தான் சொந்த சாகுபடி செய்பவர்களாக கருத முடியும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

விவசாயி என்ற முறையிலே, அறிவை திறம்பட உபயோகப்படுத்துவதுகூட 'பெர்ஸனல் கல்டிவேஷன்' தான். பரம்பரையாக ஒரு ரக விதை விதைத்து 30 கலம் விளைச்சல் கண்டால்கூட, பூமி சொந்தக்காரர் ஆராய்ச்சி சாலையில் இருக்கும்படியான ரகத்தை எல்லாம் பார்த்து டி.கே.எம். 60 நெல் விதையை விதைப்பதாக முடிவு செய்யலாம். அதனால் விளைச்சல் அதிகமாகலாம். அப்படி அறிவை உபயோகப்படுத்துவதும் 'பெர்ஸனல் கல்டிவேஷன்' தான். அம்மாதிரி ஆராய்ச்சியில் ஈடுபட்டால்தான் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு ஆக்கமும், ஊக்கமும் ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். 5 மைல், 3 மைல் என்று வைத்தால், புத்திகூட குறுகிய புத்தி ஆகிவிடும். பரவலாகப் போய் எல்லா இடங்களிலும் உள்ள ஆராய்ச்சியை ஒட்டி, காலத்திற்கு தகுந்தமாதிரி, முறைக்குத் தகுந்த மாதிரி விவசாயத்தை மாற்றி அமைப்பதுதான் நல்லது. ஆகவே, 3 மைல், 5 மைல் என்று வரம்பு கட்டாமல், அறிவு வளர்ச்சிக்கு இடம் இருக்க வேண்டும், ஆராய்ச்சிக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். ஆகவே, இந்தத் திருத்தம் நிச்சயம் இருக்கக்கூடாது, அதை நான் எதிர்க்கிறேன். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே இப்படி வந்தால் இவர்கள் இப்படிச் சொல்லுவார்கள், அதனால் சொல்லுகிறேன் என்ற நிலையிலே வள்ளுவர் கூறியிருக்கிறார். மேற்பார்வை பார்ப்பதுதான் மிகவும் சிறந்தது என்று சொல்லியிருக்கிறார்.

" ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு."

எல்லாவற்றையும்விட பூமியை மேற்பார்வையிடுவது சிறந்தது என்று கருத்துப்படச் சொல்லியிருக்கிறார்கள்.

மேலும்,

" செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்."

என்று கூறியிருக்கிறார். மேற்பார்வை பார்க்கக்கூடிய நிலையிலே திறமைசாலியாக இருப்பதுகூட 'பெர்ஸனல் கல்டிவேஷனில்' ஒரு பகுதி என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை எதிர்க்கிறேன் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

20th September 1961]

